# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விளம்பி ஐப்பசி - 1958 நவம்பர் [மணி 2


# கன்னியாகுமரி தேவஸ்வ நிர்வாகம்

'அண்டங்களெல்லாம் அணுவாக
அணுக்களெல்லாம்
அண்டங்களாகப் பெரிதாய்ச்
சிறிதாயினும்
அண்டங்களுள்ளும் புறம்புங்
கரியாயினும்
அண்டங்களின்ருள் துணை யென்பர்
அறிந்த நல்லோர்'
'அகிலாண்டகோடி ஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென
மறைபேசும்
ஆனந்தரூப மயிலே'

நீலத் திரைக்கடலோரத்திலே நித்தம் தவம்புரி குமரியன்னையின் திருவருள் நினைவாகக் கன்னியாகுமரி மாவட்டம் என விளங்கும் பகுதியும் திருநெல்வேலி மாவட்டத்துடன் சேர்க்கப்பெற்ற செங் கோட்டைப் பகுதியும் 1-11-56 முதல் இந்திய ராஜ்ய சிரமைப்புச் சட்டத்தின் படி சென்னை மாநிலத்துடன் இணைக்கப் பெற்றுள்ளன. கன்னியாகுமரி மாவட்டம் 646 சதுர மைல் பரப்புள்ளது. 4 தாலுக் காக்களையும் 64 கிராமத் தொகுதிகளையும் சுமார் 8½ லட்சம் மக்களையும் கொண்டது.

இப்பகுதி சுமார் 1000 ஆண்டு களுக்குமுன் பாண்டிய மன்னர் ஆட்சியில் இருந்ததென்பது பாண்டியன்கால்வாய் பாண்டியன்அணை என்ற பெயர்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. பின்னர் 19-ஆம் நூற்றுண்டில் ஆர்க்காட்டு நவாபு காலத்தில் இப்பகுதி திருவிதாங்கூர் அரச ருக்குக் கொடுக்கப்பட்டது. திப்பு சுல் தான் காலத்தில் 1805-ஆம் ஆண்டு திருவி தாங்கூர் அரசர் கிழக்கிந்தியக் கம்பெனி யாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஆண்டுதோறும் 8 லட்ச ரூபாய் பிரிட்டி ஷாருக்குக் கப்பம் கட்டி வந்தார். 15-8-1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்ற பின் 1-7-49-ல் திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யம் தனி மாகாணமாக அமைக்கப் பெற்று 1-11-56-ல் இந்திய ராஜ்ய சிர மைப்புச் சட்டத்தின்படி மொழிவாரி யாகக் கேரளம் சென்னை ராஜ்யங்கள் அமைக்கப் பெற்றபோது கன்னியாகுமரி

மனிதர்களின் வாழ்க்கைக் கட்டுப்பாடுகளை நான் நன்குணர்வேன். எனவே குறைகள் காணுமிடத்து குறைகளை அகற்ற முயலுவேனன்றி குறைபாடுடைய மக்களைப் புறக்கணிக்க மாட்டேன்; தண்டிக்கவுமாட்டேன். —மகாத்மா காந்தி.

மாவட்டமும் செங்கோட்டைப் பகுதியும் சென்னை மாகாணத்துடன் இணைக்கப் பெற்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் செங்கோட்டைப் பகுதியிலும் பல புராதனத் திருக்கோயில்கள் உள்ளன. 1812-ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனி நிர்வாகமும் சொத்துக்களும் இருந்தன. 1812-ஆம் ஆண்டு ராணி லட்சுமிபாய் காலத்தில் கோயிற் சொத்துக்கள் எல்லாம் அரசாங்க உடமைகளாக்கப்பட்டன. கோயில்களின் நிர்வாகத்துக்குவேண்டிய நிதி அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டது. ஆகவே இங்குள்ள கோயில்களுக்குத் தனியே சொத்துக்கள் கிடையாது. சுமார் 10 லட்ச ரூபாய் ஆலயங்களுக்காக ஒதுக்கப்பட்டது. நாளடைவில் இத்தொகை அதிகரிக்கப்பட்டு 1-11-56-ல் 51 லட்ச ரூபாய் திருவிதாங்கூர் ராஜ்யத்திலுள்ள கோயில்களுக்காக மூவர் கொண்ட ஒரு குழுவினரிடம் (Devaswom Board) ஒப்படைக்கப்பட்டது. அதில் 6 லட்ச ரூபாய் திருவனந்தபுரத்திலுள்ள ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயிலுக்காக அரசரிடம் கொடுத்தது போக மீதி 45 லட்ச ரூபாய் மற்றக் கோயில்களுக்கு உபயோகிக்கப்பட்டது. இந்தக் குழுவினரில் ஒருவர் அரசராலும் ஒருவர் சட்டசபை அங்கத்தினருள் இந்துக்களாலும் மூன்றுமவர் மந்திரி சபையிலுள்ள இந்து அமைச்சர்களாலும் நியமிக்கப்பட்டு ஆலய நிர்வாகத்துக்கென நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் கீழ் (Travancore-Cochin Hindu Religious Institutions Act XV of 1950) பணியாற்றி வந்தனர். சென்னை மாகாணத்துக்கு மாற்றப்பட்ட பகுதிகளில் உள்ள கோயில்களின் பராமரிப்புக்கு வேண்டிய தொகை $13\frac{1}{2}$ லட்சமும் 1-11-56 முதல் சென்னை அரசாங்க நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. மத்திய அரசாங்க அங்கீகாரத்தைப் பெற்று புதிய சட்டம் இயற்றப்படும்வரை பழைய சட்டத்தை யனுசரித்துத் தற்காலிகமாக விதிகள் அமுலில் இருந்து வருகின்றன. சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளரைத் தற்காலிகமாக தேவஸ்வக் குழுவினர் பொறுப்பை ஏற்று பணியாற்றி வரும்படி அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கின்றனர். அரசாங்க நிதியிலிருந்து ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகையுடன் மக்கள் கொடுக்கும் காணிக்கைகள், உபயங்கள், உண்டியல் முதலிய வருமானங்களும் ஆலயங்களின் நிர்வாகத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. தேவஸ்வக் குழுவின் நேர்மையான நிர்வாகத்திலிருக்கும் கோயில்கள் தவிர தனிச் சொத்துக்கள் உள்ள கிராமக் கோயில்கள் சில தேவஸ்வ நிர்வாகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகம் சரிவர நடத்தப் பெருமலிருந்து கிராம மக்கள் புகார் செய்தால் விசாரணை செய்து நிர்வாகத்தை தேவஸ்வக் குழு ஏற்று நடத்த சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி செங்கோட்டைப் பகுதிகளில் ஆலயங்களின் நிர்வாகம் பின்வருமாறு அமைந்திருக்கிறது.

1. சென்னையில் ஆணையாளர் (தேவஸ்வ குழுவினர் பொறுப்புகளை ஏற்று நடத்துபவர்.)

2. சுசீந்திரத்தில் உதவி ஆணையாளர் (Assistant Commisioner.)

3. ஐந்து தொகுதிகளில் ஒவ்வொன்

எவரேனும் என்னைச் சுட்டு வீழ்த்த எண்ணிணுல் அவன் கண்ணுக்குத் தோன்றிய குற்றமுள்ள காந்தியைத்தான் கொல்ல முடியுமே யொழிய உண்மை காந்தியை அழிக்க முடியாது.

—மகாத்மா காந்தி.

றிலும் ஒரு பார்வையாளர் (Superintendent.)

(i) நாகர்கோவில்
(ii) பூதப்பாண்டி
(iii) பத்மநாபபுரம்
(iv) குழித்துறை
(v) செங்கோட்டை

4. ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள கோயில்களுக்கு அவற்றின் தகுதிக்கேற்றவாறு மானேஜர்கள், ஸ்ரீகாரியம், சந்திரம் என்ற நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப் பெற்றுள்ளனர். திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு நாகர்கோயில் குழித்துறை என்ற இடங்களில் செக்ஷன் ஆபிஸர் களும் இவர்களை மேற்பார்க்க ஒரு மராமத்து ஆபீஸரும் இருக்கின்றனர். திருவாபரணங்கள், பாத்திரங்கள் இதர விலை மதிப்புள்ள சாமான்களைச் சரிபார்க்க ஒரு திருவாபரண ஆபீஸரும் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஒரு தணிக்கை ஆபீஸரும் இருக்கின்றனர். ஆண்டுக்கொரு முறை எல்லாக் கணக்குகளையும் தணிக்கை செய்ய லோக்கல் பண்டு தணிக்கையாளர் அலுவலகத்திலிருந்து கண்காணிப்பாளர் சென்னை உயர்நீதி மன்றத்தினரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**ஒவ்வொரு தொகுதியிலுள்ள கோயில்கள் பின்வருமாறு:**

| தொகுதி | பெரிய கோயில்கள் | சிறு கோயில்கள் | மிகச்சிறிய கோயில்கள் | சொத்துள்ள தனிக்கோயில்கள் |
|---|---|---|---|---|
| நாகர் கோயில் | 15 | 34 | 43 | 3 |
| பூதப்பாண்டி | 8 | 22 | 36 | 6 |
| பத்மநாபபுரம் | 16 | 32 | 66 | 2 |
| குழித்துறை | 8 | 29 | 57 | 1 |
| செங்கோட்டை | 7 | 12 | 67 | 7 |

பூசைக்குப் போதிய வருமானமில்லாத சில கிராமக் கோயில்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. இப்போது 42 கோயில்கள் உதவி பெறுகின்றன.

வேழிமலை குமாரர் கோயிலில் ஒரு யானை யிருக்கிறது. தேவஸ்வம் நிதியிலிருந்து 3 பாடசாலைகள் 2 நூல்நிலையங்கள் நடத்தப்படுகின்றன. மத பாடசாலைகளுக்கும் திருவிழாக்களை யொட்டி நடத்தப்பெறும் சமய சம்பந்தமான மகாநாடுகளுக்கும் பொருளுதவி செய்யப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள சில முக்கியமான ஆலயங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். இவைகளைப் பற்றியும் இதர சில பிரபல கோயில்களைப் பற்றியும் பின்னர் தனிக்கட்டுரைகள் வெளியிடப் பெறும்.

**கன்னியாகுமரி பகவதியம்மன் கோயில்:** 'முக்கடலும் கூடும் இக் குமரித்துறை ஒரு ஒப்பு உவமை யில்லாத அரும் பெருங் காட்சி. இங்கு துறைமுகமில்லை. குமரி யன்னையைப் போன்று இம் முக்கடல்

நான் பூர்ணத்துவம் அடைந்துவிடில் யான் சொல்வதை எல்லோரும் கடைப்பிடிப்பார்கள். அப்படிப்பட்ட பூர்ணத்துவத்தை சேவையினல் அடைய முயலுகின்றேன். —மகாத்மா காந்தி.

நீரும் கன்னியாக வேவிளங்குகிறது' என்று நம் தேசிய பிதா மகாத்மா காந்தி போற்றிப் புகழ்ந்த புண்ணியத்தலம். மூர்த்தி தீர்த்தத்தாலும் தனிச்சிறப்புடையது. அம்பிகையின் வடிவ அழகைக் காணக் கண்கள் கோடி வேண்டும். 'கங்கையாடிலென் குமரியாடிலென்' என்ற அப்பர் தேவாரத்தால் இப் புண்ணிய தீர்த்தம் காசி கங்கையை யொத்த பெரும் புகழ் படைத்ததென அறிகிறோம். மக்கள் உய்வதற்கு வழி தவமே எனக் காட்டவே தான் தவக்கோலம் பூண்டு கன்னியாய் விளங்குகிருள். 'முன்னேற்ற நங்கை' என்ற பெயருடன் அன்னை கோயில் ஒன்று சுசீந்திரத்தில் உள்ளது. இந்த நங்கையின் உற்சவ விக்கிரகமும், வேழிமலைக்குமரன் விக்கிரகமும், பத்மநாபபுரத்திலுள்ள சரஸ்வதியம்மன் விக்கிரகமும் யானைகளில் ஏற்றப்பட்டு ஆண்டுதோறும் நவராத்திரி விழாவிற்குத் திருவனந்தபுரத்துக்கு எடுத்துச் செல்லப்படும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. இவ்வைபவம் 1-11-56-க்குப் பின்பும் தொடர்ந்து நடந்து வருகிறது. இனியும் நடந்துவரும். கன்னியாகுமரியில் புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவும் வைகாசி மாதம் திருவிழாவும் சிறப்பாக நடைபெறும்.

முக்கடலும் கூடி முழங்கும் தீர்த்தக் கட்டத்தில் நீராடும் மக்கள் வசதிக்காக மின்சார விளக்குகளும் உடை மாற்ற அறைகளும் அமைக்கப் பெற்றுள்ளன. யாத்திரிகர் தங்குவதற்கு நல்ல சத்திரங்களும் வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு நூல் நிலையமும் நிறுவப்பெற்றுள்ளது.

**ஸ்ரீதாணு மாலயப் பெருமாள் ஆலயம், சுசீந்திரம்:** இது சுமார் 400 அடி நீளம் 233 அடி அகலம் உள்ள பெருங்கோயில். கோபுரம் 7 நிலைகள் கொண்டது. சுமார் 134 அடி உயரம். கோபுரத்தின் உட்சுவர்களில் புராணப்படங்கள் தீட்டப்பெற்றுள்ளன. ஆலயத்தினுள் மண்டபங்களில் பல அரிய சிற்பங்களும் இசைத் தூண்களும் கல்வெட்டுக்களும் உள்ளன. மூர்த்திகள் எல்லாம் மிகவும் அழகு பொருந்திய திருவுருவங்கள். நீலகண்ட விநாயகர், சாஸ்தா, இராமர், ஆறுமுகன், அறம் வளர்த்த நாயகி, ஆஞ்சநேயர், நந்தி, கருடன் உருவங்கள் தனிச் சிறப்புடையன. கொன்றையடியில் 3 லிங்கங்கள் ஒன்றின் மேலொன்ருக பிரம்ம விஷ்ணு சிவதத்துவங்களைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. இதனுலேயே இக்கோயிலுக்கு தாணு மால் அயபெருமாள் கோயில்என்ற பெயர் வழங்குகிறது. இந்திரன் பூசை செய்து சாப நிவர்த்தி பெற்றதால் தலத்துக்குச் சுசீந்திரம் என்று பெயர். கொன்றையடி நாதர் பூசைக்குப் பின்னர் தாணு லிங்கத்துக்கும் நின்ற கோலத்திலிருக்கும் விஷ்ணு மூர்த்திக்கும் பூசை நடைபெறும். விஷ்ணு மூல விக்கிரகம் கடுசக்கரையில் செய்யப்பட்டது. ஆகையால் அபிஷேகம் கிடையாது. திருக்குளமும் நான்கு புறமும் கற்படிகளுடன் அழகாக அமைந்துள்ளது. மார்கழித் திருவாதிரையை யொட்டி நடைபெறும் ரதோத்சவம் இப் பகுதிக்கே மிகவும் முக்கியமான திருவிழா. சித்திரைத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறும்.

**ஸ்ரீ நாகராஜா கோயில் நாகர்கோயில்:** சுமார் 500 ஆண்டுகளுக்குமுன் இப்பகுதியை ஆண்டுவந்த களக்காட்டு அரசன் சர்ப்ப சாபமேற்பட்டுக் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டுக் பரம்புகாடு நம்பூதிரிகள்

---

என்னுடைய தத்துவம் ஏதாவது ஒன்றுண்டேல் அது, எவனுடைய உண்மைப் போக்கிற்கும் எவராலும் தீங்கு விளைவிக்க முடியாது என்பதே. அப்படி தீங்கு விளையின் அது போக்கின் குற்றமோ அல்லது அதைக் கையாள்பவரது உண்மையற்ற பண்போ ஆகும். —மகாத்மா காந்தி.

மூலம் சர்ப்பராஜனுன வாசுகிக்காக இக் கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. கர்ப்பக்கிரகத்தில் எப்போதும் நீர் ஊறிக்கொண்டிருக்கிறது. இங்குள்ள புற்றுமண் பிரசாதமாக வழங்கப்படுகிறது. தை மாதம் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

**வேழிமலை குமாரர் கோயில்:** நாகர்கோயிலிலிருந்து சுமார் 10 மைல் தூரத்திலுள்ளது. ஒரு குன்றின்மேல் கட்டப்பட்டுள்ளது. வள்ளி திருமணம் இங்கு நடந்ததாக நம்பப்படுகிறது. தஞ்சாவூரிலுள்ள சுவாமிமலையே திருவேரகமென்று அருணகிரியார் பாடியுள்ளார். ஆனுல் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் 'புலராக் காழகம் புலர உடீஇ உச்சிக் கூப்பிய கையினர்' என்று ஈர உடையுடன் ஆலயம் சென்று வழிபடும் வழக்கம் இப்பகுதியிலிருப்பதால் இதுவே ஏரகம் என்பாருமுளர். முருகனும் வள்ளியம்மையும் சேர்ந்து சுமார் 8½ அடி 6 அடி உயரமுள்ள அழகிய உருவங்களாக மூலத்தானத்தில் காட்சியளிக்கின்றனர். பங்குனி உத்தரத்தில் வள்ளிதிருமணம் இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. ஆண்டுதோறும் திருவிழாவையொட்டி சமய சம்பந்தமான மகாநாடு சிறப்பாக நடைபெறுகிறது. வைகாசி விசாகத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறும்.

**திருவாழ்மார்பன் கோயில், திருப்பதிசாரம்:** இது 108 திருப்பதிகளுள் திருவண்பரிசாரம் என்று விளங்குகிறது. நாகர்கோயிலிலிருந்து வடகிழக்கே சுமார் 3 மைல் தூரத்திலுள்ளது. ஆழ்வார்களுள் நடுநாயகமாக விளங்கும் நம்மாழ்வாரின் தாயார் உடைய நங்கையார் அவதாரத் தலமாகையால் நம்மாழ்வாரும் இங்கேதான் அவதரித்திருக்க வேண்டும் என்பாருமுளர். மூலமூர்த்தி வீற்றிருந்த திருக்கோலம். இடது பக்கத்தில் லட்சுமியிருக்கிருள். தாயார் பெயர் செங்கமலவல்லித் தாயார். லட்சுமி தீர்த்தமும் அரசமரமும் பிரசித்தி பெற்றவை. சித்திரைத் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

**ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கோயில், திருவட்டாறு:** இதுவும் 108 திருப்பதிகளுள் ஒன்று. நாகர்கோயிலிலிருந்து சுமார் 18 மைலிலுள்ளது. மேற்கே திருமுக மண்டலம். புஜங்க சயனம். தாயார் பெயர் மரகதவல்லித் தாயார். இராம தீர்த்தம் புனிதமானது. மூன்று பக்கங்களிலும் நதி சூழ்ந்திருப்பதால் திருவட்டாறு என்று பெயர் என்பர். திரு ஆருட்டு திருவாட்டாருயிற்றென் போருமுளர். திருவனந்தபுரத்திலிருப்பதுபோல் ஒரு ஒற்றைக்கல் மண்டபமும் பிற அம்சங்களுமுள்ளன. ஆனுல் கோயில் அதைவிட அளவில் சிறியது. ஐப்பசி பங்குனி மாதங்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

பூதப் பாண்டியில் உள்ள ஸ்ரீ பூதலிங்க சுவாமிகோயில், திருமலை முதலிய 12 சிவாலயங்கள், குழித்துறையிலுள்ள திரிமூர்த்தி கோயில், கேரளபுரம், தாழக்குடி திருவிதாங்கோடு, மண்டைக்காடு, பறக்கை, மருங்கூர் நீலகண்ட சுவாமி கோயில், பத்மநாபபுரம், ஆரல்வாய்மொழி ஆய்க்குடி முதலிய பல தலங்களிலுள்ள திருக்கோயில்களும் பார்க்கவேண்டிய புண்ணிய க்ஷேத்திரங்களே. கேரளபுரம் கோயிலிலுள்ள விநாயகர் 6 மாதம்

---

உலகில் பெருமையுடன் வாழ வேண்டுமெனின், பிறர் சொல்வதைப் புறக்கணிக்க முடியாத நிலையில் ஆமோதித்து வாழ வேண்டும்.
—மகாத்மா காந்தி.

வெளுப்பாகவும் 6 மாதம் கறுப்பாகவும் காட்சியளிக்கிறார்.

இப்பகுதியிலுள்ள பல ஆலயங்களில் சிவவிஷ்ணு கோயில்கள் சேர்ந்தே யிருப்பதைக் காணலாம். அம்பிகை வழிபாடும் சாஸ்தா வழிபாடும் சிற்சில இடங்களில் முருகன் வழிபாடும் சிறந்து விளங்குகின்றன. குழித்துறைச்சித்திரால் என்ற கோயிலில் புத்த விக்கிரகமும் இருக்கிறது. எல்லாக்கோயில்களிலுமே தந்திர முறையில் பூசைகள் நடைபெறுகின்றன. வழிபாட்டுக்கு வரும் மக்கள் நீராடித் தூய ஆடை யணிந்து இடுப்புக்குமேல் சட்டைகள் அணியாமல் சமயச் சின்னங்களைக் கூசாமல் அணிந்து கொண்டு வருகிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் சந்நிதிகளில் மின்சார விளக்குகள் போடப்படுவதில்லை.

‘பலபலவாய்ச் சொல்லு
நெறிஎல்லாஞ் சொல்லப்
பட்டதொரு பொருளினை
யாம்பணிதல் செய்வாம்’

வாழ்க திருநெறி! வாழ்க உலகமெல்லாம்!!

**அ. உத்தண்டராமன்**
2—11—58

## ஸ்ரீ வாஞ்சியத்தில் வார வழிபாடு

1958-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ம் தேதி நன்னிலம் தாலூக்கா ஸ்ரீ வாஞ்சியம், ஸ்ரீ வாஞ்சிநாத ஸ்வாமி தேவாலயத்தில் கமிஷனர் அவர்கள் உத்திரவை அனுசரித்து ஷை தேவாலய நிர்வாக அதிகாரி திரு. நாகசுப்ரமண்யம் அவர்களால் ஷை தேவாலய தர்மகர்த்தாக்கள் திரு. கிருஷ்ண முதலியார், திரு. ராஜாபாதர் உடையார், நன்னிலம் ரேஞ்சு H. R. & C. E. இன்ஸ்பெக்டர் திரு. நாகராஜன், ஸ்ரீ வாஞ்சியம் உயர்தர தொடக்கப்பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும், மற்ற பெரியோர்கள், ஆஸ்திகர்கள் சுமார் 200 பேர்கள் முன்னிலையில், வார வழிபாடு விழா துவக்கப்பட்டு, நன்னிலம் தமிழ்ப்பண்டிதர் திரு. சுவாமிநாத முதலியார் அவர்களால் இறை வழிபாடு என்பதைப் பற்றி விரிவாயும், உருக்கமாயும் பேசப்பட்டது. தேவஸ்தான ஓதுவாமூர்த்தியின் இனிய தேவாரத்துடன் ‘வார வழிபாடு’ இனிது முடிவுற்றது.

# அறநிலைப் பாதுகாப்புத்துறை நிர்வாக அமைப்பு

1-11-56ல் இந்திய ராஜ்ய சீரமைப்புச் சட்டத்தின்படி திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்திலிருந்து சென்னை மாநிலத்துடன் இணைக்கப் பெற்ற கன்னியாகுமரி மாவட்டம் செங்கோட்டைப் பகுதிகளில் உள்ள ஆலயங்களின் நிர்வாக அமைப்புப் பற்றிய குறிப்பு தனியே எழுதப் பெற்றுள்ளது. சென்னை மாகாணத்தில் இதர மாவட்டங்களில் உள்ள கோயில்களுக்கெல்லாம் தனித்தனியே சொத்துக்கள் உள்ளன. அவற்றை நம் முன்னோர்கள் கட்டிவைத்ததோடல்லாமல் நித்திய நைமித்திக பூசைகளுக்கு வேண்டிய சொத்துக்களையும் ஒதுக்கி வைத்தனர். சேர சோழ பாண்டிய மன்னர்களும் பல்லவ விஜயநகர சாளுக்கிய அரசர்களும் கட்டிய கோயில்களில் அரிய சிற்பவேலைப் பாடுகளைக் காணலாம். கிராமங்களில் பொது நலனுக்காகப் பல பெருமக்கள் திருக்கோயில்கள் கட்டி இனமாகச்சொத்துக்களும் ஒதுக்கி வைத்தார்கள்.

பிரிட்டிஷார் ஆதிக்கத்துக்குப் பின் 1817–ம் ஆண்டு 7-வது ரெகுலேஷன் என்ற சட்டத்தின்படி கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆலயங்களின் நிர்வாகப் பொறுப்பை ரெவின்யூ போர்டார் மேற்பார்வையில் கலெக்டர்களிடம் ஒப்புவித்தனர். இவர்கள் நேரடியாகச் சில கோயில்களையும் நிர்வகித்து வந்தனர். 1841-ம் ஆண்டு கம்பெனியார் உத்தரவின் பேரில் ஆலயங்களின் நிர்வாகப் பொறுப்பை ஆட்சியாளர் கைவிட்டனர். ஆனால் கிராமங்களில் கோயில்கள் சரிவரக் கவனிக்கப்படாமல் பல தர்மகர்த்தர்களால் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாகப் புகார்கள் செய்யப்பட்டதன் காரணமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 1863-ம் ஆண்டு 20-ம் சட்டத்தின்படி கோயிற் கமிட்டிகளை நியமித்தனர். இந்தக்கோயிற்கமிட்டியார் நியமித்த தர்மகர்த்தர்களும், பரம்பரை உரிமை பெற்றவர்கள் இருந்த இடங்களில் அந்தப் பரம்பரை தர்மகர்த்தர்களும் கோயில்களின் நிர்வாகத்தைக் கவனித்து வந்தனர். இந்த அமைப்பிலும் நிலைமை சீராக இல்லை. 1870-ம் ஆண்டிலிருந்து 1902-ம் ஆண்டுவரை பல மசோதாக்கள் கொண்டு வரப்பட்டும் ஒன்றும் சட்டமாக்கப்படவில்லை. 1920-ஆண்டில் டில்லி சட்ட சபையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது (Religious and charitable trusts Act 1920). இந்தச் சட்டத்தாலும் நிலைமையில் மாறுதல் ஏற்படவில்லை.

1925-ம் ஆண்டு பனகால் அரசர் சென்னை முதலமைச்சரா யிருந்தபோது ஒரு சட்டமியற்றப்பட்டது (The Madras Hindu Religious Endowments Act I of 1925). சில ஐயப்பாடுகள் காரணமாக இது சரிவர அமுலுக்கு வராமலிருந்து Madras Hindu Religious Endoments Act II of 1927 என்ற சீர்திருத்தப் பெற்ற சட்டம் நிறைவேறிய பிறகு 1927-ம் ஆண்டிலிருந்து திருக்கோயில்கள் அரசாங்க மேற்பார்வை

---

கொடுத்த வாக்கை எவனொருவன் காப்பாற்றவில்லையோ அவன் என் உயிரையே அல்லற்படுத்துபவனாகிறான். ஒருவன் வாக்கைக் காப்பாற்ற என் உயிரையே யான் தியாகம் செய்யத் துணிகிறேன்.

—மகாத்மா காந்தி.

யில் இந்துமத பரிபாலன குழுவினரால் நிர்வகிக்கப்பட்டன. நிர்வாகச் செலவுக்காக ஆலயங்களின் வருமானத்தில் 3சத விகிதமும் கணக்குகள் தணிக்கை செய்வதற்காக 1½சத விகிதமும் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. 200 ரூபாய்க்குமேல் வருட வருமானமுள்ள கோயில்களுக்கு நிர்வாகக் கட்டணமும் 1000 ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கோயில்களுக்கு தணிக்கைக் கட்டணமும் சேர்த்து வசூலிக்கப்பட்டன. மேற்பார்வை போதிய அளவு இல்லாததால் நிலைமை சீரடையவில்லை. 1944-ம் ஆண்டிலும் (Madras Act V of 1944) 1946ம் ஆண்டிலும் (Madras Act X of 1946) சில சீர்திருத்தங்கள் செய்யப் பெற்றன. உதவி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பெற்றனர். இப்போது சுமார் 330 நிர்வாக அதிகாரிகள் இருக்கின்றனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு 1951-ம் ஆண்டு (Madras Hindu Religious & Charitable Endowments Administration Act XIX of 1951) சென்னை இந்துமத அறநிலைய நிர்வாகச் சட்டம் இயற்றப்பட்டது. பரிபாலனக் குழுவுக்கு பதிலாக ஆணையாளர் (Commissioner) நியமிக்கப் பெற்று நிர்வாகப் பொறுப்பு ஊழியர்கள் அரசாங்க அலுவலர்களாக்கப்பட்டனர். ஒரு தனி இலாகா நிறுவப் பெற்றது. வருட வருமானம் 20000 ரூபாய்க்குக் குறைவாக உள்ள கோயில்களுக்கு தர்மகர்த்தர்கள் நியமிப்பது, கணக்குகளைப் பரிசிலனை செய்வது முதலிய அதிகாரங்கள் பிரதேச குழுவினர் ஐவர் (Area Committees) வசம் ஒப்புவிக்கப்பட்டது. இந்தக் குழுவினர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுகிறார்கள். வருட வருமானம் 20000 ரூபாய்க்கு மேற்பட்ட கோயில்களுக்கு ஆணையாளர் தர்மகர்த்தாக்களை நியமனம் செய்வார். நிர்வாகப் பொறுப்பு துணை ஆணையாளரிடம் (Deputy Commissioner) ஒப்புவிக்கப்பட்டது. பிரதேசக்குழுவுக்கு உதவி ஆணையாளர் (Assistant Commissioner) தலைமை வகிப்பார். ஆனால் அவருக்கு ஓட்டுரிமை கிடையாது. உதவியாணையாளரின் கீழ் கண்காணிப்பாளர்கள் (Inspectors)கோயில்களின் நிர்வாகத்தைப் பார்வையிடுவார்கள். தக்க வருமானமுள்ள கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். சட்டத்தில் 1954-இலும் (Madras Act XXVII of 1954) 1955 - இலும் (Madras Act IX of 1956) சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இன்னும் சில சீர்திருத்தங்கள் அரசாங்கத்தார் கவனத்திலிருக்கின்றன. நிர்வாகக் கட்டணம் இப்போது 3 முதல் 5 சதவிகிதம் வரை தரவாரியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

வருட வருமானம் 200 ரூபாய்க்கு மேற்பட்ட நிலையங்கள் சுமார் 7700-க்கு அதிகமாகவே யிருக்கின்றன. ரூபாய் 200க்குக் கீழ்ப்பட்ட வருமானமுள்ள சிறு கோயில்கள் இந்த இலாகாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டவை சுமார் 5000 இருக்கின்றன. 1000 ரூபாய்க்கு மேற்பட்ட வருட வருமானமுள்ள நிலையங்களின் கணக்குகள் தலத்தாபன தணிக்கையாளர் (Examiner of Local Fund Accounts) மூலமாகத் தணிக்கை செய்யப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60,000க்கு மேற்பட்ட வருமானமுள்ள அற நிலையங்கள் 54-ம், ரூ. 20000க்குமேல் ரூ. 60,000க்குட்பட்ட வருமானம் உள்ளவை 108-ம், ரூ. 10,000க்குமேல் ரூ. 20,000க்குட்பட்ட வருமானம் உள்ளவை 45-ம், ரூ. 10,000க்குக் குறைவான வருமானம் உள்ளவை 7500-ம் அற நிலையப் பாதுகாப்பு இலாகா மேற்பார்வையிலிருக்கின்றன.

## இன்றைய நிர்வாக அமைப்புப் பின்வருமாறு உள்ளது.

ஆணையர் (சென்னை)

- துணையாணையர் (சென்னை)
  - உதவியாணையர் (பிரதேசக் குழு)
    - (1) சென்னை
    - (2) காஞ்சிபுரம்
    - (3) கடலூர்
    - (4) சேலம்
    - (5) திருச்சிராப்பள்ளி
    - (6) கோயம்புத்தூர்
- நகைகளைத் தணிக்கை செய்யும் உதவி ஆணையர் (Verification Officer)
- துணையாணையர் (தஞ்சாவூர்)
  - உதவி ஆணையர் (பிரதேசக் குழு)
    - (1) மேலத்தஞ்சை (தஞ்சாவூர்)
    - (2) கீழத்தஞ்சை (நாகப்பட்டினம்)
    - (3) மதுரை
    - (4) இராமனாதபுரம்
    - (5) திருநெல்வேலி

## உதவியாணையர் கீழ்உள்ள கண்காணிப்பாளர்கள் (Inspectors)

**சென்னை**
1. வடசென்னை
2. தென் சென்னை
3. சைதாப்பேட்டை

**காஞ்சிபுரம்**
1. காஞ்சிபுரம்
2. ஸ்ரீபெரும்புதூர்
3. வேலூர்
4. திருவண்ணாமலை

**கடலூர்**
1. கடலூர்
2. விழுப்புரம்
3. சிதம்பரம்

**திருச்சிராப்பள்ளி**
1. திருச்சிராப்பள்ளி
2. லால்குடி
3. கரூர் (குளித்தலை)
4. புதுக்கோட்டை
5. முசிறி
6. அரியலூர்

**சேலம்**
1. சேலம்
2. தர்மபுரி
3. நாமக்கல்
4. ஈரோடு

**கோயம்புத்தூர்—நீலகிரி**
1. கோயம்புத்தூர்
2. பொள்ளாச்சி
3. தாராபுரம்

**மேலத்தஞ்சை**
1. கும்பகோணம்
2. திருவிடைமருதூர்
3. தஞ்சாவூர்
4. பட்டுக்கோட்டை
5. பாபநாசம்
6. மன்னார்குடி

**கீழத்தஞ்சை**
1. நாகப்பட்டினம்
2. திருவாரூர்
3. திருத்துறைப்பூண்டி
4. நன்னிலம்
5. மாயவரம்
6. சீர்காழி

**மதுரை**
1. மதுரை
2. திண்டுக்கல்
3. பெரியகுளம்

**இராமநாதபுரம்**
1. சிவகங்கை
2. காரைக்குடி
3. பரமக்குடி
4. ஸ்ரீவில்லிபுத்தூர்

**திருநெல்வேலி**
1. திருநெல்வேலி
2. தூத்துக்குடி
3. திருச்செந்தூர்
4. நாங்குநேரி
5. அம்பாசமுத்திரம்
6. தென்காசி

# சைவம்

[திரு. K. வச்சிரவேலு முதலியார். B.A., L.T.]

(முன் தொடர்ச்சி)

இரு மொழிக்கும் முதலாசிரியர் சிவ பிரானே ஆவார் எனக்கொள்ளுதல் தமிழ் மரபு. இம்மரபைச் சிவஞான முனிவர்

"இருமொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்" எனக் காஞ்சிப்புராணத்துக் குறிப்பித் தருளினர்; இம்மரபு பற்றியே கம்பரும் அகத்தியனுரைக் குறிக்குமிடத்து

"நிழற்பொலி கணிச்சிமணி
நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள்
தந்ததமிழ் தந்தான்"

எனக் கூறினர்.

இனி, வட மொழியில் மிகப் பழமை வாய்ந்த பாடல்கள் இருக்கு வேதத்து உள்ளவையே ஆகும். அவற்றுள், முதல் மண்டிலம் 164=ஆம் சூக்தத்துவரும் 46-ஆம் மந்திரம்,

"சத்தாகிய ஒன்றையே (ஒருவனையே) இந்திரன் என, மித்திரன் என, வருணன் என, அக்கி என, யமன் என, மாதரிச்சுவான் (வாயு) என, நல்ல சிறகுள்ள் திப்பிய கருடன் என அறிஞர்கள் பலவகையாகக் கூறுகின்றனர்," எனப் படிக்கின்றது.

இதனுல் ஒரு பெரிய உண்மையை நாம் அறிய முடிகின்றது. 'வேத முனிவர்கள் முற்பட்ட காலங்களில், இயற்கையில் விளங்கித் தோன்றிய வியத்தகு ஆற்றல்களைத் தனித் தனிப் பல்வேறு தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தனர்; பிற்காலத்து, அவ்வாற்றல்களை, வேறு வேருகப் பிரித்துக் காணுமல், இணைத்து உணர்ந்து, அவற்றின் மூலத்தை ஒரு முழுமுதற் செம்பொருளாகக் கொண்டு வழிபடுவாராயினர் என்பது.

அவ்வாறு உணர்ந்த முதற்பொருளை ஏகம் எனவும் சத் எனவும் குறித்து வந்தனர். ஏகம் என்பது ஒன்று, ஒருவன், எனப் பொருள்படும். சத்(து) என்பது உள்ளது எனப் பொருள்பட்டு, செம்பொருள், மாறுதலில்லாத பொருள் என்னும் கருத்தைத்தெரிவிக்கும்.

நாம் இயற்கை என வழங்கும் இவ்வுலகம் எண்ணிறந்த மாறுதல்களுக்கு உறையுளாய் உள்ளது; பன்மையுணர்வைப் பயப்பதாகவும் உள்ளது. ஆகலின், இதன் கண் ஒழுங்கும் முறை பிறழா நிகழ்ச்சியும் உளவாதற்குக் காரணமாயுள்ள முதற்பொருள் ஒன்றேயாய், மாறுதலில்லதாய் நிற்பதென்றல் பொருத்தம் அல்லவா? இதனை வேத முனிவர்கள் ஒரு நெறிய மனம் வைத்து உணர்ந்து வெளியிட்டருளினர்கள். இதனுல், வேதங்களிலும் உபநிடதங்களிலும் ஏகம், சத்(து) என்னும் சொற்களின் பிரயோகம் வருகிற இடங்களில் எல்லாம் முதற்பொருளின் சமட்டி நிலை குறிக்கப்படும் என்பது உணரப்படும். சமட்டி என்பது முழுமுதல், இணைந்தது எனப் பொருள்படும். இதற்கு எதிர்ச்சொல் வியட்டி என்பது. வியட்டி—பிரிவு நிலை, ஒரு பொருளின் ஏகதேசம். எடுத்துக் காட்டாக, "ஏ நல்லோய்! சத்தாகிய ஒன்றே முதற் கண் (உலகத்தோற்றத்தின்

முன்) அத்விதீயமாய் இருந்தது" எனச் சாந்தோக்கிய உப நிடதத்தில் வரும் அவ்விரு சொற்களும் பரம்பொருள் வரையறை உணர்த்தி வருதல் அறியத்தக்கது.

இனி, இவ்வடையாளங்கொண்டு நோக்கும்போது, சிவபிரானே சமட்டிரூப முழுமுதலாக வேதங்களினும் உப நிடதங்களினும் கூறப்படுகின்றார் என்பது விளங்கும். எடுத்துக் காட்டாகச் சுவேதா சுவதா உப நிடதத்தில் கடவுளின் முழுமுதற்றன்மையைக் கூறுமிடத்து,

"ஒருவன் உருத்திரனே, (பிரம வித்துக்கள்) இரண்டாவதொன்றைக் கொள்வார் அல்லர்; எவன் உலகனைத்தையும் தன் ஆளும் ஆற்றலால் ஆளுகிறானோ அந்த" என்னும் வசனம் வருகிறது.

இங்கு உருத்திரன் என்றது பரமசிவனை; பிறப்பு வீடு (பந்த மோக்ஷம்) இரண்டையும் ஒன்றன்பின் ஒன்றாக உயிர்களுக்கு வழங்கி, அவற்றைத் துன்பத்தினின்றும் கடப்பித்தலின் வந்த காரணப் பெயர். 'ருதம்த்ராவயதி—துன்பத்தினின்றும் கடப்பிக்கிறான்' எனச் சொற்பொருட் காரணம் (வியுத்பத்தி) கூறப்படுகிறது.

சிவபிரானை ஒருவன் என்றல் வேதவழக்கு என்பது பற்றியே மாணிக்க வாசகர்,

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க!" என்றருளிச் செய்வாராயினர்.

திருவாய்மொழி அருளிய நம்மாழ்வாரும், கண்ணபிரான்மேல் முழுமுதற்றன்மையை ஏற்றிப் புகழுமிடத்து,

"ஒளி மணிவண்ணன் என்கோ! ஒருவன் என்(று) ஏத்த நின்ற நளிர்மதிச் சடையன் என்கோ!!"

என இவ்வைதிக சித்தாந்தத்தை உடன்பட்டுக் கூறலின், இம்முடிபே உபய வேதாந்தத்திற்கும் ஒத்த முடிபாம் என்பது இனிது துணியப்படும். வைதிக சித்தாந்தம் - வேத சம்பந்தமான முடிந்த முடிபு; உபய வேதாந்தம் - இரண்டு வேதங்களின் அந்தம், தென்மொழி வடமொழிகளின் எழுந்த மெய்யறிவு நூன் முடிபு. இவ்வழக்குப்பற்றியே "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" எனச் சங்கத்துச் சான்றோரும் கூறியுள்ளார்.

இனி, சத்தென்னும் சொல்லின் பொருளாகக் கூறப்படுபவரும் சிவபெருமானே ஆவர்.

"புருடனுவான் மகானுகிய சத் தெனப்படும் உருத்திரனே! அவனுக்கு வணக்கம்! வணக்கம்!!" என யசுர் வேதத்தும், தைத்திரீய ஆரண்யகத்தும் வருவது கருதத் தக்கது.

சத் தென்னும் சொல் சத்தியோடியைந்த சிவன் எனப் பொருள் பயக்கும், என்பதை நீலகண்ட சிவாச்சாரியர் கீழ்வரும் பழைய மொழி (அபியுக்த சூக்தி)யைக் காட்டி நிறுவுகின்றார்.

"சத்தியும் சிவனும் சத்தென்னும் சொல்லின் பகுதி விகுதிகளாக ஓதப்படுகிறார்கள். அவ்விருவரும் தமது ஒருமையினாலும் உலகத்திற் பிரிப்பின்றிக் கலந்துள்ளமையினாலும் எல்லா உலகமும் ஆயினர்" என்பது அப்பழைய சொற்றொடர்.

இனி, அறிவு நூற் பொருள்களெல்லாவற்றையும் மக்கள் முறைப்படக்கொண்டு உணர்ந்துய்யுமாறு சிவஞான போதம் என்னும் உயர்ஞானத் தலை மணி நூலை அருளிச் செய்த மெய்கண்டதேவரும் அச்சொல் சிவனது திருவருளையே உணர்த்தும் என அளவை முறையான் ஆய்ந்து முடிக்கின்றார். அவர் கூறும் முடிபு

"சத்(து) ஆம் அறிவறியாமெய் சிவன்தாள் ஆம்" *

* 6-ஆம் சூத்திரம், 2-ஆம் அதிகரணம் உதாரண வெண்பா.

# வைணவம்

[திரு. T. A. சீனுவாசாச்சாரியார்]

(முன் தொடர்ச்சி)

## வேதம் விளங்கவில்லையே

பயிர்களுக்கும், உயிர்களுக்கும் தண்ணீர் தேவையாக உள்ளது. "நீர் இன்று அமையாது உலகு' என்பது பெரியோர் கூறும் உண்மை. இத்தகைய நீரினை ஏராளமாகவும், வற்றாத வித மாகவும் சமுத்திரம் பெற்றுள்ளது. அந்த நீரிலேயே பல பிராணிகள் வாழ்கின்றன. என்றாலும், சமுத்திர ஜலத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் அதில் உப்புக் கலந்துள்ளது. இப்படி உப்புக் கலந்திராவிட்டால் அந்தத் தண்ணீர், குளம் முதலிய நீர் நிலைகளின் தண்ணீர் போல நாற்றம் அடைந்து கெட்டுவிடும். பிராணிகளின் உடலங்கள் கெடாமலிருப்பதற்கும், சுகப் படுவதற்கும்கூட இந்த உப்புச்சுவை கடல் நீரினிடம் இருந்தே தீர வேண்டியுள்ளது. என்றாலும், அந்த உவர்ப்புத் தன்மையை மாத்திரம் நீக்கி, நல்ல தண்ணீரை மாத்திரம் நமக்குத் தருவதற்குச் சூரியனும், மேகமும், காற்றும்கூட உழைத்து உதவுவதை நாம் அறிவோம்.

இப்படிச் சூரிய வெப்பத்தாலும், குளிர்ந்த காற்றாலும் உதவப்பட்ட மேகம் நல்ல ஜலத்தை நமக்கும், பயிர்களுக்கும், உடனே அப்படியே உபயோகித்துக் கொள்ளும் வண்ணம் மழையாகப் பொழிந்து பயன் அளிக்கின்ற தென்பதை யாவரும் அறிவர். இந்த உவமானத்தை மனத்தில் அமைத்துக்கொண்டு பார்த்தால், வினையின் நீங்கி விளங்கிய அறிவனாலும் முனிவராலும் ஆரிய மொழியால் ஆக்கியும் வகுத்தும் அளிக்கப்பட்டுள்ள வேதமும், அந்த மொழியிலே பயிற்சி நன்கு பெறாதவர்கட்குப் பயன்பட வில்லை என்பதும், அதனைப் பயன்படச் செய்வதற்கு என்ன முறை ஏற்பட்டுள்ளது என்பதும் தெளிவாகத்

---

என்பது. இதன் பொருள்: 'சுட்டறிவினால் அறியப்படாத மெய்ப்பொருள் சாந்தோக்கியம் முதலிய உப நிடதங்களால் சத் தென்று ஓதப்படும். அவ்வாறு ஓதப்படும் மெய்ப்பொருள் சிவன் அருளேயாம், சூனியம் அன்று. ஏனென்றால், அச்சிவனருளே சைவ உபநிடதங்களினும் சைவாகமங்களினும் அந்நியமின்றி நின்றுணரும் அனுபவ மாத்திரையில் விடயமாவது என்று ஓதப் படும்' என்பது.

மேற்காட்டியவற்றால், வடமொழி தென் மொழி * என்னும் இரண்டிலும், மிகப் பழைய காலந்தொட்டு, தலையாய ஞான நூல்களால் ஓதப்பட்டும் ஆராயப்பட்டும் வருவது சிவனது திருவருளே என்பது உணரப்படும். இதனால் சைவத்தின் தொன்மை இனிது விளங்கும். தலையாய அறிவுடையார் யாவர்க்கும் இவ்வுண்மை உடன்பாடாவதே என்னும் திருவுள்ளக் குறிப்பாற்றான் திருஞான சம்பந்தப் பிள்ளையார்,

> "தம்மலர் அடியொன்(று) அடியவர் பரவத்
> தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர
> அம்மலர்க் கொன்றை அணிந்த எம்மடிகள்
> அச்சிறு
> பாக்கம(து) ஆட்சி கொண்டாரே"
>
> —திருமுறை 1,77,4.

என்றருளிச் செய்வாராயினர்.

(தொடரும்)

---

* தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் என்பவை சிவனது திருவருளை விளக்குதல் பின்னர் ஆங்காங்குக் குறிக்கப்படும்.

தெரியவரும். இந்த நிலைமையில்தான் ஆழ்வார்கள் திருவவதரித்துக் கடல்நீரை, மேகம் நன்னீராக்கித் தருவதுபோல, நமக்கு வேத விஷயங்களை ஐயமறச் சரியான பொருளில் விளங்குவதற்குத் தண்தமிழ் மொழியிலே பற்பல பாசுரங்களாகத் தோத்திர ரூபமாக்கி இசை கலந்து அளிருச் செய்துள்ளனர். இங்ஙனம் இவ்வாழ்வார்கள் அருளிச் செய்திராவிட்டால், நாம் வடமொழி மறைகள் கூறுவனவற்றை நன்கு அறிந்து கொள்ள முடியாமற் போயிருக்கும். மற்றும், அவ்வேதங்கள் சொல்வனவற்றைக் குதர்க்கமான வழியில் அர்த்தம் செய்துகொள்ள நேரிட்டிருக்கும். இந்த உண்மையை, 'வேதம் தமிழ் செய்த மாறன்''; "இவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே''—என்கிற திருவாக்குக்கள் நன்கு புலப்படுத்துதல் காணலாம். இவ்வாறு, வடமொழி மறையினை ஆழ்வாராதியர் தமிழ் மொழியாக்கி நமக்கு விளங்குமாறு அருளிச் செய்துள்ள பாசுரங்களின் தொகுப்பினை நாலாயிர திவ்யப்ரபந்தம் என்று வழங்குவர் ஆன்றோர். ஆகவே, வேதம் எப்படிப் பிரமாணமோ அப்படியே திவ்யப்பிரபந்தமும் பிரமாணமாம். முன்பு எம்பெருமானும், ருஷிகளாலும் வெளிப்போந்த வடமொழி மறை உண்மைகளே, பின்பு ஆழ்வார்களின் ஸாக்ஷாத்கார அநுபவப் பெருக்கினால் தமிழில் திவ்யப் பிரபந்தமாயின என்பது உண்மையாம்.

## ஆழ்வார்கள் எவர் ?

மக்களுக்குத் தாமாகத் தங்கள் துன்பம் போக்கிக் கொண்டு பேரின்பப் பெருநிலை அடைவதற்கான அறிவு போதாது. இதற்காகவே, வேதம் முதலிய பலப்பல நூல்கள் தரப்பட்டன. என்றாலும், அவைகளை ஓதி உணர்ந்து பத்தி செலுத்தி நற்கதி அடைவதற்கு எல்லாராலும் இயலவில்லை. ஆகவே, மக்கள்மேல் வைத்துள்ள தம்முடைய இயற்கையான பேரன்பினால் பகவான், தாமே அவதாரங்களைச் செய்து நல்வழி இன்னதென உணர்த்தலுற்றான். இந்த அவதாரங்கள் அவ்வக் காலத்திலே வாழ்ந்தவர்களுக்குப் பயன்பட்டனவே அல்லாமல், பின் வந்தாருக்கு நேர்முகமாகப் பயனளிக்கவில்லை. ஆதலால், எல்லாம் வல்ல எம்பெருமான், மான்காட்டி மான் பிடிப்பது போன்று, மனிதரினமேயாக ஆழ்வார்களை ஆங்காங்குப் பல காலங்களில் பல இடங்களில் பல வர்ணங்களில் இடுவித்து, மயர்வற மதிநலம் அருளி, அவர்கள் மூலமாகத் திவ்யப் பிரபந்தங்களையும் பிரகாசிப்பித்து, அவர்கள் வழி வழியாகக் குரு பரம்பரையினையும் இவ்வுலகில் நிலை நாட்டியுள்ளான். இந்த ஆழ்வார்கள் யாவரும், திருமாலினால் கட்டளையிடப்பட்டு இந்த லீலா விபூதியில் அவதரித்தருளியவர்கள் ஆவர். இவர்கள் பகவானுடையவையான ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம், வைஜயந்தி, வனமாலைகள், ஸ்ரீ பூமி நீளைகள், ஸ்ரீ பஞ்சாயுதங்கள், அநந்த கருட விஷ்வக்ஸேந அம்ச பூதர்கள் ஆவார்கள். நம்மைப்போலக் கன்ம வயப்பட்ட பிறப்புடையவர்கள் அல்லர். இவர்களுடைய வரலாறுகளில் சிற்சில வேறுபாடுகள் காணப்படும். இத்தகைய ஆழ்வார்கள் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவி ஆழ்வார் என்பவர்கள் ஆவர். ஆழ்வார்கள் எல்லாரையும் அவயவ பூதராக உடையவர் நம்மாழ்வார் ஆவர். இவர்கள் சுத்த சத்துவ குணத்திலே நின்றவர்கள். ஞான பக்தி வைராக்கியமும் உடையவர்கள். இவர்களுடைய சரித்திரங்களை இங்கு விவரித்தால் கட்டுரை பெரிதாகும். குருபரம்பரை முதலிய விவரமான நூல்களால் அறியலாகும். இவர்கள் அருளிச் செய்துள்ள பாசுரங்கள் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் இயல்புகளை நன்கு விளக்குவன ஆகும்.

## ஸ்ரீ வைஷ்ணவத்தின் அடிப்படைக் கொள்கைகள்

பகவானுடைய குணாநுபவத்தில் ஆழ்ந்து கிடந்தவரான ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களைக் கொண்டே திவ்யப் பிரபந்தம் எனப்படும். இதனில், ஆழ்வார்களுடைய பாசுரங்களும், திருவரங்கத்தமுதனாருடைய அந்தாதியும் அடங்கி உள்ளன. இவை இருபத்துநான்கு பிரபந்தங்களாகப் பிரியும். இவைகளுள் திருவாய்மொழி மிக்க சிறப்புடையது. இதன் வியாக்கியானமே பகவத் விஷயம் எனப்படும். ஸ்ரீ வைஷ்ணவத்தில் மூன்று ரகசியங்கள் சீடர்களால் உபதேச மூலம் பெறப்படும். அவை திருமந்திரம்—த்வயம்—சரமலோகம் எனப்படும். திருமந்திரம் என்பது எட்டெழுத்து மலற ஆகும். இது மூன்று பதங்கள் கொண்டது. பல விசேடமான அர்த்தங்கள் கொண்டது. சகல பலன்களையும் தர வல்லது. சில விதிகளுக்குட்பட்டு யாவரும் ஓதக் கூடியது. பெண்டிரும் அநுசந்திக்கலாகும். த்வயம் என்பது இருபத்தைந்து எழுத்துக்கள் கொண்

டது. ஆறு பதங்கள் உடையது. இரண்டு வாக்கியங்கள் ஒன்று சேர்ந்தமைந்தது. இதுவும் எல்லாரும் ஓதக்கூடியது. ஒருமுறை உச்சரித்தாலும் மோக்ஷம் வரையிலுள்ள பலன் சித்திக்கும் என்பர். சரம சுலோகம் முப்பத்திரண்டு எழுத்துக்கள் கொண்டது. பன்னிரண்டு பதங்கள் கொண்டது. இது ஸ்ரீ பகவத் கீதையில் கண்ணபிரானுல் அருளிச் செய்யப்பட்ட மந்திரம் ஆகும். இது பிரபத்தியை விதிக்கும் சூக்தியாம். மேற் கூறப்பட்ட மூன்று மறைமொழிகளும் ஆசாரியனுல் ஸமாச்ரயண காலத்தில் (தீக்ஷா காலத்தில்) அர்த்தத்தோடு சிஷ்யனுக்கு உபதேசிக்கப்படும். பிறகு சீடன் தினந்தோறும் இவற்றை ஜபம் செய்ய வேண்டும் என்பர்.

மற்றும், நாம் ஆழ்வார்களின் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களிலிருந்து ஐந்து விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். இந்த விஷயங்களும் இன்னவை என்பது ஸ்ரீ பட்டர் அருளியுள்ள திருவாய் மொழி தனியன் செய்யுளால் அறியப்படும். அது "மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர்நிலையும்...தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும்—ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்—யாழினிசை வேதத்தியல்" செய்யுளாகும். ஒருவன் எந்த வேலையிலும் ஐந்து சங்கதிகளை அறிந்தே தீரவேண்டுவது நியதியாம். அவை 1. அடையவேண்டிய பொருள். 2. அடைகிறவன். 3. அடைவதற்காகச் செய்ய வேண்டிய வேலை. 4. அடைவதில் உள்ள இடையூறு. 5. அடைவதன் பயன் என்ற இவையாம். இந்த முறைப்படி பார்த்தால் நாம் முதலில் மிக்க இறைநிலை எனப்படும் பரப்ரஹ்மம் எது என்பதை அறிய வேண்டும். அப்பால் இரண்டாவதாக மெய்யாம் உயிர்நிலை எனப்படும் ஆத்மா பற்றியும் அறியவேண்டும். மூன்ருவதாகத் தக்க நெறி எனப்படும் உபாயம் பற்றியும் தெரியவேண்டும். நான்காவதாகத் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை என்று சொல்லப்படுவதான விரோதியை அறிய வேண்டும். முடிவில் ஐந்தாவதாக வாழ்வு எனப்படும் முக்தியை உணரவேண்டும். இந்த ஐந்தையும் அர்த்த பஞ்சகம் என்று வழங்குவர் பெரியோர். இவற்றுள் மிக்க இறைநிலையானது பரம்—வியூகம்—விபவம்—அந்தர்யாமி—அர்ச்சை என ஐவகையாகக் கூறப்படும். இவற்றுள் பரம் எனப்படுவது எம்பெருமான் பரம பதத்தில் நித்திய முக்தர்க்குப் போக்கியனுய் வீற்றிருக்கும் பரத்வ நிலையாம். வியூகமாவது படைத்தலாதி முத்தொழிலுக்காகவும், சம்சாரிகளை ரக்ஷிக்கும் பொருட்டாகவும், உபாசக அநுக்கிரகத்திற்காகவும் உள்ள சங்கர்ஷண பிரத்யும்ந அநிருத்தரூப வாசுதேவ நிலையாம். விபவமாவது அவதாரங்களில் எம்பெருமான் நிற்கும் நிலை அகும். அந்தர்யாமி யாவது அண்ட சர அசரங்களிலும் ஆத்மவர்க்கங்களிலும் எள்ளுக்குள் எண்ணெய் போல் உயிருக்குயிராய் நிற்கும் நிலையாம். அர்ச்சையாவது மண்ணுலகில் அரங்கம் முதல் விண்ணில் வைகுந்த நாடளவும் திருப்பதிகளிலும் பிற தலங்களிலும் திருச்கோயில்களிலும் திருவுருவந்தாங்கி எழுந்தருளியிருக்கும் எளிமையான நிலையாம். இதுவே நாம் நேரில் காணத்தக்கது. இது நமது எல்லா விருப்பங்களையும் தரவல்ல பெருமை உடையது. இப்படியே ஆத்ம நிலை பிரபத்தி முதலிய மார்க்கங்கள்—ஸ்வரூப விரோதி முதலிய மூன்றுவித தடைகள்—முக்தி நிலை முதலியவற்றையும் நாம் செவ்வனே தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றைப்பற்றியும் இங்கே விவரித்தால் விரிவடையும். தக்க உதவி கொண்டு அறிதலே தக்கதாகும். இவைகளைத் தொகுத்துப் பார்த்தால் பிரகிருதி—ஜீவன்—கடவுள் என்கிற மூன்று விஷயங்களாக யாவும் அடங்குதல் காணலாம்.

மேலும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மூன்றுவித தத்துவங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும். அவையே சேதநம்—அசேதநம்—ஈசுவரன்-எனப்படும். ஜீவான்மா சேதநன் எனப்படும். இது உடம்பின் வேறுபட்டது. அழிவில்லாதது எம்பெருமானுக்கு அடிமைப்பட்டது. ஜீவான்மாக்கள் எண்ணற்றவர். இவர்கள் பக்தர்—முத்தர்—நித்யர் என மூன்று வகைப்படுவர். கர்மத்தில் உழல்பவர் பக்தர். சதாசார்ய சம்பந்தம் பெற்று பக்தி பிரபத்திகளுள் ஒன்றை மேற்கொண்டொழுகிக் கர்ம பூமியை விட்டு நீங்கி மோக்ஷத்தைப் பெற்றவர்கள் முக்தர் எனப்படுவர். கர்ம சம்பந்தமே இல்லாமல் எம்பெருமானுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்து கொண்டே இருப்பவர் நித்யர் ஆவர். அநந்தர் கருடர் முதலியவர்கள் இவ்வகுப்பினர் ஆவர். அறிவில்லாதவஸ்து அசேதநம் எனப்படும். இந்த அசேதநப் பொருளால் விளையும் பயனைச் சேதநனே அனுபவிப்பவன். அசேதநப்பொருள் மூன்று வகைப்படும். அவை முக்குணங்கள்—காலம்—சுத்தசத்துவம் என்பனவாம். இவற்றின் விரிவுகளைப் பெரிய நூல்களால் அறியலாம். ஈசுவரன் சர்வேசுவரனுகிய ஸ்ரீமத் நாராயணனே ஆவன். மாறுபடாதவன். ஞானமயன். அளவிட முடியாதவன். கால வரையறை கடந்தவன். எல்லையற்றவன். ஆநந்த மயன். சேதந அசேதநங்கள் இவனுக்கு உடல

மாம். இவனே உபாயமும் பலனுமானவன். பிரிவில்லாத பிராட்டியுடன் கூடியவன். இவனுடைய திருமேனி முற் கூறப்பட்டுள்ள பரம் முதலிய ஐந்து வகைப்படும்.

இனி மோக்ஷ சாதநமாக அநுட்டிக்கப்படும் உபாயம் ஹிதம் என்று கூறப்படும். ஆகவே பக்தியும் - பிரபத்தியும் ஹிதம் எனப்படும். பத்தி யோகம் பலவகைப்படும். இது கடினமானது. ஸ்ரீமந்நாத முனிகள் போல்வாரே இதனுக்கு அதிகாரிகள் ஆவர். பக்தி யோகத்தை அநுஷ்டிக்க இயலாதவர் பிரபத்தியை, மோக்ஷ உபாயமாகக் கொள்வர். இந்தப் பிரபத்தியை, பரந்யாசம்—சரணாகதி—பரஸ்மர்ப்பணம்—உபாய அநுஷ்டானம் என்கிற பெயர்களிட்டும் வழங்குவர். இந்தப் பிரபத்தி நான்கு வகைப்படும். அவை:—1. ஸ்வ நிஷ்டை. 2. உக்தி நிஷ்டை. 3. ஆசார்ய நிஷ்டை. 4. பாகவத நிஷ்டை என்பனவாம். பிரபத்திக்கு ஐந்து அங்கங்கள் உண்டு. இவற்றின் விரிவுகளெல்லாம் ஆசாரியர் மூலமாகவும் சாஸ்திரங்களாலும் தெரிதல் நன்று. பிரபத்தி உபாயமானது ஒரே முறை செய்யப்படுவதே சாலும். சகல பலன்களையும் நினைத்தபடியே நினைத்த போதே அளிக்கும் சக்தி பிரபத்திக்கு உள்ளது. ஆதலால் இதனை எல்லாச் சாதியினரும் மேற்கொள்ளலாம். எல்லாப் பிராணிகளுக்கும் கூட இது மோக்ஷ உபாயமாகும்.

இறுதியாக அறிய வேண்டுவது புருஷார்த்தம் எனப்படும். பரமபதம் சேர்தலும் பரிபூரண பகவதநுபவம் பெறுதலுமே இதுவாம். மோக்ஷமடைந்த ஜீவன் ஸ்ரீ வைகுண்டத்தில் திவ்ய மண்டபத்தே திவ்ய பர்யங்கத்தில் ஆதிசேடன் மீது பெரிய பிராட்டி, பூமிதேவி, நீளாதேவி ஆகிய நாச்சிமாருடன் எழுந்தருளியுள்ள ஸ்ரீமந் நாராயணனைக் கண்ணாரக் காண்பான். அவனைப் போன்ற குணங்களைப் பெறுவான். நித்திய சூரி கோஷ்டியுள் புகுந்து கலந்து எல்லா இடத்திலும், எல்லாக் காலங்களிலும், எல்லா நிலைமைகளிலும் எல்லாவகைக் கைங்கர்ய சித்தியையும் பெற்று ஆநந்தக் கடலுள் மூழ்கி நிற்பான். இதுவே பகவதநுபவம் எனப்படுகிற பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் எனப்படும். விவரங்கள் பெரு நூல்களால் அறியத் தக்கனவாம்.

இதுகாறும் கூறியதைக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவ சமய நெறி நிற்போர், பொதுவாக எந்த எந்தக் கொள்கைகளை அறிந்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு தெரியலாம். எனவே, அர்த்த பஞ்சக விஷயங்களையும், அறிந்து, தத்துவ ஹித புருஷார்த்தங்களை உணரப் பெற்று, திருமந்திரம் முதலிய ரகசியத் திரய உபதேசம் அடைந்து அந்நெறியில் பக்தி மேற்கொண்டேனும், பிரபத்தி மேற்கொண்டேனும் ஒருவர் ஒழுகுவராயின் தட்டாமல் கர்ம விடுதலை அடைந்து பரமபதம் எய்திப் பேரின்ப அநுபவம் பெறுவர் என்பது திண்ணமாம். பகவானுக்குரிய சங்கு சக்கரங்களைத் தரிக்கும் இந்த நெறியினை மேற்கொள்வோர்க்குப் பகவானை அடைய வேண்டுமென்கிற தாபம் இருக்கவேண்டும். பாலை வெளியில் வெய்யிலில் கால் நடையாகச் செல்வோன் தாகங்கொண்டபோது எப்படித் தபித்துத் தண்ணீரை அடைய விரைவானோ அப்படி இந்தத் தாபம் நிகழ வேண்டும். பகவானுக்கே நாம் ஆட்பட்டுக் கிடத்தலை நாமும் நினைவுட்கொண்டு பிறர்க்கும் நினைவூட்டக் கருதி அதற்குரிய சின்னமாகப் புண்டரம் தாங்கி யிருத்தலும் முக்கியமாம். மக்களுள் உயர்வு தாழ்வு கருதுதல் அகங்காரத்தை வளர்க்கும். அதனை ஒழிக்க வேண்டுமாயின் இந்த வேறுபாட்டு எண்ணம் வேரறக் களையப்படவேண்டும். இதற்காகவே ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் பெயருக்குச் சார்ந்தாற்போல ஜாதி முதலிய குறியீடுகளைக் காட்டும் சொல்லை அமைத்துக் கொள்ளாமல் தாஸன் என்னும் சொல்லையே தமது பணிவு புலப்பட அமைத்துக்கொள்ள வேண்டுவது விதியாகும். இதனால் தாங்கள் அடிமைப்பட்டுக் கிடத்தல் என்றென்னும் நெஞ்சைவிட்டு நீங்காது. இந்த ஏற்பாடு தாஸ்ய நாமம் என்று கூறப்படும். இவ்வளவும் அமையினும் பெருமானை அடைதற்கு அவனுடைய திருநாமம் பொருளுணர்ந்து ஓதப்படவேண்டும். பொருளுணர்வு ஆசாரியரால் அநுக்கிரகிக்கப்படும். இங்ஙனம் உபதேச முறையில் பெற்ற திருமந்திரத்தை ஓதுதல் ஒரு முக்கிய லக்ஷணமாகும். இப்பொருளை அடைதற்கு உதவியாகப் பகவானால் தரப்பட்டுள்ள இந்த உடம்பைப் பாதுகாத்தற்கு உணவு கொள்ள வேண்டி யிருக்கிறது. அந்தத் தாரக போஷக போக்கியப் பொருள்களும் அப்பெருமானாலேதான் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால், உவற்றைத் துய்க்கும் முன்னம் அப்பெருமானுக்கு நன்றியறிவோடு விண்ணப்பித்து எடுத்துக்கொள்வதே முறையாகும். ஆதலால், திரு ஆராதனம் என்பது விதிக்கப்பட்டுள்ளது. ஆகையால் மேற்சொல்லப்பட்ட தாபம் முதலிய ஐந்து நற்செயல்களையும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மேற்கொண்டு ஒழுக வேண்டுதல் கடமையாம். (தொடரும்)

# மதுரை

பொன்றயங் கிலங்கொளிந்
நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்க ஆடுவாய்
பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய்
கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே
நினைப்பதே நியமமே

—சம்பந்தர்

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில் பாடல் பெற்ற பதிகள் பதினான்கு. அவற்றுள் தலை சிறந்து விளங்குவது மதுரைப் பெருநகர். குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பேரும், புகழும், பெருமையும் கொண்டு திகழும் தென்னிந்திய நகரம் இது ஒன்றே யென்று சொன்னால் அது மிகையாது. தமிழர் பண்பாட்டிற்கும் நாகரிகத்துக்கும் நிலைக்களனாக நின்றிலங்குகிறது. மதுரை மூதூரைப் பற்றி வேற்று நாட்டினர் கூறியிருப்பவற்றை நோக்கின் இதன் பழம் பெருமை புலனாகிறது. கிரேக்க ரோமர்களுக்கு இந்நகர் நன்கு தெரிந்திருந்தது. மகாவம்சம் என்ற நூல் இலங்கையின் முதல் மன்னனான விஜயன் (கி. மு, 500) மதுரைப் பாண்டிய மன்னன் மகளை மணந்தான் என்று கூறுகிறது. பாடலிபுரத்திலிருந்து அரசாண்ட சந்திர குப்த மௌரியன் (கி. மு. 302) அவையில் கிரேக்க தூதுவனாக இருந்த மெகாஸ்தனிஸ் மதுரையில் பாண்டிய அரசி அரசாண்டதாகக் குறிப்பிடுகிறார். கி. மு. 269-ல் அரியணையேறிய அசோக மன்னரின் புத்த மதக் கொள்கை தென் குமரி வரைப் பரவுவதற்குப் பாண்டிய மன்னர் உறுதுணையாக இருந்தனர் என்றும் தெரிகிறது. கி. மு. 27-ல் பாண்டிய மன்னன் ஒருவன் ரோமாபுரிச் சக்கரவர்த்தி அகஸ்டஸுக்கு ஒரு தூதரை யனுப்பியதாக ஸ்ட்ராபோ தெரிவிக்கிறார். கி. பி. 140-ல் பாண்டியர் தலைநகர் மதுரை (Madoura) என்று தாலமி கூறுகிறார். மதுரைப் பக்கத்தில் ரோமன் நாணயங்கள் அகப்பட்டதிலிருந்து அவர்கள் தமிழ்நாட்டுடன் வணிகப் போக்குவரத்து செய்து வந்தன ரென்றும் அவர்கள் குடியிருப்பு ஒன்று மதுரையிலிருந்திருக்க வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மதுரை என்றால் இனிமை என்று பொருள்படும். இப்பேர் வந்ததற்கு ஒருபுராண வரலாறு உண்டு. தனஞ்சயன் என்பவன் வாணிபம் செய்துவிட்டுத் திரும்புங்கால் கடம்பவனம் ஒன்றில் சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். தன் நாட்டு அரசன் குலசேகர பாண்டியனிடம் அதைச் சொன்னான். அப்பாண்டியன் கடம்பவனத்தை அழித்து சிவலிங்கப் பெருமானுக்குக் கோயில் அமைத்தான். சுற்றிலும் மாடமாளிகை கூடிய நகர் ஒன்றையும் அமைத்தான். சிவலிங்கத்தை அடுத்து ஒழுகிய அமுதத்தையே காரணமாகக் கொண்டு அந்த நகரத்திற்கு "மதுரம்" என்னும் பொருள்பட மதுரபுரி என்று பேரிட்டனன். திருவிளையாடற் புராணம் திருநகரங்கண்ட படலத்தில்,

பொன்மய மான சடைமதிக் கலையின்
புத்தமுதுகுத்தன ரதுபோய்ச்
சின்மய மான தம்மடி யடைந்தார்
சிவமய மாக்கிய செயல் போல்
தன்மய மாக்கியந்நகர் முழுதுஞ்
செய்தது வது மதுர
நன்மய மான தன்மையான் மதுரா
நகரென வுரைத்தனர் நாமம்



ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைமடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவ
பொங்கழ லுருவன் பூதநா யகனால் வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே

—திருஞானசம்பந்தர்.

என்று இதைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. மதுரைக்கு வேறு சில பெயர்களும் உண்டு. பாம்பு எல்லை காட்டியதால் **ஆலவாய்** என்றும், நான்கு மேகங்கள் மாடங்களாக நின்று பெருமழையைத் தடுத்ததால் **நான்மாடக்கூடல்** என்றும், கடப்ப மரங்கள் நிறைந்த காடாக இருந்தமையின் **கடம்பவனம்** என்றும், வசிக்க முத்தி தரும் பதியான படியால் **ஜீவன் முத்திபுரம்** எனவும், தடாதகைப் பிராட்டியார் கன்னியாயிருந்து அரசாண்டதால் **கன்னிபுரீசம்** என்றும், வரகுணனுக்குச் சிவலோகம் காட்டியதால் **சிவலோகம்** என்றும், இறைவன், தேவி, முருகன் இவர்கள் பாண்டிய குலத்தில் தோன்றி அரசு செய்தமையால் **சிவநகரம்** என்றும், ஆன்மாக்களுக்கு சரியை முதலிய நான்கையும் தருதலால் **சமஷ்டி விச்சாபுரம்** என்றும், ஆறு ஆதார ஸ்தானங்களுக்கெல்லாம் அதீதமாயுள்ளதான **துவாதசாந்தம்** எனப்படும் **ஆலாசிய க்ஷேத்திரம்** என்றும் சொல்லப்படுகிறது. புலவர்கள் கூடித் தமிழ் ஆராய்ந்த இடமாதலின் **கூடல்** என்று பேர் வந்ததென்றும் கூறுவர். இதற்கு "உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின் துறை வாய்நுழைந்தனையோ" என்ற திருக்கோவையார் கூற்றை ஆதாரமாகக் கொள்ளலாம். மதுரை மாநகரைத் தென் இந்திய ஆதென்ஸ் (South Indian Athens) என்றும் சொல்லுவர்.

மதுரையைப் பற்றிப் பண்டு தொட்டு இன்றுவரை கூறும் நூல்கள் பலப்பல. **பரிபாடலில்** ஆறு பாடல்களில் மதுரையின் பெருமை கூறப்படுகிறது. ஒரு பாட்டில், மதுரையை ஒரு தராசுத் தட்டில் வைத்து மற்றொன்றில் உலகப் பொருள்கள் அனைத்தும் வைக்க மதுரையிட்ட தட்டுத் தாழ்ந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. மதுரை, திருமாலின் கொப்பூழில் பூத்த தாமரை; அதன் இதழ்கள் தெருக்கள்; நடுவிலுள்ள பொகுட்டு இறைவன் கோயில்; பூவின் மகரந்தம் தமிழ்க் குடிமக்கள்; அதை யுண்ணவரும் வண்டுகள் புலவர்கள் என்று இன்னொரு பாட்டு அழகு படக்கூறுகிறது. மற்றொன்று பொதியமுள்ளவரை மதுரை நிலைபெற்று விளங்கும் என்று கூறுகிறது. இன்னுமோர் பரிபாடல் செய்யுளில் மதுரை திருமகள் நெற்றியில் இட்டிய திலகம் என்று கூறப்படுகிறது. கார்த்திகை மாதர் காதில் விளங்கும் குண்டலம் போல் அழகுடன் திகழ்வது மதுரை என்று மேலும் ஓர் பாட்டில் வருகிறது. கொடுப்பவர்களைக் கொண்டாடி கொள்பவர்கள் வருவார்களோ என்று வழி பார்த்திருக்கும் மாடங்கள் நிறைந்த கூடல் என்று மற்றும் ஒரு பாடல் புகழ்கிறது. **அகநானூற்றில்,** மதுரையில் திருவிழாக்கள் இல்லாத நாளே கிடையாது என்று கூறப்படுகிறது. **கலித்தொகையில்,** புலவர் அறிவுக் கடலில் கடைந்தெடுக்கப்பட்டு நாவின் வழியாகச் சொட்டும் சொல்லமுதத்தைப் பருகும் பேறு பெற்றவர்கள் மதுரை மக்கள் என்று பேசப்படுகிறது. இறைவன் சேரமன்னனுக்கு சீட்டுக்கவி கொடுத்து பாணபத்திரனைப் பரிசிற்காக அனுப்பும்போது "மதிமலி புரிசை மாடக் கூடல்" என்று தம்மூரைச் சொல்லிக் கொள்கிறார். **புறநானூற்றில்,** 'மாடமலி மதுரை,' 'வானத்தன்னவள நகர்' என்று புகழப்படுகிறது. **சிலப்பதிகாரத்தில்**

**ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு**
**வாய் திறந்தன்ன மதிலக வரைப்பு**

என்று இந்திரன் ஆபரணப் பெட்டியைத் திறந்து வைத்தது போல மதுரையின் உள்ளமைப்பு இருந்தாகக் கூறப்படுகிறது. **திருமுருகாற்றுப்படையில்,** நக்கீரர், போரேயில்லாத வாயிலுடையது மதுரை என்றும் திருமகள் நிலைத்து நிற்கும் கடைத்தெருக்கள் உடையது என்றும் பெருமிதத்துடன் கூறுகிறார். **சிறுபாணாற்றுப்படையில்** மதுரைத் தெருக்கள் தேன் ஓடி வழுக்குகின்றன என்றும், மதுரையில் தமிழ் நிலை பெற்றுள்ளதென்றும் கூறப்படுகிறது. **மதுரைக் காஞ்சியில்** பெண்கள் குழந்தைகளை ஏந்திக்கொண்டு பூசைப்பொருள்களுடன் கணவரோடு ஆசாரமாகக் கோயிலுக்குப் போகிறார்கள் என்று காணப்படுகிறது. இன்னும் **கல்லாடம், பெரிய புராணம்** இந்த நூல்களில் மதுரையின் பெருமையும், தெய்வத் தன்மையும் கூறப்பட்டிருக்கிறது. பரஞ்சோதி முனிவர் இயற்றிய **திருவிளையாடற் புராணத்தில்,** புண்ணியம் செய்வது மண்ணுலகத்தில் என்றும், அதன் பயனை அனுபவிப்பது விண்ணுலகத்தில் என்றும், இவை இரண்டையும் ஒருசேரக் கிடைக்கும் இடம் மதுரை யென்றும் கூறுகிறார். இன்னும் மதுரையைப் பற்றி, பெரும் பற்றப்

புலியூர் நம்பி எழுதிய திருவாலவாயுடையார் திருவிளையாடல், வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவன புராணம், வாயிற்பதி ஆநதாரி என்பவர் செய்த சுந்தர பாண்டியம், பரஞ்சோதி முனிவர் யாத்த மதுரை பதிற்றுப் பத்தந்தாதி, குரு ஞான சம்பந்தர் அருளிய சொக்கநாத வெண்பா, சொக்கநாதக் கலித்துறை, நிம்பைச் சங்கர நாராயணரின் மதுரைக் கோவை, பலபட்டடைச் சொக்கநாத நாவலர் இயற்றிய மதுரை மும் மணிக் கோவை, புராணத் திருமலைநாதரின் மதுரைச் சொக்கநாதர் உலா, குமரகுருபர சுவாமிகள் அருளிய மதுரைக் கலம்பகம், மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனுட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரை ஐயன் பெருமாள் எழுதிய பாண்டி மண்டல சதகம், திருவிளையாடற் பயகரமாலை, மதுரைத் திருப்பணிமாலை முதலிய பல இலக்கியங்கள் உள்ளன. ஆலாசிய மான்மியம் என்ற வடமொழி நூலும் மதுரையைப் பற்றியதே.



கால் மாறி ஆடிய நடராஜர்

மதுரையம்பதியின் தெய்வீகத் தன்மையை உலகுக்கு விளக்கிய பெருமை திருஞான சம்பந்தருக்கே உரியது. இத்தலத்திற்குப் பத்து திருப்பதிகங்கள் பாடியுள்ளார். திருநீற்றுப் பதிகம் பாடி பாண்டிய மன்னனின் சுரந்தீர்த்து, அவனும் அவனுடைய குடிமக்களும் சமண சமயத்திருந்து சைவத்திற்கு மாற்றினர். இன்னும் பல அற்புதங்களை அங்கே நிகழ்த்தினர். பாண்டிய மன்னன் மனைவி மங்கையர்க்கரசியார், அவன் மந்திரி குலச்சிறையார் இவர்களின் திருநெறித் தொண்டை சம்பந்தர் புகழ்ந்து பாடினர். நின்றசீர் நெடுமாறன் என்ற அப் பாண்டிய மன்னனும், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இடம் பெறும் பேறு பெற்றனர். 'மும்மையால் உலகாண்ட மூர்த்தி' நாயனரும் இத்தலத்தே யிருந்து முத்தியடைந்தார். திருநாவுக்கரசர் இத்தலத்தைப் பற்றி இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். மாணிக்க வாசகர் திருவாசகம், திருக்கோவையார் என்ற இருநூல்களிலும் மதுரையைப் பற்றியும், இறைவன் திருவிளையாடல்களையும் பல பாடல்களில் விதந்தோதியிருக்கிருர். அருணகிரியாரும் தமது திருப்புகழில் மது

மையைப் பற்றிப் பாடியிருக்கிறார். மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் முதல் குருமூர்த்தியான திருஞான சம்பந்தரும், தருமபுர ஆதீனத்து ஆதி குருமூர்த்தியான குருஞான சம்பந்தரும், திருப்பனந்தாள் காசிமடத்து முதல் தலைவர் குமர குருபரரும் இத்தலத்தே இறைவன் திருவருள் பெற்றார்கள் என்பது குறிக்கத் தக்கது

மதுரையில் மூன்றும் தமிழ்ச்சங்கம் இருந்தது. பல புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ச்சி செய்தனர். இச் சங்கத்தேதான் உலகப் பொது மறையான திருக்குறள் அரங்கேற்றப் பெற்றது என்று கூறப்படுகிறது. "உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந் தமிழ்" என்பதும், "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கருளினோன் காண்" என்ற அப்பர் திருவாக்கும், "கலியன் சொன்ன சங்கத்தமிழ் மாலைபத்தும்" என்று திருமங்கையாழ்வார் அருளியதும் மதுரையில் சங்கமிருந்ததைச் சங்கையறத் தெரிவிக்கின்றன. இப்போது மதுரையில் நாலாம் சங்கமிருந்து தொண்டாற்றுகிறது.

மதுரை ஐந்து நிருத்த சபைகளில் ஒன்று. இதை இரசித சபை அல்லது வெள்ளியம்பலம் என்று கூறுவர். இங்கு இறைவன் நிகழ்த்தும் திருக்கூத்தை ஆனந்த தாண்டவம் என்பர். சிலப்பதிகாரத்தில் "வெள்ளியம்பலத்து நள்ளிருள் கிடந்தேன்" என்று கூல வாணிகன் சாத்தனார் கூற்றாக வருவது இதன் பழமையை நன்கு புலப்படுத்தும். சிதம்பரத்தைச் சேர்ந்த புலவர் ஒருவர், மதுரைப் புலவர் ஒருவரைப் பார்த்து "எங்கள் ஊர் பொன்னம்பலம், உங்கள் ஊர் வெள்ளியம்பலம்தானே" என்றார். "பொன்னம்பலத்தைவிட வெள்ளியம்பலம் கால் மாற்று கூட" என்று தயங்காது உரைத்தார் மதுரைப் புலவர். "பொன்னுக்கு மாற்று உண்டு, வெள்ளிக்கு மாற்று ஏது" என்றார் தில்லை நகர்க்காரர். "உங்கள் ஊரில் கூத்தப் பெருமான் வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கியாடுகிறான். ஆனால் எங்கள் மதுரையிலோ இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி ஆடுகிறான். அப்படிக் கால்மாறி ஆடியதால் கால்மாற்று கூட என்றேன்" என்று விளக்கஞ் செய்தார் ஆலவாய் அறிஞர். கால்மாற்று என்ற இரண்டு சொற்களில் 64 திருவிளையாடல்களில் ஒன்றான கால் மாறிய திருவிளையாடற் கதையைச் சுருங்கச் சொன்னது போற்றி யின்புறற்பாலது.

இனி, இத்தலத்திற்குத் தனிப்பெருஞ் சிறப்புத் தருவது சிவபெருமான் இங்கு நிகழ்த்தியருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்கள். இதைப் போன்று வேறு எத்தலத்திலும் நிகழ்ந்ததில்லை. ஆனால் கண்ணன் வடமதுரையில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் நமக்கு நினைவுக்கு வருகின்றன. இந்த திருவிளையாடல்கள் திருவிழாக்களாக கோயிலில் நடைபெறுகின்றன. இவற்றில் மிக முக்கியமானது பிட்டுத் திருநாள். வைகை நதி உடைப்பெடுத்து மதுரைக்குள் வெள்ளம் புகுந்தது. வீட்டுக்கொரு ஆள் வந்து உடைப்படைக்க வேண்டுமென்று அரசன் பறைசாற்றச் செய்தான். வந்தி என்ற பிட்டு வாணிச்சி வீட்டில் ஆள் இல்லை. அடியவர்க்கெளியவனான ஆண்டவன் அவளுக்கு ஒரு ஆளாகச் சென்று, பிட்டே கூலியாகக்கொண்டு மண்சுமந்தான்; சரிவர வேலை செய்யவில்லையென்று அரசனால் பிரம்படியும்பட்டான். பொதுநல சேவையில் யாவரும் ஈடுபடவேண்டும் என்ற படிப்பினைத் தானே ஒரு முன் மாதிரியாக இருந்து இறைவன் காட்டியதை இக்கால மக்கள் கடைப்பிடிக்க வேண்டியதொன்று. மணிவாசகப் பெருந்தகை,

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறை [யான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டக் கோவான் [மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்

என்று இதை மனமுருகப் பாடுகிறார். திருவிளையாடல்கள் நடந்ததற்கு ஆதரவாக மதுரையிலும், பக்கங்களிலும் சில இடங்களும், சிற்பங்களும் உள்ளன. பிட்டுத்தோப்புத் தெரு, எழுகடல் தெரு, அன்னக்குழி மண்டபம், வலைவீசின தெப்பக்குளம், ஓரிரவு இருக்கை, நரிக்குடி முதலிய இடங்கள் குறிப்பிடத் தக்கவை. கல்யாணைக்குக் கரும்பு அருந்தியதும், பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்த

தும் காட்டக் கூடிய சிற்பங்கள் புதுமண்டபத்தில் இருக்கின்றன.

மதுரைக்கருகே காணப்படும் ஆனைமலை, நாகமலை, பசுமலை இவைகள் கல்லாய் சமைந்து கிடப்பதற்கும் திருவிளையாடற் புராணத்தில் கதைகள் உள்ளன.

மதுரைமாநகர் வையையாற்றின் கரையில் அமைந்திருக்கிறது. "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை" என்ற நாட்டுப் பாடல் மதுரைநகர் வளத்தை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறது. "மதுரைநகர் அமைப்பையும் கோயில் சிற்பங்களையும்போல் உலகில் நான் வேறெங்கும் கண்டதில்லை" என்று காலஞ்சென்ற பேறிஞர் டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் கூறியிருக்கின்றார். மேல் நாட்டு அறிஞர்களும் மதுரையைப்பற்றி அத்தகைய கருத்தையே வெளியிட்டிருக்கின்றனர். கோயில் ஊரின் நடுநாயகமாக விளங்குகின்றது. வீதிகள் ஒன்றன்பின் ஒன்றாய் அமைந்திருக்கின்றன. அவை ஆடி வீதி, சித்திரை வீதி, ஆவணி வீதி, மாசி வீதி, வெளி வீதி முதலியன.

கி. பி. 1310-ல் தென் இந்தியாவின் மேல் படை எடுத்து வந்த மாலிக்காபூர் என்ற மகம்மதிய சேனைத் தலைவன் கோயிலின் 14 கோபுரங்களையும், மதில்களையும் தகர்த்துத் தரை மட்டமாக்கி விட்டான். ஆனால் அப்படைத் தலைவர்களுக்குள் இருந்த மன வேறுபாட்டின் காரணத்தால் மீனாட்சி, சுந்தரேசர் இவர்களின் உட்கோயில்கள் இரண்டும் அழிக்கப்படாமல் தப்பின. இதுவும் அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் அண்ணலின் மகிமைதான் போலும். விஜயநகர சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியாக மதுரையிலிருந்து ஆட்சி செய்த விசுவநாத நாயக்கர் கி.பி. 1560-ல் கோயில் திருப்பணிக்கு ஒரு திட்டம் வகுத்தார். மதில்களையும் கட்ட ஆரம்பித்தார். தொடர்ந்து பின்வந்த மன்னர்களும், செல்வர்களும், வணிகர்களும் திருப்பணியை நிறைவேற்றினர். இதுமுடிவடைய 120 ஆண்டுகள் ஆயிற்றென்றும், அதற்குச் செலவு சுமார் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் மதிப்பிடலாம் என்றும் அறிஞர் கருதுகின்றனர். இந்த கோயிலில் கல்லாலும் சுதையாலும் அமைக்கப்பட்ட உருவங்கள் மூன்று கோடியே முப்பது இலட்சம் இருக்கின்றன என்பதை நினைக்கும்போது செலவான மதிப்புத்தொகை அவ்வளவு அதிகம் என்று கூறுவதற்கில்லை. மதுரை நகரையும் கோயிலையும் அழகு பெறச் செய்வதில் பெரும் பங்கு கொண்டவர்கள் திருமலை நாயக்க மன்னரும், இராணி மங்கம்மாளும் ஆவார்கள். இவர்களின் பேர்கள் தமிழகம் எங்ஙணும் மங்காப் புகழுடன் விளங்குகின்றன.

கோயிலின் நீளம். 850 அடி; அகலம் 790 அடி. ஒன்பது கோபுரங்கள் உள்ளன. அவைகளில் நான்கு வாயிற் கோபுரங்கள் உயர்ந்தவை. அந்த நான்கினுள்ளும் தெற்குக் கோபுரம் மிக உயர்ந்தது; 152 அடி உயரம். கோயில் மிகவும் ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்டிருக்கிற தென்பதை ஒரு குறிப்பினால் புலப்படுத்தலாம். கீழ்க்கோபுரத்தின் நடுவிலிருந்து மேல் கோபுரத்துக்கு ஒரு கோடு கிழித்தால் அது சரியாகச் சிவலிங்கப்பெருமான் வழியாகப் போகும். அதேபோல் வடக்கு தெற்குக் கோபுரங்களுக்குக் கோடிட்டுப் பார்த்தால் சுந்தரேசர் திருக்கோயிலை இரண்டாகப் பகிர்ந்து செல்லும். இதனால் முற்காலத்துச் சிற்பிகளின் அற்புதத் திறன் தெரிய வருகின்றது.

மீனாட்சியம்மன் சந்நிதியில் நுழையும்போது முதலில் காணப்படுவது அஷ்டசக்தி மண்டபம். தூண்களில் அஷ்ட சக்திகளின் உருவங்களிருக்கின்றன. அம்மண்டபத்துள் இருமருங்கினும் கணபதியும் ஆறுமுகனும் காட்சி தருகின்றனர். அதைத் தாண்டி உள்ளே சென்றால் விசாலமான ஒரு மண்டபம் உண்டு. மீனாட்சி நாயக்கர் மண்டபம் என்று பேர். அதைக் கட்டியவர் திருமலை நாயக்கரின் அமைச்சர்களில் ஒருவரான மீனாட்சி நாயக்கர். அம்மண்டபத்தைக் கடந்தும் இருட்டு மண்டபம் அல்லது முதலி மண்டபம் என்பதை யடையலாம். அதில் பிட்சாடனர், மோகினி, அனுசூயை, முனிவர்கள் இவர்களுடைய உருவங்கள் அற்புத சிற்ப வேலைப்பாடுடன் இருப்பதைக் காணலாம். அதற்கப்புறம் பொற்றாமரைக்குளம் அதன்பக்க மண்டபச் சுவர்களில் 64 திருவிளையாடல்களையும் ஓவியங்களாகத் தீட்டப்

பெற்றிருக்கின்றன. ஒருபுறச் சுவரில் அண்மையில் தருமபுர ஆதீனத்தாரால் திருக்குறள் 1330 பாடல்களையும் வெண்கற்களில் பொறிக்கப் பெற்றிருப்பது கண்டு இன்புறற்பாலது. பொற்றாமரைக் குளத்தின் மேற்குப் பக்கத்தில் கிளிக்கட்டு மண்டபம் இருக்கிறது. அதில் சித்திவிநாயகர் கோயிலும் முருகன் கோயிலும் உள்ளன. அந்த மண்டபத்தின் தூண்களில் பஞ்சபாண்டவர்கள், திரௌபதி இவர்களின் உருவங்கள் வெகு அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அம்மன் சந்நிதிக்குள் நுழையும்போது இரு துவார பாலகர்களின் சிலைகள் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுகின்றன. உள்ளே இரண்டு பிரகாரங்கள் உண்டு. முதல் பிரகாரத்தில் நுழைந்ததும் இடது பக்கத்தில் திருமலை நாயக்கர், அவருடைய இரு மனைவியர் இவர்களின் உருவங்கள் இருக்கின்றன. மகா மண்டபத்தைத் தாண்டி அர்த்தமண்டபம் சென்றதும் மீனாட்சிதேவியின் காட்சி. அத்திருவுருவத்தைக் கண்டவர்கள் பக்திப் பரவச மடைகின்றனர்.

அம்மன் கோயிலைவிட்டு சுந்தரேசர் கோயிலுக்குள் சென்றால் எதிரில் தோன்றுபவர் மகா கணபதி. இந்தப் பெரிய விக்கிரகம் திருமலை நாயக்கர் வண்டியூர் தெப்பக் குளத்தை வெட்டும்போது கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. சுந்தரேசர் கோயிலின் வெளிப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் தமிழ்ச் சங்கப் புலவர்களின் கோயிலிருக்கிறது. கொடி மரத்தைச் சுற்றியுள்ளது கம்பத்தடி மண்டபம். கொடிக் கம்பத்தைச் சுற்றியுள்ள பெருங் கற்றூண்களில், பார்வதி பரமசிவம் இடபவாகனர், ஆனையுரி போர்த்த அண்ணல், தேரூர்ந்த திரிபுராந்தகர், அர்த்தநாரீசுவரர், அரிகரர், தட்சணாமூர்த்தி, இராவணனுடன் திருக்கயிலை மலைக்காட்சி, நடராஜர், மீனாட்சி சுந்தரேசர் திருக்கல்யாணம் முதலிய உருவங்கள் அமைந்திருப்பது கண்கொள்ளக் காட்சியாகும். கம்பத்தடி மண்டபத்தின் கிழக்கு வாயிலின் இரு மருங்கிலும் உள்ள நான்கு தூண்களில் உள்ள உருவங்கள் கண்டவர் கண்ணிலேயே நின்று மனத்தைவிட்டகலா மாட்சிமையுடையவை. அவை பைரவர், வீரபத்திரர், சபாபதி, காளியென்பன. காளியின் ஆடலும், ஆண்டவனின் ஊர்த்துவ தாண்டவமும் காட்டும் இந்த உருவங்களின் சிற்ப வேலைப்பாட்டின் நுணுக்கம் சொல்லுந் தரத்ததன்று. அந்தச் சிற்பியின் பேராற்றல் போற்றத்தக்கது. சுந்தரேசர் கோயிலின் உட் பிரகாரத்தில் அறுபத்துமூன்று நாயன்மார், கலைமகள், தட்சணாமூர்த்தி, உத்சவமூர்த்திகள், காசி விசுவநாதர், துர்க்கை, எல்லாம்வல்ல சித்தர், சண்டேசுவரர், திருமகள் முதலியவர்களின் கோயில்கள் உள்ளன. தல மரமான கடப்ப மரமும் உள்ளது. சொக்கநாதர் சந்நிதிக்குச் செல்லு முன் கால் மாறியாடிய நடராஜ மூர்த்தி, சிவகாமி அம்மை இவர்கள் காட்சியளிக்கிறார்கள். பிறகு சுயம்புமூர்த்தியான சொக்கலிங்கப் பெருமானின் திருவருட்காட்சி கிடைக்கிறது. இந்திரனால் கொண்டு வரப் பெற்ற அஷ்டகிரி விமானத்தில் பெருமான் எழுந்தருளியுள்ளார். எட்டு யானைகள் அவ்விமானத்தைத் தாங்கி நிற்கின்றன. அவை உயிருள்ள யானைகள் போலவே காணப்படுகின்றன.

இறைவனுக்குச் சொக்கநாதர் என்பது சாதாரணமாக வழங்கும் பெயர். கடம்பவன சுந்தரர், கல்யாணசுந்தரர், கற்பூரசுந்தரர், சண்பகசுந்தரர், சோமசுந்தரர், மீனாட்சிசுந்தரர், சுந்தரேசர் எனப் பல பேர்கள் உள. தேவிக்கு மீனாட்சி, அங்கயற்கண்ணம்மை, மாணிக்க வல்லி முதலிய திருநாமங்கள் வழங்குகின்றன.

கோயிலுக்குள் காணவேண்டிய முக்கியமான மற்றொன்று ஆயிரக்கால் மண்டபம். இதை 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற மன்னன் தன் அமைச்சர் அரிய நாயக முதலியார் மேற்பார்வையில் கட்டினான். இம்மண்டபத்தில் நுழையும்போது அரியநாயக முதலியார் குதிரைமேல் இருப்பது போன்ற உருவம் அமைக்கப்பெற்றிருக்கிறது. இன்னும் அரிச்சந்திரன், சந்திரமதி, சூறவன், இரதி முதலிய உருவங்களும் காணப்படுகின்றன. ஆயிரக்கால் மண்டபத்தினுள்ளேயிருக்கும் கலைமகள் உருவம் பார்க்கத்தக்கது. வடக்குக் கோபுர வாயிலின் உட்புரத்தில் ஐந்து இசைத் தூண்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் 22 சிறு தூண்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றையும் தட்டினால் பல வேறு இனிய ஓசைகள் எழும்புகின்றன. சுந்தரேசர் சந்நிதிக்கு எதிரில் கோயிலுக்கு வெளியில் புது மண்ட

பம் என்ற வசந்த மண்டபம் இருக்கின்றது. இதைத் திருமலை நாயக்கர் கட்டினார். இதன் உள் வரிசைத் தூண்களில் விசுவநாத நாயக்கர் முதல் திருமலை நாயக்கர்வரை இருந்த பத்து மன்னர்களின் உருவச்சிலைகள் இருக்கின்றன. இதற்கு வெளியிலுள்ள இராய கோபுரமும் திருமலை நாயக்கரால் தொடங்கப்பெற்று முற்றுப்பெறாமல் போய்விட்டது.

இத்தலத்தின் தீர்த்தங்கள் பொற்றாமரைக்குளம், எழுகடல், வையை, இவைகள். எல்லா மாதங்களிலும் இத்தலத்தில் திருவிழாக்கள் நடைபெறும். முன்பெல்லாம் மாசி மாதத்தில் மீனாட்சி சுந்தரேசர் திருக்கலியாணமும், சித்திரைப் பௌர்ணமியில் அழகர் வையை ஆற்றில் இறங்கும் வைபவமும் நடைபெற்று வந்தன. சிவநேசச் செல்வரும், வைணவ பக்தருமான திருமலை நாயக்கர் இவ்விரண்டு திருவிழாக்களையும் ஒரு சேர சித்திரா பௌர்ணமியில் நடக்கும்படி ஏற்பாடு செய்தார். அப்படியே இப்போது நடைபெறுகிறது. இந்த சித்திரைத் திருநாள் தான் மதுரையில் சிறந்த திருவிழா. இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு வந்து காண்பார்கள்.

இனி மதுரையம்பதியில் பார்க்க வேண்டிய மற்ற கோயில்களும் இருக்கின்றன. **கூடலழகர் கோயில்** மங்களசாசனம் பெற்ற திவ்விய தேசங்களில் ஒன்று. திருமங்கையாழ்வாரும் திருமழிசை யாழ்வாரும் இரண்டு பாசுரங்கள் அருளியுள்ளார்கள். இக்கோயிலின் அஷ்டாங்க விமானம் வெகு அழகானது. பெருமாள் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலம். தேவிமார் வகுளவல்லி, மரகதவல்லி, வரகுணவல்லி, மதுரைவல்லி. ஏம புஷ்பகரணி, சக்கரதீர்த்தம் இவை தீர்த்தங்கள். **திருவாப்புடையார் கோயில்** என வழங்கும் திரு ஆப்பனூர் பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று. வையை யாற்றின் மற்றொரு கரையில் உள்ளது. சம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார். இன்னும், மதுரைவீரன் கோயில், வட ஆலவாய்க் கோயில், இம்மையில் நன்மை தருவார் கோயில், ஏகாம்பரர் கோயில், மதனகோபால்சாமி கோயில், கிருஷ்ணன் கோயில், தல்லாகுளம் பெருமாள் கோயில் இவைகளும் இருக்கின்றன.

மற்றும் அவசியம் பார்க்கவேண்டியவை வண்டியூர் தெப்பக்குளம், திருமலை நாயக்கர் மகால் இவைகள். பிரமாண்டமான தூண்களுடன் சுண்ணும்பு செங்கற்கள் இவைகளை மாத்திரம் பயன்படுத்திக் கட்டப்பெற்றது திருமலை நாயக்கர் மகால். வண்டியூர் தெப்பக்குளம் 1000 சதுர அடி பரப்புள்ளது. நடுவே ஒரு தீவும் உள்ளது. இதை வெட்டியவர் திருமலை நாயக்கர். இதற்கு மாரியம்மன் தெப்பக்குளம் என்றும் பேர்.

மதுரைக் கோயிலிலுள்ள கல்வெட்டில் ஒரு விநோதச் செய்தி காணப்படுகிறது. விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் கோயில் ஊழியர்களுக்கு விடப்பட்ட சர்வமானிய நிலங்களின் மேல் வரி விதிக்கப்பட்டது. அந்த அநீதியைப் பொறுக்க முடியாத சிப்பந்திகளின் பிரதிநிதியாக அவர்களுள் ஒருவன் கீழ்க் கோபுரத்தின் மேலிருந்து விழுந்துமாண்டான். அதனால்தான் மக்கள் பெரும்பாலும் இந்த கோபுரவாயில் வழியாக வந்து மீனாட்சி சுந்தரேசுவரரை வழிபடுவதில்லை.

பல தலங்களில் உள்ள கோயில்களில் மீனாட்சி சுந்தரேசருக்குத் தனிக் கோயில்கள் இருக்கின்றன. இது ஒன்றே மதுரைக் கோயிலின் பெருமைக்கு சான்று பகரும். பல வகையாலும் மேம்பாடுற்று விளங்கும் மதுரையம்பதியை வந்து வணங்கி அங்கயற்கண்ணி பங்கனின் திருவருளைப் பெற வேண்டியது மக்களின் தலையாய கடன்.

"நீலமாமிடற் றாலவா யிலான்
பாலதாயினர் ஞாலமாள்வரே"

—சம்பந்தர்,

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து [நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே"

—அப்பர்.

# திருமாலிருஞ்சோலை


கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சேர் மாலிருஞ் சோலை
தளர்வில ராகில் சேர்வது சதிரே

—நம்மாழ்வார்

அழகைத் தெய்வ உருவில் வைத்து வழிபடுவது நம்மவர் மரபு. சொக்கர் அல்லது சுந்தரேசர், சுந்தரராஜர் அல்லது அழகர், முருகர் என்று சிவபெருமான், திருமால், குமரக் கடவுள் இவர்களுக்குப் பெயரிட்டு வணங்கினர். திருமால் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள மங்கள சாசனம் பெற்ற திவ்விய தேசங்கள் நூற்றெட்டு. அவைகளில் ஒன்று பாண்டிய நாட்டிலுள்ள அழகர் கோயில் என்று வழங்கும் திருமாலிருஞ்சோலை. இப்பதி மதுரைக்கு வடக்கே 12 மைல் தொலைவில் அழகர் மலைச்சாரலில் இருக்கிறது. சோலைகள் நிறைந்த மலைகளின் பாங்கர் இயற்கையன்னையின் மடியில் எழிலுற விளங்குகிறது. மலையடிவாரத்திலுள்ள கோயில் கடல் மட்டத்திற்கு 900 அடி உயரத்திலிருக்கிறது.

பாண்டிய நாட்டிலுள்ள பதினெட்டு வைணவத் திருப்பதிகளில் ஒன்றான இதற்குப் பல பெயர்கள் உண்டு. அவை உத்தியான சைலம், வனகிரி, விருஷபாத்திரி, இருங்குன்றம், மாலிருங்குன்றம், திருமால்குன்றம், அலங்காரன்மலை, அழகர்மலை, சோலைமலை, பழமுதிர் சோலை, திருமாலிருஞ்சோலை, தென் திருப்பதி முதலியன. இந்த திவ்விய தேசம் மிகவும் பழமையானது. வடமொழி நூல்களிலும் தமிழ் மொழி நூல்களிலும் இதன் பெருமை கூறப்பட்டிருக்கிறது. இங்குள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளின் சிறப்பை அவைகளில் பரக்கக் காண்கிறோம். மகாபாரதத்தில் தருமர் தீர்த்த யாத்திரைக்காக விருஷபாத்திரிக்கு வந்ததாகக் காணப்படுகிறது. வாமன புராணத்தில் இயமன், மார்க்கண்டேயர் இவர்கள் அழகரை வழிபட்டதைப் பற்றியும், நூபுர கங்கையைப் பற்றியும் கூறப்படுகிறது. ஆக்கினேய புராணத்தில் அர்ஜுனன் தீர்த்த யாத்திரையாக இந்த மலைக்கு வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மாண்ட புராணம், வராகபுராணம், ஆலாசிய மான்மியம், ஸ்காந்த புராணம் இவைகளிலும் விவரங்கள் உள்ளன. இவைகளிலுள்ள செய்திகளை யெல்லாம் திரட்டியே 'விருஷபாத்திரி மகாத்மியம்' என்ற தலபுராணம் செய்யப்பட்டிருக்கிறது.

மிகப் பழைய சங்க நூலான பரிபாடலில் "அலங்கும் அருவி ஆர்த்திமிழ் பிழியச் சிலம்பாறு அணிந்த சீர் கெழுதிருவிற் சோலையொடு தொடர்மொழி மாலிருங்குன்றம்" என்று வருகிறது. இத்திருமலையைத் திருமாலின் திருமேனியாகவே கருதி மக்கள் திசை நோக்கித் தொழுதனர் என்றும், கடலும் கானலும் போலவும், சொல்லும் பொருளும் போலவும், பிரியாத கண்ணனும் பலராமனும் இங்கு கோயில் கொண்டிருந்தனர் என்றும் அப் பரிபாடல் விரிவாக உரைக்கின்றது. ஐம்பெருங் காவியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் இம் மலையை வணங்கித் திருவரங்கம் செல்லும் அந்தணன் ஒருவன் கோவலன், கண்ணகி, கவுந்தி இவர்களுக்கு மதுரைக்கு வழி செல்லும்போது இக்கோயிலைப் பற்றிய கூற்று மிகவும் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புண்ணியசரவணம், பவகாரணி, இட்டசித்தி என்ற மூன்று பொய்கைகளும், சிலம்பாறும் உள்ளனவென்றும், இந்தப் பொய்கைகளில் மூழ்க விரும்பவில்லையானால் திருமலையிலுள்ள திருமாலின் திருவடித் தாமரைகளை நினையுங்கள் என்றும், உடனே அவரது கருடக்கொடி தோன்றும் என்றும், அவ்வளவில் உங்கள் பிறவித் துன்பம் கெட்டுப் பரமபதம் அடையலாம் என்ற உறுதியுடன் மதுரைக்குச் செல்லலாம் என்றும் அவ்வந்தணன் அவர்களுக்குக் கூறுகிறான்.



பன்னிரண்டு ஆழ்வார்களில் ஆறு பேர்கள் இந்த திவ்விய தேசத்தை மங்கள சாசனம் செய்திருக்கிறார்கள். பூதத்தாழ்வார் 2 பாசுரங்களும், பேயாழ்வார் ஒரு பாசுரமும், நம்மாழ்வார் 46 பாசுரங்களும், பெரியாழ்வார் 34 பாசுரங்களும், ஆண்டாள் 10 பாசுரங்களும், திருமங்கை யாழ்வார் 30 பாசுரங்களும் ஆக 123 பாசுரங்களை அருளியுள்ளார்கள். பூதத்தாழ்வார் "அணிதிகழும் சோலை அணிநீர் மலையே" என்கிறார். பேயாழ்வார் "வண்டு வளங்கிளரும் நீள்சோலை" என்றுரைக்கிறார், நம்மாழ்வார்,

'பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே
புயல் மழைவண்ணர் புரிந்துறை கோயில்
மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ் சோலை
அயல்மலை யடைவது அது கருமமே'

என்றும், ஒரு பாட்டில் 'அழகர்தம் கோயில்' என்றும் கூறியுள்ளார். பெரியாழ்வார் "மதிள் சூழ் சோலைமலைக்கரசே", என்றும், "சிலம்பாறு பாயும் தென்மாலிருஞ் சோலையே" என்றும், 'அழகன் அலங்காரன் மலை, குலமலை, கோலமலை, குளிர்மாமலை, கொற்றமலை, நிலமலை, நீண்டமலை, திருமாலிருஞ் சோலையதே' என்றும், "உனக்குப் பணிசெய்திருக்கும் தவமுடையேன், இனிப்போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை யழிவு கண்டாய்" என்றும் புகழ்ந்தருளுகின்றார். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள்,

"பைம்பொழில் வாழ்குயில்காள்
மயில்காள் ஒண்கருவிளைகாள்
வம்பக்களங்கனிகாள் வண்ணப்பூவை
நறுமலர்காள்
ஐம்பெரும் பாதகர்காள்
அணிமாலிருஞ் சோலை நின்ற
எம்பெருமானுடைய நிறம்
உங்களுக்கு என்செய்வதே"

என்று பெருமாள்மீது தனக்குள்ள ஆராக் காதலை அறிவிக்கிறார். திருமங்கையாழ்வார்,

"நேசமி லாதவர்க்கும்
நினையாதவர்க்கும் அரியான்
வாசமலர்ப் பொழில்சூழ்
வடமாமதுரைப் பிறந்தான்
தேசமெல்லாம் வணங்கும்
திருமாலிருஞ் சோலைநின்ற
கேசவநம்பிதன்னைக் கெண்டையொண்
கண்ணிகாணுங் கொலோ"

என்று பாடுகிறார்.

திருமாலிருஞ்சோலையை பழமுதிர் சோலையென்று முருகனுடைய ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அருணகிரிநாதர் பழமுதிர் சோலை, குலகிரி, குலமலை, சோலைமலை, சோலையங்கிரி, சோலைவளர் வெற்பு, சோலைவெற்பு என்ற பேர்களை வைத்து 29 திருப்புகழ்ப்பாடல்கள் பாடியுள்ளார். அவைகளிலெல்லாம் குமரன் பெருமையே கூறப்பட்டிருக்கிறது.

அஷ்டப்பிரபந்தங்களை இயற்றிய பிள்ளைப்பெருமாள் அய்யங்கார், அழகர் அந்தாதி பாடியுள்ளார். கவிகாளருத்திரர் என்ற வேம்பத்தூர்ப் புலவர் 'அழகர்பிள்ளைத் தமிழ்' இயற்றியிருக்கிறார். வேம்பத்தூர் கவிகுஞ்சரமையர் என்பவர் 'அழகர் கலம்பகம்' என்ற நூலைச் செய்துள்ளார். ஒரு செய்யுளில் இதை முருகன்தலம் ஆக "பனிரண்டு கண்

ணொருவர் பங்கங்களேந்தான் பதி" என்ற குறிப்பு வருகிறது. இன்னும், **பலபட்டடைச் சொக்கநாதப்பிள்ளை** என்பவர் இயற்றிய "அழகர்கிள்ளைவிடுதூது" என்ற நூலும் இத் தலத்தைப் பற்றியதே. **கவிகுஞ்சர பாரதியார்** 'சோலைமலைக் குறவஞ்சி' என்ற நூலைப் பாடியிருக்கிறார். இராமானுஜ நூற்றந்தாதி, நூற்றெட்டு திருப்பதியந்தாதி, சடகோபர் அந்தாதி, கோயில் ஒழுகு, கந்தபுராணம், என்று இன்னும் பல நூல்களிலும் அழகர் மலைக் கோயிலைப்பற்றிய குறிப்புக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இந்த கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருநாமங்கள் அழகர், கள்ளழகர், அலங்காரர், மாலலங்காரர், சுந்தரராஜர், சோலைமலைக்கரசு, தெய்வ சிகாமணி, பரமசுவாமி, மலையலங்காரர், விருஷாபத்திரி நாதர் என்பன. நாச்சியார் நாமம், சௌந்தரவல்லி, கலியாணசுந்தரவல்லி என்பவை. கள்ளர்கள் நிறைந்த ஊரின் நடுவில் இருப்பதால் கள்ளழகர் என்ற பேர் வந்ததென்பர். அவர் திருவுருவத்தின் அழகால் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கள்வர் என்று கொள்ளலாம் போலும். மூலவருக்கு பரமசுவாமி என்ற திருநாமம். ஸ்ரீதேவி பூதேவி இருபுறமிருக்க பஞ்சாயுதங்களுடன் நின்ற திருக்கோலத்துடன் சேவை சாதிக்கிறார். இவர் கையிலுள்ள சக்கரமானது பிரயோக தோரணையில் இருக்கிறது. உற்சவமூர்த்திக்குத்தான் அழகர் என்ற திருப்பெயர். இந்த மூர்த்திக்கு நூபுர கங்கையின் நீரால்தான் அபிஷேகம் செய்யவேண்டும். வேறுநீரால் செய்தால் கருப்பாக மாறிவிடுகிறார். சுமார் நாற்பது ஆண்டுகளுக்குமுன் இந்த விக்கிரகத்தின்மேல் கோடை வெம்மையினால் வியர்வை நீர்த்துளிகள் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த கோயிலிலுள்ள வலம்புரி விநாயகர், பைரவர் இவர்களின் சந்நிதிகளில் விபூதி வழங்கும் தனிச்சிறப்பு இருக்கிறது. இன்னும் கலியாணசுந்தரவல்லிநாச்சியார், விஷ்வக்சேனர், ஆண்டாள், சுதர்சனர், யோகநரசிம்மர், பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி இவர்களுடைய சந்நிதிகளும் பார்க்கவேண்டியவை. இந்த தலத்தில் பார்க்கவேண்டிய மற்ற கோயில்கள் பல உள்ளன. நாகநாதர் கோயில், இராக்காயி அம்மன் கோயில், அனுமன் கோயில், பஞ்சபாண்டவர் கோயில், கருடன் கோயில், சதிரிள மடவார் கோயில், சக்கரத்தாழ்வார் கோயில், தண்டலைக் கோயில் இவை முக்கியமானவை.

இத்தலத்தின் விருட்சம் ஜோதி விருட்சம் (அரசமரம்). தீர்த்தங்களுள் முக்கியமானது சிலம்பாறு. இதற்குத் தேனாறு, நூபுர கங்கை, மஞ்சிரநதி என்ற வேறு பேர்களும் உண்டு. இது ஒரு சிறு நீர்வீழ்ச்சியாக இருக்கிறது. கோயிலிலிருந்து மலைமேல் சுமார் இரண்டு கல்தொலைவிலுள்ளது. இன்னும் மலையின்மேல் அனும தீர்த்தம், கருட தீர்த்தம், பஞ்சபாண்டவ தீர்த்தம், பெரிய அருவி, உத்தரநாராயணவாபி, வேணுதீர்த்தம், கதலிவாபி, கிருஷ்ணவாபி, நாராயண புஷ்கரணி, அக்கினிவாபி முதலிய தீர்த்தங்களும் உள்ளன.

இந்த கோயிலில் பன்னிரண்டு மாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறும். இதில் மிகவும் சிறந்தது கோடைச் சித்திரைத் திருநாள். அழகர் குதிரைவாகனத்தில் எழுந்தருளி வழியிலுள்ள பல மண்டபங்களில் தங்கி, சித்திரைப் பௌர்ணமியன்று அதிகாலையில் மதுரையில் வையையாற்றில் இறங்குவார். இது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இலட்சக் கணக்கான மக்கள் தரிசித்து மகிழ்வர். இந்த அழகர் திருவிழா ஒன்பது நாட்கள் நடைபெறும், இது தென்னிந்தியாவில் மிகச் சிறந்த திருவிழாக்களின் ஒன்று.

கோயில் அழகாபுரி என்ற கோட்டையில் இருக்கிறது. இதற்கு நான்கு வாயில்கள் உண்டு. தெற்கு மதிலில் உள்ள வாசல்தான் முக்கியமானது. இதன்வழியாக உள்ளே நுழைந்ததும் இடதுபுறம் வடகோடியில் திருமலை நாயக்கர் மண்டபம் உள்ளது. இதில் அவர், அவருடைய அரசி, தம்பி இவர்களின் சிலைகள் இருக்கின்றன. தேர் நிலைக்கு மேற்கில் திருமலை நாயக்கர் அரண்மனை இப்போது இடிந்து பாழடைந்த நிலையில் இருக்கிறது. உள்கோட்டைக்குப் போக இராய கோபுரம், இரண்யன்கோட்டைவாசல் என்ற இருவழிகள். இராயகோபுரவாசல் மூடப்பட்டிருப்பதால் மற்றதன் வழியாகத்தான் உள்ளே போகலாம். சென்றதும் யானை வாகன மண்டபம் இருக்கிறது. திருமாலின்

லீலைகள் தூண்களில் வெகு அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தாண்டிப் போனால் பதினெட்டாம்படி வருகிறது. இதற்கு எதிரில் ஒரு புஷ்கரணியும் மேடும் காணப்படுகின்றன. இந்த மேட்டின் அடியில் தான் முருகன் கோயில் அழிந்து கிடப்பதாகச் சொல்லுகிறார்கள். இன்னும் கோடைத் திருநாள் மண்டபம், கல்யாண மண்டபம், சுந்தரபாண்டியன் மண்டபம், ஆரியன் மண்டபம், மகாமண்டபம், கோயில் அலங்காரன் மண்டபம், முனையதரையன் மண்டபம் இவைகளைத் தாண்டிப்போய் மூலவரைச் சேவிக்கலாம். மேலேயுள்ள விமானம் சோம சுந்தர விமானம். தங்கத்தினால் வேயப்பட்டிருக்கிறது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் விமானத்திற்குப் பொன் வேய்ந்தான் என்ற செய்தி கல் வெட்டால் அறிகிறோம்.

இக்கோயிலை முதலில் நிலை நிறுத்தியவர்கள் தருமதேவதையும் மலையத்துவஜ பாண்டியனும் என்று புராணங் கூறுகிறது. பின்னால் பாண்டிய மன்னர்கள் திருப்பணி செய்தார்கள். இவர்களேயன்றி சோழர், ஈழ அரசர், வாணர், ஒய்சளர், விஜயநகர மன்னர், நாயக்கமன்னர் முதலியவர்கள் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார்கள். இந்தக் கோட்டைக்குள் திருமலைநாயக்கர் கட்டிய அரண்மனையில் கோடைகாலத்தில் அவர் வந்து தங்கி யிருப்பார் என்று சொல்லப்படுகிறது.

இந்த கோயிலிலிருந்து 120 கல்வெட்டுக்களை அரசாங்கத்தினர் படியெடுத்திருக்கிறார்கள். பிராமி, வட்டெழுத்து, தமிழ், தெலுங்கு, கிரந்தம் முதலிய மொழி எழுத்துக்களால் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. இவைகளினால் கோயிலுக்கு அளவில்லாத சொத்துக்கள் இருந்தனவாகத் தெரிகிறது. இராமயணம், பாரதம், புராணங்கள், பிரபந்தங்கள் இவைகளைப் படிப்பதற்காக பல மடங்கள் கட்டப்பட்டு பல மாணிபங்களைக் கொண்டு நடைபெற்று வந்தன என்றும் தெரிகின்றது. இராமனுஜகூடம், குலசேகரன் மடம், திருநாடுடையான் மடம், வாணாதரையன் மடம் முதலியவைகள் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இன்னும் பல திருவிழாக்களுக்காகவும், அபிஷேக ஆராதனைகளுக்காகவும் நிபந்தங்கள் விடப்பட்டிருந்த செய்திகளையும் இவற்றால் அறிகிறோம். விஜயநகரமன்னரான கிருஷ்ணதேவராயர் இங்கு வந்து மூன்று நாட்கள் தங்கி யிருந்தனர் என்றும் தெரிகிறது. இக்கோயிலில் சிற்பம், கட்டிடம், நடனம், இசை, ஓவியம முதலிய பலகலைகளையும் போற்றப்பட்டு வந்திருக்கின்றன. திருமலை நாயக்கரால் செய்யப்பட்ட தந்தப் பதுமைகள் மிகவும் அற்புதமான அழகுபடைத்தவை. அவைகள் கோயிலிலுள்ள பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பழம் பெருமையும் மகிமையும் வாய்ந்த இப்பதியை மதுரைக்குச் செல்பவர்கள் அவசியம்போய் வணங்க வேண்டும்; கள்ளழகரின் திருவருளைப் பெற வேண்டும்.

திருமாலிருஞ் சோலை என்றேன், என்னத்
திருமால் வந்து என்நெஞ்சு நிறையப் புகுந்தான்

—நம்மாழ்வார்.

நம்பிநின்றே னுன்சரணாரவிந்தத்தை
நன்னெஞ்சென்னும்
செம்பிநின்றே பொறித்தே னுனக்காளென்று
தெய்வக்குழாம்
பம்பிநின்றே செறிக்கும்பதம் காணப்
பதறுகின்றேன்
கொம்பிநின்றேன் சொரியுஞ் சோலை
மாமலைக்கொற்றவனே

—அழகரந்தாதி.

சத்தியத்தையும் அஹிம்சையையும் யான் கடைப்பிடித்தொழுக முயற்சி செய்து வருகிறேன். தவறுதல்கள் பல நேர்ந்தாலும் அவை என்னை உரப்படுத்துகின்றனவே யொழிய ஊக்கத்தைக் குறைப்பதில்லை.

—மகாத்மா காந்தி

# திருப்பரங்குன்றம்

பரங்குன்றிற் பன்னிருகைக்
கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக்
கண்டு—சுருங்காமல்
ஆசையா னெஞ்சே
யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே
புகல்.

பாடல் பெற்ற சிவத்தலங்கள் இருநூற்றெழும்பத்தைந்து. அவை சோழ நாடு, பாண்டிய நாடு, மலைநாடு, நடுநாடு, தொண்டைநாடு, ஈழநாடு, வடநாடு முதலியவைகளில் பரவிக் கிடக்கின்றன. பாண்டிய நாட்டிலுள்ளபதிகள் பதினன்கு. அவைகளில் ஒன்று திருப்பரங்குன்றம். இது முருகனுடைய ஆறுபடைவீடுகளில் ஒன்ருகவும் திகழ்கிறது. என்று தொட்டு மதுரையோ அன்று தொட்டு இக் குமரவேள் குன்றமும் பண்டைப் பெரும்பதிகளுள் ஒன்ருக நின்று நிலவுகிறது. இப்பதி மதுரைக்குத் தெற்கே சுமார் ஐந்துகல் தொலைவிலுள்ளது. நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையில், "மாடமலிமறுகில் கூடல் குடவயின்" என்று இது மதுரைக்கு மேற்கே இருப்பதாகக் கூறியுள்ளார். கச்சியப்ப சிவாச்சாரியரும் தமது கந்தபுராணத்துள், "சுடர்பொழி வேலினன் தூய கூடலின் குடதிசையமர்பரங்குன்றை எய்தினன்" என்று அவ்வாறே கூறுகிருர். இவ்வூரிலுள்ள மலை கடல் மட்டத்திற்குமேல் 1050 அடி உயரம் இருக்கிறது. இதைத் திருப்பரங்கிரி, கந்தமாதனம், கந்தமலை என்றும் அழைப்பர். மகம்மதியர் சிக்கந்தர்மலை என்று சொல்கின்றனர். அவர்களுடைய பள்ளிவாசல் ஒன்று மலையின்மேலிருக்கின்றது. 'ஸ்கந்தர்'மலை என்பது 'சிக்கந்தர்'மலை என்று மருவி வழங்கப்படுகிறது என்றும் கருதுகின்றனர்.

இப்பழம்பதியின் பெருமைகளை சங்க நூற்களிலும், தேவாரத் திருமுறைகளிலும் திருப்புகழிலும், கந்தபுராணத்திலும், பின் எழுந்த பல இலக்கியங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. மதுரைக்காஞ்சியென்ற நூலில் "தளிமழை பொழியும் தண்பரங்குன்றில் கலிகொள் சும்மை" என்று, எப்போதும் திருவிழாவின் ஓசையுடைய ஊர் என்று கூறப்பட்டிருக்கிறது. இன்னும், "ஒன்ஞதார்க் கடந்தடுஉமுரவு நீர்மாகொன்ற வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார் கொல்" என்ற கலித்தொகைச் செய்யுளிலும், "சூர்மருங்கறுத்த சுடரிலை நெடுவேல் சீர்மிகு முருகன் தண்பரங்குன்றம்" என்ற அகநானூற்றுப் பாடலிலும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டில் ஒன்ருகிய திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் திருப்பரங்குன்றத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிருர்.

"கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்..."

என்பது அவர் திருப்பரங்குன்றத்தைப்பற்றிக் கூறும் கடைசிப் பகுதி.

இவர் இந்த நூலைப் பாடக் காரணமாக ஒரு வரலாறும் கூறப்படுகிறது. நக்கீரர் சிவபூசையில் வழுவியபோது பூதம் ஒன்று குகையில் இவரைக் கொண்டு போய் அடைக்க, திருமுருகாற்றுப்படையை இவர் பாட முருகன் தோன்றி மலையைப் பிளந்து இவரை விடுவித்தருள்புரிந்தான். நக்கீரர் இருந்து பூசை செய்த இடத்தைப் பஞ்சாட்சரப்பாறை என்பதையும், முருகன் மலையைக் கீறிய பிளவையும் இப்போதும் பரங்குன்றில் காட்டுகின்றனர்.

தேவாரத்தில் திருஞானசம்பந்தர், திருப்பரங்குன்றத்தின் இயற்கையழகைப் புகழ்ந்து பாடுகிருர். அப்பாடல்களின் ஒன்று கீழ் வருவது:—

வளர்பூங் கோங்க மாதவியோடு மல்லிகைக்
குளிர்பூஞ் சாரல் வண்டறை சோலைப்பரங்குன்றம்
தளிர்போல் மேனித் தையல்நல் லாளோ
டொருபாகம்
நளிர்பூங் கொன்றை சூடினன் மேய நகர்தானே.

சுந்தரரும் இப்பதியைப்பற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார். இவர் இத்தலத்திற்கு வந்து வணங்கும்போது அவருடன் சேர, சோழ, பாண்டியரான மூன்று மன்னரும் இருந்தனர் என்பதை "முடியாலுலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த" என்று ஒரு பாடலில் குறிப்பிட்டிருக்கிறார்.

அருணகிரிநாதர் திருப்புகழில் இருபத்தைந்து வண்ணப்பாக்களால் இப்பதியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். கீழ்வரும் சில பகுதிகள் தெரிந்து இன்புறற்பாலன:—

"கண்டின்கனி சிந்துஞ்சுவை பொங்கும்புனல்
தங்கும்பொழில்
கந்தங்கொள்ப ரங்குன்றமர் பெருமாளே."

"மதியுங்கதி ருந்தட வும்படி
உயர்கின்றவ னங்கள்பொ ருந்திய
வளமொன்றுப ரங்கிரி வந்தருள் பெருமாளே"

"சீதள முந்தும ணந்தயங் கும்பொழில்
சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ் சும்பதி
தேவர்ப ணிந்தெழு தென்பரங் குன்றுறை
பெருமாளே"

"மதியுங்கதி ரும்புய லுந்தின
மறுகும்படி அண்டமி லங்கிட
வளர்கின்றப ரங்கிரி வந்தருள் பெருமாளே"

"திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே"

"மனிதனென்றும யோத்திவ ரும்புயல்
மருக னென்றுல கேத்திட வும்பொழில்
வளர்ப ரங்கிரி மேற்றிக ழும்பர்கள் பெருமாளே"

பரிபாடலில் முருகனுக்குரியவையான பாடல்கள் எட்டு. ஒரு பாடலில், "திருமாலும் சிவபெருமானும் அயனும், ஆதித்தர் பன்னிருவரும், அசுவினித்தேவர் இருவரும், திக்குப்பாலகர் எண்மரும், அமரரும், அவுணரும், தெய்வ முனிவரும் நின்னைக்காண மண்மிசை வந்துஉறையும் இடம் திருப்பரங்குன்றம் ஆனபடியால் அது இமயக்குன்றத்தை ஒக்கும்" என்று கூறப்படுகிறது. குறிஞ்சிநிலக்கடவுள் முருகன் என்று இன்னொரு பாடல் சொல்கிறது. மற்றுமோர் பாடலில் முருகனைவழிபடுவோர் நெருப்பையும், இசைக்கருவிகளையும் சந்தனம் முதலிய வாசனைப் பொருள்களையும் அகிற்புகையையும் கொடியையும் ஏந்தி மலர்களையும் குழைகளையும் பூந்துகில்களையும் மணியினையும் வேலினையும் சுமந்து வந்து முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் கடப்பமரத்தைத் துதித்துப்பாடி திருப்பரங்குன்றத்தின் அடியில் மலை தோறும் உறைகின்றனர்; அவர்களுள் தேவர் உலகத்தில் வாழ்வதை யார் வேண்டுவர் என்று பேசப்படுகிறது. இனியும் ஓர் செய்யுளில், பெறுதற்கரிய தேவர்கள் அடையும் இன்பத்தை மக்களும் அடைக என்று திருவருள்புரியும் திருப்பரங்குன்றம் என்று உரைக்கப்பட்டிருக்கிறது.

கச்சியப்பசிவாச்சாரியர் இயற்றியருளிய கந்தபுராணத்திலும், சம்பந்தசரணாலயர் செய்த கந்தபுராணச் சுருக்கத்திலும் இத்தலத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

சேதுப்புராணத்தை எழுதிப் பெரும் புகழ்பெற்ற **நிரம்ப அழகியதேசிகர்** என்பவர் 'திருப்பரங்கிரிப் புராணம்' என்ற செய்யுள் நூல் யாத்திருக்கின்றனர். இதில், பாயிரம் குமரன் உபதேசம், குமரன் தவசு, சிபிவேந்தன் பூதானம், பிரமகூவம், தலவிசேடம், அரிச்சந்திரன், திருவிழா, நற்கீரர், சூரசங்காரம், திருக்கலியாணம் என்ற பதினொரு சருக்கங்கள் உள்ளன. இன்னும் மு. ரா. அருணாசலக் கவிராயர், பரங்கிரிப் பாமாலை, கலித்துறையந்தாதி, பதிற்றுப்பத் தந்தாதி, வெண்பா அந்தாதி, அலங்காரம், மும்மணிக் கோவை, அநுபூதி, கோவை என்ற எட்டு நூல்கள் இயற்றியிருக்கின்றனர். பாடல்கள் இனிமையும் பக்திச்சுவையும் உடையவை. எடுத்துக்காட்டாகக் கீழே ஒரு பாட்டு:—

எத்தனை யோகவி நின்பன்னிரு
செவிக்கேற்றினன் எள்
அத்தனை யேனும் உதவி
செயாய்மெய் அசலத்தனே

பித்தனைத் தந்தை யெனக்கொண்ட
நீயும் பெரும்பித்தனே
பத்தனை யாவர் வெறுப்பா
ரிதையெண்ணிப் பாரினியே

—பரங்கிரியலங்காரம்.

திருப்பரங்குன்றம் மலையின்மேல் மேற்குப் பாகத்தில் காசிவிசுவநாதர் ஆலயம் உள்ளது. அதன் முன்னர் சரவணதீர்த்தம், காசிச்சுனை என்ற இரண்டு சுனைகள் இருக்கின்றன. அதிலுள்ள மீன்கள் மிகவும் வனப்பு வாய்ந்தவை. மலையடி வாரத்தில் உள்ளது மலையிலேயே குடையப்பட்டகோயில். முருகன், திருமால், கணபதி, சிவபெருமான், துர்க்கை முதலிய உருவங்கள் மலைப் பாறையிலேயே செதுக்கப்பட்டவை. அவைகளைத் தாம் இப்போது வழிபடுகிறார்கள். இங்குள்ள இறைவன் பெயர் பரங்கிரிநாதர், பரங்குன்றீசர். அம்பிகையின் பெயர் ஆவுடைநாயகி. திருமாலின் பெயர் பவளக்கனிவாய்ப்பெருமாள். சூரபன்மாதியரை அழித்து, தேவர்களைச் சிறைமீட்டு அவர்களுக்கு வானுலகாட்சி தந்து திருப்பரங்குன்றத்தை முருகன் அடைந்தார். அங்குதான் தேவேந்திரன் மகளான தெய்வயானையை அவர் திருமணம் புரிந்துகொண்டார். நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடியதும், சிபிச்சக்கரவர்த்தி சிவபெருமானுக்கு பூதானம் கொடுத்ததும், அரிச்சந்திரன் வழிபட்டுப் பேறுபெற்றதும் இங்கேதான் என்று தலபுராணம் கூறுகிறது. ஒரு பெண், முருகன் என்ற பேரையே எப்போதும் சொல்லிவந்த காரணத்தால் அவள்மேல் ஐயமுற்ற கணவன் அவள் கைகளில் ஒன்றை வெட்டி வீழ்த்த முருகன் திருவருளால் அந்தக் கை மீண்டும் வளரப்பெற்றது இந்த தலத்தில் என்று கூறுகின்றனர்.

இத்தலத்திலுள்ள தீர்த்தங்கள் சத்திய கூபம், பிரமகூபம், சரவணப் பொய்கை என்பன. ஒவ்வொரு கார்த்திகை தோறும் திரளான மக்கள் மலையை வலம் வந்து முருகனை வழிபடுகின்றனர். ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தில் திருவிழா நடக்கிறது.

திருமூர்த்தங்கள் உள்ள குடைந்தகோயிலின் முன் படிப்படியாக மண்டபங்கள் கீழே வரும் வரையில் உள்ளன. மண்டபங்களின் கற்றூண் சிற்பங்கள் மிகுந்த அற்புதவேலைப் பாடுடையவை. திருமலை நாயக்கர், மங்கம்மாள் இவர்களின் உருவச்சிலைகள் கற்றூண்களில் உள்ளன. கோயிலின் கோபுரமும் அழகுபெற அமைந்திருக்கின்றது.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டில் காணும் ஒரு செய்தி குறிப்பிடத்தக்கது. சாலிவாகன சகாத்தம் 1714-ல் ஐரோப்பிய சேனை ஒன்று மதுரைச் சொக்கநாதர் ஆலயத்தையும், பழனியாண்டவர் ஆலயத்தையும் அழித்து திருப்பரங்குன்றத்தின் முன் மண்டபத்தை யடைந்து கலியாண மண்டபத்தை யடைய எத்தனித்தது. அவ்வமயம் பட்டர்கள் ஒன்று சேர்ந்து குட்டி என்ற ஒருவனைக் கோபுரத்தில் ஏறி கீழே குதிக்கும்படி சொன்னார்கள். அவனும் அப்படியே செய்ய அதைக் கண்ட வெள்ளையர்கள் திரும்பிவிட்டனர். அவன் செய்த வீரச் செயலுக்காக அவன் பெயரால் இறையிலியாக (வரியில்லாமல்) நிலங்கள் அளிக்கப்பெற்றன.

இப்படிப் பல வகையாலும் மகிமைபெற்ற திருப்பரங்குன்றில் உறை சரவணப் பெருமாளை மக்கள் வழிபட வேண்டியது அவசியமல்லவா?

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலஞ் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே

—திருப்புகழ்.

சத்தியத்தாலும் அன்பினாலும் நாம் உலகையாளலாம் என்பது எனது நம்பிக்கை. சத்தியமும் அன்பும் வாழ்க்கை நாணயத்தின் இரு பக்கங்கள் போல்வன.

—மகாத்மா காந்தி.

# மீனாட்சியம்மை

கால்த் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே யுயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச் சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாம்
தோன்ருத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற்
றுரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
முலையாய் முத்தந் தருகவே

—மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பாண்டிய நாட்டைக் கன்னிநாடென்றும், கன்னித் தமிழ் நாடென்றும் கூறும் காரணம் உலகீன்ற அன்னையே கன்னியாக அவதரித்து அரசாண்டது. குலசேகர பாண்டியன் கடம்பவனத்திலிருந்த ஆலவாய் அண்ணலுக்கு கோயில் சமைப்பித்து, மதுரைநகரையும் அமைத்தான். அவன் மகன் மலயத்துவச பாண்டியன். அவனுக்கு மகப்பேறு இல்லாமையால் வேள்வியொன்று செய்தான். அந்த வேள்வித் தீயில் மூன்று வயதுள்ள மூன்று தனங்களுள்ள ஒரு பெண் தோன்றினுள். பரஞ்சோதி முனிவர்,

"தெள்ளமுத மென்மழலை சிந்தவிள மூரல்
முள்ளெயி றரும்பமுலை மூன்னுடைய தோர் [பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்ருள்
என்ளரிய பல்லுயிரு மெவ்வுலகு மீன்ருள்"

என்று திருவிளையாடற் புராணத்தில் கூறுகிருர். மேலும்,

"பரையாதி விருப்பறிவு தொழிலாகி
யுலகமெலாம் படைத்துக் காத்து
வரையாது துடைத்துமறைத் தருளியவை
நின்றுந்தன் வடிவுவேருய்
உரையாதி மறைகடந்த வொருமுதல்வி
திருமகளா யுதித்தற் கிந்தத்
தரையாளு மன்னவன்செய் தவமிதுவோ
வதற்குரிய தவந்தான் மன்னே"

என்றும் அவரே, பராசத்தி, ஆதிசத்தி இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் ஐவகைச் சத்திகளாகி எல்லா உலகங்களையும் படைத்து, காத்து அழித்து, மறைத்து அருளும் ஒப்பற்ற தேவியைத் திருமகளாகக் கொள்ள பாண்டியன் என்ன தவம் செய்தான் என்று கூறுகிருர். சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டல் ஐவகைச் சத்தியாகி நிற்றலை "ஈறிலா தவளொருத்தியே யைந்தொழிலியற்ற வேறு வேறு பேர் பெற்றென" என வேருெரு இடத்திலும் கூறியுள்ளார். இந்த திருமகட்கு தடாதகைப் பிராட்டியென்று பெயர்சூட்டி மன்னன் வளர்த்தனன். பின்னர் அந்த தேவிக்கு முடிசூட்டப் பெற்று பாண்டி நாட்டை ஆண்டு வந்தாள். திசையெங்கும் படையுடன் சென்று வெற்றிக்கொடி நாட்டி கயிலையையடைய எம்பெருமான் வர அவரைக் கண்டதும் நாணமுற்றுத்தலை குனிந்தாள். இறைவனும் சோமவாரத்தில் மதுரைக்கு வந்து மணம்புரிந்து கொள்வதாகச் சொன்னுன். அவ்வாறே வந்து திருமணம் புரிந்து சோமசுந்தர பாண்டியன் என்னும் பெயரோடு அரசேற்று அருளினுன். இவ்வாறு அம்மையும் அப்பனும் மக்கள் உய்யும் பொருட்டு மதுரையை அரசாண்ட காரணத்தாலே அப்பதிக்குப் பெருமையும், மகிமையும் உண்டாயிற்று.

மீனாட்சியம்மையைத் தங்கள் குலதெய்வமாகப் பாண்டிய மன்னர்கள் வழிபட்டனர். அதனுலேயே தங்களுக்கு மீன் கொடியையும்,

ஏற்படுத்திக்கொண்டார்கள். நாயக்க மன்னர்களும் மீனாட்சியம்மையிடம் அளவிறந்த பக்தியுடன் இருந்தனர். மதுரைக் கோயிலில் திருமலை நாயக்கர் முன்னிலையில் குமரகுருபர சுவாமிகள் தம்முடைய "மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்" என்ற நூலை அரங்கேற்றினார். "தொடுக்கும் கடவுள் பழம் பாடல்... என்ற பாட்டில் "எறிதரங்கம் உடுக்கும் புவனங்கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே" என்று மனமுருகப்பாடுகையில் மீனாட்சியம்மை ஒரு சிறு பெண்ணாகத் தோன்றி திருமலை நாயக்க மன்னரின் கழுத்திலுள்ள முத்துமாலையை எடுத்து குமரகுருபர அடிகளார் கழுத்திலிட்டு மறைந்தனள்.

சத்தி பீடங்கள் அறுபத்து நான்கு உண்டென்று தேவி பாகவத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று மதுராபுரியென்பதை "மூவுலகினுட் சிறந்தன சத்திபீட மூவிரு பத்து நான்கு அவற்றின் முற்பீடம் மாடமோங்கிய மதுரை" என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது. இது போகத்தையும் வீடுபேற்றையும் வேண்டுவார் வேண்டிய சித்திகளை யளிக்கவல்லது என்றும் கூறப்படுகிறது.

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பது பழமொழி. மனித உறுப்புக்களில் கண்ணைத் தவிர மற்றவை எந்த நிலையிலும் மாறுபாடு அடைவதில்லை. ஆனல் கண்மாத்திரம் வெவ்வேறு தோற்றங்களுடனும் காணப்படுகின்றது. ஆத்திரம், கோபம், துக்கம், சோகம், வீரம், மகிழ்ச்சி, கருணை இத்தகைய நிகழ்ச்சிகள் மனிதனுக்கு உண்டாகும்போது அவன் கண்களினின்றே தெரிந்து கொள்ளலாம். மீன் மற்ற பிராணிகளைப்போல் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிப்பதில்லை. முட்டைகளைத் தன் கண்ணால் பார்த்த உடனே அவைகள் குஞ்சுகள் ஆகிவிடும் என்பர். அதேபோன்று உலகீன்றதேவி மக்களாகிய நம்மீது வைத்த பெருங் கருணையால் அவளுடைய திருக்கண்களால் பார்த்து அருள்பாலிக்கிருள். அதனுல்தான், அவளுக்கு மீனாட்சி (மீன்போன்ற கண்ணை யுடையவள்) என்று பேர் வழங்கி வருகிறது. திருஞானசம்பந்தர் மதுரைநகர் வந்து கோயிலைக் குறுகியவுடன் "பெர்ங்கழல் உருவன் பூதனுயகனல் வேதமும் பொருள்களும் அருளி அங்கயற்கண்ணி தன்னெடும் அமர்ந்த ஆலவாய் ஆவதும் இதுவே" என்று அம்மையின் பேரை அழகுற அமைத்துப் பாடுகிருர்.

எங்கெல்லாம் மதுரையைப்பற்றி நூல்களில் சொல்லப்படுகிறதோ அங்கெல்லாம் மீனாட்சிசுந்தரேசர் இவர்களின் பெருமை பேசப்பட்டிருக்கும். குமரகுருபரரின் 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' ஒரு சிறந்த பக்தி நூல். மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம் என்ற நூல்களும் இந்த அம்பிகையைப்பற்றியனவே. இரட்டை மணிமாலையின் பாடல் ஒன்று கீழ்வருவது:—

"நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி
முண்டு நயந்த சில
பாவுண் டினங்கள் பலவுமுண்
டேபஙகிற் கொண் டிருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா
டவிப்பசுந் தேனின் பைந்தாட்
பூவுண்டு நாரொன் றிலையாந்
தொடுத்துப் புனைவதற்கே."

இனி, மீனாட்சியம்மை குறம் என்ற நூலில் "வைத்த பகிரண்டமெனும் மணற்சிற்றில் இழைத்து இழைத்து ஓர் பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப் பாடுவனே" என்று வருகிற செய்யுள் மிகவும் அழகானது. இப்படிப் பல வகையாலும் சிறந்த மகிமையுடன் திகழும் மதுரைச் சொக்கநாதரின் அறப்பெருந் துணைவியான அங்கயற்கண்ணம்மையின் அடிமலர்தொழுது உய்வோமாக.

"வேதியா வேதகீதா விண்ணவ
ரண்ணுவென்றென்
ருேதியே மலர்க டூவியொருங்கு
நின்கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய்
படர்சடை மதியஞ்சூடும்
ஆதியே யாலவாயி லப்பனே
அருள் செய்வாயே"

—திருநாவுக்கரசர்

# திருநாவுக்கரசர்



உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் இன்பத்தையே விழைகின்றன. உலகப் பொருள்கள் மேல் வைக்கும் ஆசை இன்பம் போன்றதொன்று தருவது; அது நிலையானதன்று; அதைச் சிற்றின்பம் என்பர். இறைவனிடம் பற்று வைத்து, அவன் திருவடியடைந்து துய்க்கும் இன்பத்தைப் பேரின்பம் என்பர். இறைவனை அடையும் வழிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. அவற்றைத் தாசமார்க்கம் சத்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று இன்னொரு வகையாலும் கூறுவர். தாசமார்க்கம் என்பது ஆண்டவனை ஒரு முதலாளியாகவும் தான் ஒரு வேலைக்காரனாகவும் வழிபடுவது. சத்புத்திர மார்க்கத்தில் இறைவனைத் தந்தையாகவும் தான் ஒரு மைந்தனாகவும் பாவித்து ஒழுகுவது. சகமார்க்கமாவது பரம்பொருளை ஒரு தோழனாகக்கொண்டு பரவுவது. சன்மார்க்கத்துள் கடவுளைக் குருவாகவும்தான் ஒரு மாணவனாக எண்ணிப் போற்றுவது. இக்கடைசி மார்க்கத்தை நாயக நாயகி பாவம் அல்லது தலைவன் தலைவி என்ற முறையால் வணங்குவது என்றும் ஆன்றோர் கூறுவர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் இந்த நால்வர் வரலாற்றையும் கூர்ந்து நோக்கினால் இந்த நான்கு மார்க்கங்களும் அவர்கள் வாழ்க்கையால் விளங்கும்.

தாசமார்க்கமான ஆண்டான் அடிமை என்ற வழி நின்று பேறு பெற்றவர் அப்பரடிகள். சோழநாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையேயுள்ள நடுநாடான திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரில், சைவ வேளாளர் மரபிலே, குறுக்கையர் குடியிலே, புகழனார் மாதினியார் என்ற இருவருக்கும் திருமகனாத் தோன்றினார், மருணீக்கியார் என்பது இவரது பிள்ளைத் திருப்பெயர். இவருக்குத் திலகவதியார் என்ற ஓர் தமக்கையுமுண்டு. அவ்வம்மையாரைக் கலிப்பகையார் என்ற சேனாதிபதிக்கு மணம் செய்விக்க முடிவு செய்தனர். போர் மேற்சென்ற சேனாதிபதியார் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு பெற்றார். அதற்குள் திருவாமூரில் புகழனார் சிவ

இடையருப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு
முழவாரத்திண்
படையருத் திருக்கரமுஞ்
சிவபெருமான் றிருவடிக்கே
பதித்த நெஞ்சு
நடையருப் பெருந்துறவும்
வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடற்
றொடையருச் செவ்வாயுஞ்
சிவவேடப் பொலிவழகுந்
துதித்து வாழ்வாம்

—காஞ்சிப்புராணம்

பதமடைந்தார். அவருடன் மாதினியாரும் உயிர் விடுத்தார். கலிப்பகையாரைக் கணவனாக எண்ணிய காரணத்தால் திலகவதியார் உயிர்துறக்கத் துணிந்தார். அப்படிச் செய்யின் தம்பியார் தம் உயிரைப் போக்கிக் கொள்வதாகக் கூறினர். தம்பியார் உயிர் வாழ வேண்டும் என்ற பெருங் கருணையால் உயிர் தாங்கித் தவக்கோலம் பூண்டு அவருக்குத் தாயும் தந்தையுமாக நின்று அவரைக் கல்வி அறிவொழுக்கங்களிற் சிறந்தவராக்கினர். மருணீக்கியார் சமணசமய உண்மையை அறிய விரும்பி பாடலிபுத்திரம் சென்று அச் சமயத்தை மேற்கொண்டார். சமண சாத்திரங்கள் கற்று புத்தர்களை வாதில் வென்று தருமசேனர் என்ற பட்டமும் பெற்ருர்.

திலகவதியார் தன் தம்பியார் சமண சமயஞ் சார்ந்ததைக் கண்டு மனம் வருந்தித் திருவதிகைக்குச் சென்று வீரட்டானேச்சுரர் கோயிலில் திருத்தொண்டு செய்து வழிபட்டு வருவாராயினர். தருமசேனருக்குச் சூலை நோய் கண்டது. சமணர்கள் அதைத் தீர்க்க முடியாமல் கைவிட்டனர். தருமசேனர் பாடலிபுத்திரம் விட்டுத் திருவதிகைக்கு வந்து திலகவதியார் திருமடத்தை யடைந்தார்; தமக்கையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அம்மையார், திருநீற்றை அஞ்செழுத்தோதித் தம்பிக்களித்தார். பின்னர் இருவரும் திருக்கோயிலுக்குச் சென்றனர். இறைவன் திருவருளால் செந்தமிழ் மாலை சாத்தும் உணர்வெய்தி "கூற்ருயினவாறு விலக்ககிலீர்" என்று தொடங்கும் பதிகம் பாடினர். சூலைநோய் தவிர்ந்தது. "இனிய செந்தமிழ்ப் பதிகம் பாடியதால் திருநாவுக்கரசு என்று நின் பெயர் நிலைபெறுவதாக" என்று வாஞெலியொன்று கூறியது.

திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்குத் திரும்பியதையறிந்த பாடலிபுத்திரச் சமணர்கள் அரசன் மகேந்திரவர்மனிடம் சென்று திருநாவுக்கரசரைத் துன்புறுத்துமாறுவேண்டினர். அதற்கு இணங்கிய அரசன், ஆளுடைய அரசரை அழைத்துவரும்படி அமைச்சர் முதலியோரை அனுப்பினுன். திருநாவுக்கரசர் "நாமார்க்கும் குடியல்லோம்" என்று தொடங்கும் பதிகம் பாடினுர். இதை யறிந்த மன்னன் சமணர்களின் தூண்டுதலின் பேரில் நீற்றறையிலிடுவித்தான். "மாசில்வீணையும்" என்ற பதிகம் பாடி ஊனம் ஒன்றுமில்லாதிருந்தார். பால்சோருக்கி நஞ்சு கலந்து கொடுத்தனர். அதுவும் அவரை ஒன்றும் செய்யவில்லை. யானையை ஏவிக்கொல்ல முயன்றனர். "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்ற பதிகம் பாட, யானை அவரை வலம் வந்து திரும்பியது. கடைசியாக நாவுக்கரசரைக் கல்லிற் கட்டிக் கடலில் போட்டனர். "சொற்றுணை வேதியன்... கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற பதிகம் பாட, அக்கல்லே புணையாய் மிதப்பத் திருப்பாதிரிப் புலியூரில் கரையேறினர். அப்பதியில் கோயில் கொண்டுள்ள பெருமானை வணங்கிப் பதிகம் பாடி திருவதிகை சேர்ந்தனர். பின்னர் சில தலங்களை வணங்கி திருப்பெண்ணுகடத்தில் திருத்தூங்கானை மாடம் என்னும் திருக்கோயிலுக்குச்சென்று "பொன்னுர் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்" என்ற பதிகத்தில் "மின்னுரு மூவிலைச்சூலம் என் மேல் பொறி" என்றும், "இடபம் பொறித்தென்னை ஏன்றுகொள்" என்றும் பாடி இறைவன் திருவருளால் இடபக்குறியும் சூலக்குறியும் தம் தோளில் பொறிக்கப் பெற்ருர்.

பின்னர், சீகாழியில் அம்மையாரால் சம்பந்தர் ஞானப்பால் ஊட்டப் பெற்ற செய்தி கேட்டு அவரைக் காண அங்கு சென்ருர். முத்தமிழ் விரகரும் அவரை எதிர்கொண்டு "அப்பரே" என அழைத்தார். பிறகு சில தலங்களை வணங்கி விட்டு அப்பர் திருச்சத்திமுற்றம் வந்தடைந்தார் "கோவாய் முடுகி" என்ற பதிகத்தில் "பூவார் அடிச்சுவடு என் மேல் பொறித்துவை" என்று விண்ணப்பிக்க, நல்லூரில் இறைவனடிச் சுவட்டை அவர் முடிமேற் பொறித்தருளப் பெற்ருர்.

பின்பு திருநாவுக்கரசர் திங்களூர் சென்ருர். அப்பூதியடிகள் என்ற அந்தணர், திருநாவுக்கரசர் பேரால் தண்ணீர் பந்தர் அமைத்திருப்பதைக் கண்டு அவர் இல்லம் சென்ருர். அவர் இவருக்கு அமுது செய்விக்க ஏற்பாடு செய்தார். அப்பூதியடிகளாரின் மகன் வாழை இலை அரியச் சென்றவன் பாம்பு தீண்டி மாண்டான். அதை யறிந்த அப்பர், அப் புதல்வன் உடலைத் திருக்கோயில் இறைவன் முன் கொணரச் செய்து "ஒன்றுகொலாம்" என்று பதிகம் பாட அம்மைந்தன் உயிர் பெற்றெழுந்தான். பல தலங்களை வணங்கி

திருப்புகலூரில் முருகநாயனர் மடத்தில்வந்து தங்கி, சம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீல நக்கர் முதலிய அடியார்களும் வர உடன் உறையும் பயன்பெற்ருர் ஆளுடைய அரசும்.

சம்பந்தரும் அப்பரும் பல தலங்களுக்குச் சென்று திருவீழிமிழலையை அடைந்தனர். நாட்டில் பஞ்சம் ஏற்பட்டமையால் உடனிருந்த அடியார்கள் வருந்திஞர்கள். இறைவன் திருவருளால் இருவருக்கும் நாள்தோறும் படிக்காசு கிடைத்தது. அடியவர்க்கமுது செய்யும் பணியும் முட்டின்றி முடிந்தது. இருவரும் இன்னும் சில தலங்களை வணங்கி திருமறைக்காடு சேர்ந்தனர். அவ்வூர்க்கோயிலின் கதவு வெகு காலமாக மூடப் பெற்றிருந்தது. அப்பமூர்த்திகள் "பண்ணினேர் மொழியாள்" என்ற பதிகம் பாடக் கதவும் திறந்தது. இறைவனை இருவரும் வழிபட்டனர்.

சம்பந்தர், மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் இவர் வேண்டுகோட்கிணங்கி பாண்டி நாடு சென்ருர். வாகீசர் பல தலங்களை வணங்கிப் பழையாறை வடதளிக்கு வந்தார். சமணர்கள் சிவலிங்கத்தை மறைத்து அதைத்தம் பள்ளியாக்கி யிருப்பதை அறிந்தார். சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல்லது உணவருந்துவதில்லை யென்று உண்ணு விரதம் இருந்தார். இறைவன் சோழமன்னன் கனவில் இந்நிலையை உணர்த்த, அரசனும் சமணர் மறைத்திருந்ததையகற்றிப் புது விமானம் அமைத்து நாவரசர் சிவலிங்கப் பெருமானை வணங்கும்படி வழியமைத்தான். பின்னர், திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லுகை கையில் தாண்டகவேந்தர் பசியாலும் நீர் வேட்கையாலும் வருந்திஞர். சிவனுர் சைவ வேதியர் கோலத்தில் பொதிசோறும் நீரும் கொண்டுவந்து கொடுத்து அப்பரின் களைப்பை நீக்கிப் பின் மறைந்தார்.

பின்னர்ப் பல தலங்களை வணங்கி திருக்காளத்தியடைந்தார். அவருக்குத் திருக்கயிலையைக் காணும் பேரவா எழுந்தது. புறப்பட்டார்; வாரணசிவரை சென்ருர். காடும் மலையும் கடந்து கைகால்கள் தேய்ந்த பின்பும் மார்பினுல் புரண்டு புரண்டு சென்று, அதுவுஞ் செய்ய இயலாமல் அசைவற்றுக் கிடந்தார். கயிலைநாதன் ஒரு முனிவர் வடிவில் தோன்றி, "திருக்கயிலை மக்கள் காணும் தகையதன்று; மீண்டுச் செல்லும்," என்று சொல்ல, அப்பர் பெருமான், "ஆளுநாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்ருர். இறைவன் மறைந்து வானத்தினின்றும் "நாவுக்கரசனே எழுந்திரு" என்று கூற, இழந்த உறுப்புக்கள் வரப்பெற்று நல்ல உடம்பொடு எழுந்தார் நம்முடைய ஆண்ட அரசர். கடவுளை நோக்கி நாயனர்

அண்ண லேயெனை யாண்டுகொண்
டருளிய வமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி
வேதநா யகனே
க்ண்ணி னுற்றிருக் கயிலையி
லிருத்தநின் கோல
நண்ணி நான்ருெழ நயந்தருள்
புரியெனப் பணிந்தார்.

இறைவன் ஒரு குளத்தைக் காட்டி அதில் மூழ்கித் திருவையாற்றிலே திருக்கயிலைக் காட்சியைக் காணுமாறு பணித்தார். அப்பரும் அவ்வாறே செய்ய திருவையாற்றில் ஒரு திருக்குளத்திலிருந்தும் கரையேறிஞர். தாம் கண்ட எல்லாம் சிவமும் சத்தியுமாய்க் கர்ட்சியளித்தன; திருக்கோயில் கயிலாயமாக விளங்கியது. பல பதிகங்கள் பாடித் துதித்தார்.

பிறகு பல தலங்களை வணங்கி திருப்பூந்துருத்திக்குச் சென்று அங்கு திருமடம் அமைத்துத் தங்கியிருந்தார், பாண்டி நாடு சென்ற சம்பந்தர் அப்பரைத் பார்க்கப் புறப்பட்டு வந்தார். இதையறிந்த அப்பர், எவருக்கும் தெரியாத வகையில் எதிர் சென்று, சம்பந்தர் எருந்தருளிவரும் பல்லக்கைச் சுமந்து நடந்தார். பூந்துருத்தி எல்லை வந்ததும் சம்பந்தர் "அப்பர் எங்குற்ருர்" எனக் கேட்டார். வாகீசப் பெருந்தகை, "உம்மடியேன் உம்மடிகள் தாங்கிவரும் பெரும் வாழ்வு வந்து எய்தப்பெற்று இங்குற்றேன்" என்ருர். காழிப் பிள்ளையார் பதைபதைத்துப் பல்லக்கினின்றும் இறங்க, இருவரும் ஒருவரையொருவர் வணங்கி, அளவளாவி இன்புற்றனர். பாண்டிநாட்டுச் செய்திகளை யெல்லாம் பரசமய கோளரியின் வாயிலாக அறிந்து, அந்நாட்டிற்குச் சென்று பல தலங்களையும் வழி

பட்டு நாவின் மன்னர் திருப்புகலூர் வந்து தங்கினார். திருக்கோயிலில் உழவாரத் திருத்தொண்டு செய்து வந்தார். பொன்னும் மணியும் கல்லும் புல்லுடன் கலந்து தோன்றின. அவைகளையெல்லாம் ஒன்றாகக் கருதி உழவாரத்திலே ஏந்தி எறிந்து விட்டார். தேவலோகப் பெண்மாதர் அவர்முன் தோன்றி மயக்கமுயன்றனர். மனநிலை கலங்காது இறைவன் திருவருளே பாடி நின்றது அவர் திருவாய். கையோ உழவாரப் பணிபுரிந்து கொண்டிருந்தது. அம்மாதரும் ஒன்றும் செய்ய முடியாது போய்விட்டனர். சில காலம் சென்ற பின் அவர், மாதொரு பாகனார் மலரடியடையத் திருவுளங் கொண்டார். "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ" என்ற கடைசித் திருத்தாண்டகத்தை யருளி, "நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக் கீழ்" அடைந்தார்.

இவருக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. மருணீக்கியார் என்பது பிள்ளைத் திருநாமம். திருநாவுக்கரசர் என்பது இறைவன் கொடுத்த பெயர். அப்பர் என்று சம்பந்தர் இட்டழைத்தது. வாகீசர், ஞானஅரசு, சொல்வேந்தர், சொற்கோ, தாண்டக வேந்தர், தாண்டகச் சதுரர், ஆண்ட அரசு, ஆளுடைய அரசர், தமிழாளியார் முதலிய பெயர்களாலும் அழைக்கப்படுவர்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் "திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரயன் தன் அடியார்க்கு மடியேன்" என்கிறார். அப்பர் வரலாறு எழுதப்புகுந்த சேக்கிழார்,

**திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ**
**வருஞானத்தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்**
**பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்**
**ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணுமை**
**யுணராதேன்.**

என்று சொல்கிறார். இப்படி நாவுக்கரசரின் பெருமையை அளவிட்டுக் கூறவும் அஞ்சுகிறார். முடிக்கும்போது "அடியனேன் ஆதரவால் ஆண்ட அரசின் சரிதப்படியை யான் அறிந்தபடி பகர்ந்தேன்" என்று வெகு அடக்கமாகக் கூறுகிறார். சிவப்பிரகாசர் "பெற்றால் நினைப்பெற்றவர் பேர்ப்பெறலும், பிறப்பதுண்டேல் நற்றாரணியில் நினைப்போற் பிறப்பது நல்லகண்டாய்" என்று உரைக்கின்றார்.

அப்பரடிகள் வாழ்ந்தது முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் ஆட்சிக்காலம். அதாவது கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இவர் எண்பத்தொரு ஆண்டு நிலவுலகில் திகழ்ந்தார். ஒரு சித்திரைச்சதய நன்னாளில் இறைவன் திருவடிநீழல் எய்தினர். இவருடைய வாழ்க்கை மக்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் படிப்பினையாகவும் இலங்குகிறது.

இளமையில் நன்றாகக் கல்வி கற்றார். 'செழுங்கலையின் திறங்களெல்லாம் முந்தை முறைமையிற் பயின்று" என்று சேக்கிழார் கூறுகிறார். கற்றபயன் இறைவன் நற்றாள் தொழுவதற்கு என்பதை வாழ்க்கையில் காட்டினர். சமய சாத்திரங்களையெல்லாம் நன்கு ஓதியதால்தான் இவர் சமண சமயத்திலிருந்த போது தேரர் என்ற பௌத்தர்களை வென்று தருமசேனர் என்ற பட்டம் பெற்றார்.

கல்விச் செல்வத்துடன் பொருட்செல்வமும் படைத்தவர். "மேதக்க நிலை வேளாண் குலத்தின் கண்வரும் பெருமைக் குறுக்கையர் தங்குடி விளங்கும்" என்கிற சேக்கிழார் வாக்கு இதை வலியுறுத்துகிறது. கலிப்பகையார் என்னும் சேனாதிபதிக்குப் பெண் கொடுக்கும் தகுதியுடைய உயர்குடிப் பெருமகனார். ஆனால் அவர் "ஓடும் பொன்னும் ஒக்கவே" நோக்கினர். உழவாரப் படையில் கற்களுடன் பொன்னும் மணியும் பொய்கையில் வாரி எறிந்தார்.

நாயனார் பிறர் துயரங்காணப் பெருந்தகையாளர்; தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். அரவந்தீண்டியிறந்த அப்பூதியடிகளின் அருமைத் திருமகனைப் பதிகம்பாடி உயிர்ப்பித்தார். சாதிமத பேதமில்லாச்சான்றோர். அந்தணராம் அப்பூதியடிகளுடன் அமுதுண்டார்.

இவர் அஞ்சாநெஞ்சமுடைய வீரர்; அசைக்க முடியாத மன உறுதியுடையவர். "ஆற்றேனடியேன்," "அஞ்சேலு மென்னீர்" என்று முதலில் அச்சத்துடன் பாடினார். பின்னால் அரசன் அழைத்தபோது "நாமார்க்கும் குடியல்லோம்" என்று பாடினார். "என்று நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்," "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவரு

வதுமில்லை," "வானம் துளங்கிலென், மண் கம்ப மாகிலென்மீனம்படிலென், விரிசுடர் வீழிலென்" என்று பாடுகிறார். பாரதியாரும் இதையே "உச்சிமீது வான்இடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை"யென்று சொல்கிறார்.

தாண்டகவேந்தர் மன உறுதி மிக்க மாசில்லா மாணிக்கம். இவரைக் கயிலைக்குப் போகவேண்டாமென்று தடுத்தும் "ஆளு நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என மறுத்தார். அவரை அரசன் பல இன்னல்களுக்குட்படுத்தியும் நிலைகலங்காச் சிந்தையராய் எம்பெருமான் திருவருளால் உய்ந்தார். நஞ்சுண்டும் உயிருடன் இருந்தார். "நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டு போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியார் கூற்று நாவுக்கரசர் வரலாற்று நிகழ்ச்சிக்கு மிகவும் பொருந்தியது. சிவலிங்கம் சமணரால் பழையாறை யென்னும் ஊரில் மறைக்கப்பட்டிருந்தபோது அந்தப் பெருமானைக் கண்டாலல்லது உண வருந்துவதில்லை யென்று சபதம்கொண்டார். அதில் வெற்றியும் கண்டார். உண்ணாவிரத மிருந்த முதல் சத்தியாக்கிரகி இவரன்றோ!

ஆலய வழிபாட்டின் அவசியத்தை மற்ற நாயன்மார்கள் போன்று தாமும் பல தலங்களுக்குச் சென்று பதிகம்பாடி மக்களுக்கு வழி காட்டினர். "முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்" என்றும், திருவங்கமாலையில் உடலின் ஒவ்வொரு உறுப்பும் இறைவனைப் பணிதற்கே என்றும் கூறியிருக்கிறார். உழவாரத்திருத்தொண்டு செய்து கோயிலிலுள்ள புல், முள் இவைகளையெல்லாம் அகற்றினார். ஆலய வழிபாடு எப்படிச் செய்ய வேண்டும் என்பதை "நிலைபெறுமாறு எண்ணுதியேல்" என்ற பாடலில் விளக்கியிருக்கிறார். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர். மக்களுக்காகக் கடவுளிடம் மிகவும் பரிந்துபேசுகிறார், கீழ்க்காணும் பாடலில்.

**"மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்**
**கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே**
**புனிதன் பொற்கழல் ஈச னெனுங்கனி**
**இனிது சாலவு மேசற் றவர்கட்கே"**

ஆண்டவன் அடியவர்க்கினியவன் என்கிறார். "என்னிலாரு மெனக்கினியாரில்லை... என்னிலும் இனியான்...ஈசன் என்கிறார். "கனியினும் கட்டிபட்ட கரும்பினும் பனி மலர்க்குழல் பாவை நல்லாரினும் தனி முடி கவித்தாளும் அரசினும் இனியன் தன்னடைந்தார்க்கு" என்று கூறுகிறார். தன்னைத் தொழுபவரையும், தொழாது பொழுது போக்குகிறவர்களையும் இறைவன் கணக்கெழுதி வைக்கிறார் என்பதை,

**"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்**
**றழுது காமுற் றரற்றுகின் றாரையும்**
**பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்**
**எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே"**

என்று கூறி நம்மை எச்சரிக்கிறார்.

இன்னும் நமக்குப் பல அறவுரைகளையும் அறிவுரைகளையும் தமது பாடலில் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். "மாட்டைத்தேடி மகிழ்ந்து நீர் நும்முளே நாட்டுப் பொய்யெல்லாம் பேசிடும் நாணிலீர்" என்று பொய் பேசிப் பொருள் சேர்ப்பதை இழித்துக் கூறுகிறார்." "நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே" என்று கண்டிக்கிறார். "வேம் பிணைப்பேசி விடக்கினை ஓம்பி" என்று உடல் வளர்க்கப் பேசுவதை வெறுக்கிறார். வெளி வேடம் கூடாதென்பதை "கோலும் புல்லும் ஒரு கையிற் கூர்ச்சமும் தோலும் பூண்டு துயரமுற்றென்பயன்" என்று சொல்கிறார். வஞ்சகர் பூசைக்கு இறைவன் அஞ்சுகிறான் என்பதை "பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பர் அவர் தமை நாணியே" என்கிறார். ஆனால் "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே புக்குநிற்பன் பொன்னார் சடைப் புண்ணியன்" என்றும், "பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க்கருள் செய்வான்" என்றும் உண்மை அடியார்க் கெளியவன் ஆண்டவன் என்பதைக் காட்டுகிறார். இறைவனைப்பாடிப் புகழ்ந்து வணங்காதவர்கள் "ஆக்கைக்கே இரைதேடி அலமந்து காக்கைக்கே இரையாகிக் கழிவரே" என்றுரைக்கின்றார். கடவுளைப் பார்த்து, "நீ என்னை ஏற்றுக்கொண்டாய். உலகம் எல்லாம் சாட்சியாக இருக்கும்போது இனி இல்லையென்று சொல்ல முடியாது" என்பதை "ஏன்று கொண்டாய் என்னை எம்பெருமான் இனி

அல்லம் என்னில் சான்றுகண்டாய் இவ்வுலக மெல்லாம்'' என்று சட்ட திட்டம் பேசுகிருர். ஒரு தெய்வ வழிபாடு வேண்டும்; சிறு தெய்வ வழிபாடு கூடாது என்கிருர். "ஒருவனுய் உலகேத்த நின்றநாளோ," என்றும் "சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்" என்றும் கூறுகிருர். கடவுள் வல்லமையையும், திருநீற்றையும், திருவைந்தெழுத்தையும் பல பாடல்களில் சொல்லியிருக்கிருர்.

நகைச்சுவைப் பாடல்களும் அப்பர் தேவாரத்தில் காணலாம். "நின்பணி பிழைக்கில் புளியம்வளாரால் மோதுவிப்பாய்" என்ருர். இன்னும்,

**"கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்**
**கிடந்தபாம் பவனேயோர் மயிலென் றையுறக்**
**கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே**
**கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே"**

என்றும் பாடியுள்ளார்.

அகப்பொருட் பாடல்களை வெகு அழகாக அருளியுள்ளார். திருப்பழனத்தேவாரத்தில் "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்" என்று குயில் விடுதூதாகவும், திருமருகல் தேவாரத்தில் "ஓது பைங்கிளி......" என்று கிளிவிடுதூதாகவும் பாடுகின்ருர். தலைவன் பிரிவாற்ருமையை "வனபவள வாய் திறந்து" என்ற திருக்கழிப்பாலைப் பதிகத்திலும், தலைவி தலைவனை யடைதலை "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்ற பாடலிலும் கூறியுள்ளார்.

அப்பர் தேவாரத்தில் பல பழமொழிகளைக் காண்கிருேம். அவை பின்வருவன:—

**"கனியிருப்பக்காய் கவர்ந்த கள்வனேனே"**
**"முயல்விட்டுக் காக்கைப்பின் போனவாறே"**
**"விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே"**
**"கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே"**
**"பாழுக்கே நீர் இறைத்தேன்"**
**"மோத்தையைக் கண்ட காக்கைபோல்"**
**"ஆற்றிற் கெடுத்துக் குளத்தில்தேடிய"**
**"நரிவரால் கவ்வச்சென்று நற்றசை இழந்த தொத்த"**
**'வெங்கதிர் கண்டவப்புல் பனிகெடு மாறதுபோல்'**

ஒவ்வொரு பதிகத்தின் கடைசிப்பாட்டில் இராவணனைப்பற்றிப் பாடுகிருர். ஆணவத்தால் செய்த குற்றத்தை உணர்ந்தால் இறைவன் தண்டித்துப் பின் மன்னிப்பார் என்பதை முதல் பதிகத்தின் இறுதிச் செய்யுளில் "ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ் அடர்த்திட்டருள் செய்த அது கருதாய்" என்று கூறியிருப்பதால் அறியலாம்.

நீற்றறையிலிட்டபோது பாடிய பாசுரத்தில் "மாசில்வீணை" காதுக்கினிமையையும், "மாலைமதியம்" கண்ணுக் கினிமையையும், "வீசுதென்றல்" மூக்கிற்கினிமையையும், "வீங்கிளவேனில்" வாய்க்கினிமையையும், "மூசுவண்டறைப் பொய்கை" மெய்க்கினிமையையும், இவ்வைம்புல நுகர்ச்சி அத்தனையும் "ஈசன் எந்தை இணையடி நீழலில்" காணலாம் என்று ஆழ்ந்த கருத்துப்பட அமைத்திருப்பது போற்றத்தக்கது. "சொற்குறுதிக்கு அப்பர் எனச்சொல்" என்ற ஆன்ருேர் வாக்கிற்கு முழுவதும் பொருந்துகின்ற பெருமை அவருக்கேயுரியது. அத்தகைய பெரியாரின் அருள் மொழிகளைத் தலைமேற் கொண்டு அவர் வழி நின்று உய்வோமாக.

ஆண்டவனைவிட்டு வெகு தூரத்திலிருப்பதாக நான் எண்ணுகிறேன். அவ்வெண்ணம் என்னை வாட்டுகிறது. என்னுடைய மாருக் கொடிய எண்ணங்களே அவ்வாறு என்னை நினைக்கச் செய்கிறது

—மகாத்மா காந்தி

# திருமங்கையாழ்வார்



வாழிபரகாலன் வாழிகலிகன்றி
வாழிகுறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கை
தூயோன் சுடர்மான வேல். [யர்கோன்

—உடையவர்.

எம்பெருமானை நேரிற்கண்டு, அவனுடைய ஸ்வரூபரூபகுண சேஷ்டிதங்களை அநுபவித்தவர்கள் ஆழ்வார்கள்; பக்திப் பெருவெள்ளத்தில் படிந்தவர்கள்; பேரானந்தப் பெருங்கடலில் திளைத்தவர்கள். அவர்கள் திருவாய் மலர்ந்தருளியவை நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள். அவர்களுடைய வரலாறுகளை அறிவதற்கு, அவர்களுடைய பாடல்களிலுள்ள அகச்சான்றுகள், திவ்யசூரி சரிதம், குருபரம்பரைப் பிரபாவம், உபதேசரத்தின மாலை, தேசிகப் பிரபந்தம், பிரபன்னாமிருதம், பெரிய திருமுடியடைவு, கோயிலொழுகு என்ற நூல்களும், பல தனியன்கள் முதலியனவும் மூலாதாரங்களாக உள்ளன. அவைகளில் பற்பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுவாக நோக்குமிடத்து ஆழ்வார்களின் வரலாற்றின் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒற்றுமை காணப்படுகிறது என்றே கூறலாம்.

ஆழ்வார்கள் பன்னிருவரில் அதிகமான பாசுரங்களை அருளியவர் திருமங்கையாழ்வார். நாலாயிரத்தில் மூன்றில் ஒரு பங்குக்குமேலாக அவருடைய பாடல்களே. 1361 பாக்களைப் பாடியுள்ளார். அதிகமான திவ்விய தேசங்களைப் பாடியவரும் அவரே. இவர் பாடல் தொகுதிக்கு 'பெரிய திருமொழி' என்று பெயர். பாடல் வகை கீழ்வருமாறு:—

| | |
|---|---|
| பெரிய திருமொழி | 1084 |
| திருக்குறுந்தாண்டகம் | 20 |
| திருநெடுந்தாண்டகம் | 30 |
| திருவெழு கூற்றிருக்கை | 1 |
| சிறியதிருமடல் கண்ணி | 77½ |
| பெரிய திருமடல் கண்ணி | 148½ |
| | 1361 |

நம்மாழ்வார் பாடியுள்ள நான்கு பாடற்றொகையாகிய நான்மறைக்கு இவர் பாடியுள்ளவை ஆறங்கம்போலே ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நாற்கவிகளாலும் அருளிச் செய்தனர் என்பர்.

இவ்வாழ்வார் சோழவள நாட்டிலே திருவாலி திருநகரிக்கு அண்மையிலுள்ள திருக்குறையலூரிலே கள்ளர் மரபிலே கலி 398 (B. C. 2714) நள ஆண்டு கார்த்திகை பௌர்ணமி வியாழக்கிழமை கிருத்திகை நட்சத்திரத்தன்று அவதாரம் செய்தார் என்று சொல்லப்படுகிறது. இவர் பாடல்களில் தம்மைப்பற்றிப் பின்வருமாறு கூறிக்கொள்கிறார்:—

**'திண்ணார் மாடங்கள் சூழ்திரு மங்கையர்கோன் கலியன்'**

**'மாடமாளிகை சூழ்திரு மங்கைமன்னன்'**

'மன்னுமாமாட மங்கையர்தலைவன் மானவேல் கலியன்'
'கல்லின்மன்னு மதிள் மங்கையர்கோன்'
'கன்னிநன் மாமதிள் மங்கைவேந்தன்'
'வானும் மதில்சூழ் வயல்மங்கையர்கோன்'
'கார்மன்னு நீள்வயல் மங்கையர்கோன்'
'வண்டறை சோலைமங்கையர் தலைவன்'
'மன்றில் மலிபுகழ் மங்கைகலிகன்றி'
'வண்களக நிலவெறிக்கும்வயல் மங்கை நகராளன்'

இந்தக் கூற்றுக்களால் இவர் பிறந்த ஊரின் பெயர் திருமங்கை என்றும், அதற்கு அவர் தலைவர் என்றும் தோன்றுகிறது. இவருடைய மனைவியின் பெயர் 'திருமங்கை' என்று குருபரம்பரைப் பிரபாவத்தில் கூறப் படுகிறது. இவர் அவதரித்த குறவலூர் என்று வழங்கும் திருக்குறையலூரில் அண் மையில் ஆலயத்திருப்பணி நடந்து முடிந் துள்ளது.

ஆழ்வார்களின் காலத்தை கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்டே பழைய நூல்கள் கூறுகின்றன. இவர்கள் பாடல்களில் வரும் மன்னர்களைப்பற்றிய குறிப்புக்கள், கல்வெட் டுக்கள், செய்யுள் நடை, இலக்கணச் சிறப்புக் கள் முதலிய பல ஆதாரங்களைக்கொண்டு ஆராய்ந்த பேரறிஞர்கள், ஆழ்வார்கள் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலிருந்து பத்தாம் நூற்றுண்டுக்குள் இருக்கலாம் என்று கருது கின்றனர். திருமங்கையாழ்வார் திரு அட்ட புயகரப் பாசுரத்தில் 'மன்னவன் தொண்டை யர்கோன் வணங்கும் நீள்முடி மாலை வயிர மேகன்' என்று ஒரு அரசன் பேரைக் குறிக் கிருர். காஞ்சிபுரம் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் பல்லவமன்னனின் வெற்றிச்சிறப் பைப் பல படியாகப் புகழ்ந்துள்ளார். 'தடமா மதிள் சூழ்ந்தழகாயகச்சி, தேர்மன்னு தென் னவனை முனையில் செருவில் திறல் வாட்டிய திண்சிலையோன், பார்மன்னு பல்லவர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரா மதுவே' என்று ஒரு பாடலில் கூறுகிருர். 'நந்தி பணி செய்த' என்று ஒரு பாடலில் நந்தி வர்ம பல்லவனைக் குறிக்கிருர். இவனுடைய தம்பி தந்தி வர்மபல்லவன் காலமாகிய கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் இவ்வாழ்வார் வாழ்ந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எண்ணுகின்றனர்.

ஆலி நாட்டிலே தாமரைப் பொய்கை யொன்றில் நீராட அரமகளிர் வந்தனர். அவர் களில் திருமாமகள் என்பவள் குமுதமலர் எடுக்கப் பிறபடுகையால் மற்றவர் விட்டுச் சென்றனர். தனித்து நின்ற இப்பெண்ணைக் கண்ட திருநாங்கூர் மருத்துவன் ஒருவன் அழைத்துச் சென்று 'குமுதவல்லியார்' என்று பெயரிட்டு வளர்த்து வந்தனன். இவ ளுடைய அழகைப்பற்றிக் கேள்விப்பட்ட திரு மங்கை மன்னர் இவளை மணக்க விரும்பினர். வளர்ப்புத் தந்தை இசைந்தனர். ஆனல் அப்பெண் பஞ்சசம்ஸ்காரமுள்ளவர்க்கன்றி மற்றொருவருக்கும் தம்மைப் பேச லொட் டாமை தெரிவித்தார். ஆலி நாடரும் திரு நறையூர் சென்று எம்பெருமான் திருமுன்பு 'தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்ச் சக் கரத்தின் கோயிற் பொறியாலே' திரு இலச் சினைபெற்று, கேசவாதி துவாதச ஊர்த்துவ புண்டரங்களுடன் வந்தார். அம்மையார், ஒரு ஆண்டுக்கு நாள்தோறும் 1008 ஸ்ரீவைண வர்களுக்கு அமுதுசெய்விக்க வேண்டு மென்று சொல்ல அதற்கும் ஆழ்வார் இசைந் தார். இருவருக்கும் திருமணம் நடந்தது.

அமுது செய்விப்பதில் தம் பொருளை இழந்தார். பகுதிப்பணம் கட்ட முடியாததால் சோழமன்னன் இவரைச் சிறைப்படுத்தினன். எம்பெருமான் கனவில் 'காஞ்சிபுரம் வந்தால் பொருள் தருகிறேம்' என்று சாதிக்க, அரசர் ஏவலாளருடன் காஞ்சிபுரம் சென்று குறிப் பிட்ட இடத்தில் பொருளைக் கண்டெடுத்து, பகுதிப் பணம் கட்டியதுபோக மிகுதியை அடியவர்க்கமுதளித்தலில் செலவு செய்து வந்தார். எம்பெருமான் தேவியுடன் மண வாளனக வந்து ஆழ்வார் முன் தோன் றினர். ஆழ்வார் அவர்களைச் சூழ்ந்து ஆபரணங்களையெல்லாம் கைப்பற்றி அறு காழியையும் பற்களால் கடித்துக் கழற்றி விட்டார். எம்பெருமான் 'நம் கலியனே' என் றருளிச் செய்தார். அணிகலன்களைச் சுமை யாகக்கட்டி எடுக்கப்பார்க்க, தூக்கமுடியாமல் இருந்தது. ஆழ்வார் எம்பெருமானை நோக்கி 'நீ மந்திரவாதம் பண்ணினய்' என்று நெருக் கினர். அம்மந்திரத்தைத் தாம் சொல்லிக் கொடுப்பதாகச் சொல்லி ஆழ்வார் திருச்

செவியில் அஷ்டாட்சரமான பெரிய திருமந்திரத்தை இறைவன் உபதேசித்தருளினர். ஆழ்வாரும், "வாடினேன்வாடி" என்று தொடங்கும் முதற்பத்தைப்பாடி "பெற்றதாயினும் ஆயின செய்யும் நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" என அருளினர். எம்பெருமான் பிராட்டியோடும் திருக்கோலக் காட்சியளித்து மறைந்தனர். திருமங்கைமன்னர்; பெரிய திருமொழி முதலிய ஆறு திவ்வியப் பிரபந்தங்களை அருளிச்செய்தார். திவ்விய தேசங்கள் பலவற்றைச் சேவித்து சீகாழிக்கு வந்து சம்பந்தரைச் சந்தித்தார். "ஒரு குறளாயிரு நிலம்" என்ற திருமொழியருளி "ஆலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார்சீயம் கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன்" என்று தம் பெருமைதோன்றக் கூற, சம்பந்தரும் "நாலு கவிப் பெருமாள் என்ற விருது உமக்குச் செல்லும்" என்று கூறினர். சம்பந்தரிடம் ஆழ்வார் ஒரு வேலைப் பெற்றார் என்றும் கூறுவர். தம்மை, "வேல்வலவன்," வேல்வலவன்கலிகன்றி," "வேல்கலியன்," "காலவேல் பரகாலன்," "வேல்கைக்கலியன்" என்று பல இடங்களில் கூறிக்கொள்கிறார். எப்போதும் கையிலே வேல் வைத்திருந்தார் போலும்.

பின்னர், ஆழ்வார் திருவரங்கம் பெரிய கோயில் விமானம் மண்டபம் கோபுரம் முதலியவற்றைத் திருப்பணி செய்யத் திருவுளம் கொண்டார். நாகப்பட்டினத்திலிருந்த பொன்னாலான புத்த விக்கிரகத்தை ஒரு சூழ்ச்சியால் புத்த கோயிலுக்குட் செல்லும் வழியை ஒருவன்மூலம் உணர்ந்து அதை எடுத்து வந்து திருவரங்கம் திருமதிள் திருப்பணிக்குப் பயன்படுத்தினர். அவர் எடுத்து வருவதற்குள் விடியற்காலம் வந்தமையின் ஓருரின் வயலில் விக்கிரகத்தைப் புதைத்து மறைத்து வைத்திருந்து, மறு இரவில் மறுபடியும் எடுத்து வந்தார். அப்படி அவர் மறைத்து வைத்திருந்த இடம் பொருள் வைத்தசேரி என்பது இப்போது 'புரவாச்சேரி' என்று வழங்குகிறது. ஆழ்வார் இன்னும் திருவரங்கத்தில் திருமண்டபம் முதலிய திருப்பணிகள் செய்து உலகத்தை வாழ்வித்தருளினர்.

இவ்வாழ்வாருக்குப் பல திருநாமங்கள் உண்டு நாலுகவிப்பெருமான், கவிலோக திவாகரன், சதுஷ்கவி சிகாமணி, ஷட்பிரபந்த கவி முதலியன. பாசுரங்களில் பல இடங்களில் தம்மை, "மங்கை வேந்தன் கலியன்," "பரகாலன் கலியன்," "ஆலிநாடன்," "ஆலி மன்னருள்மாரி" என்று கூறிக்கொள்கிறார். தம்முடைய வீரத்தையும், தமிழ்ப் புலமையையும், கொடை வண்மையையும், "கடமா களியானை வல்லான்", "இருந்தமிழ் நூற்புலவன்", "காரார் புயல் கைக்கலியன்றி" என்று விதந்தோதி யருளுகிறார்.

பாசுரங்களில் தாம் இளமையில் சிற்றின்பத்தில் எளியராயிருந்ததையும், புத்தர் சமணர் இராவணன் இவர்களைப்பற்றியும், பிரகலாதன், கஜேந்திரன் இவர்களுக்கு எம்பெருமான் சேவை சாதித்த பெருமையையும், மோகினி அவதாரம், மற்ற தசாவதாரங்களின் மகிமையையும் பல இடங்களில் சிறப்பாகச் சொல்லி யிருக்கிறார். வண்டு, நாரை இவைகளைத் தூதாக வைத்துப் பாடுகிறார். காக்கை, குயில், கிளி, பல்லி, செம்போத்து, கோழி முதலியவைகளை விளித்து இறைவனைப் பாடச் சொல்கிறார். அகப்பொருட்டுறையில் பல பாடல்களை அருளி யுள்ளார். எடுத்துக் காட்டாக,

"செங்கமல மடநாரா யின்றே சென்று
திருக்கண்ண புரம்புக் கென்செங்கண் மாலுக்கு
என்காத லென்துணைவர்க் குரைத்தீ யாகில்
இதுவொப்ப தெமக்கின்ப மில்லைநாளும்
பைங்கான மீதெல்லா முனதே யாகப்
பழனமீன் கவர்த்துண்ணத் தருவன்தந்தால்
இங்கேவந் தினிதிருந்துன் பெடையும் நீயும்
இருநிலத்திலினிதின்ப மெய்தலாமே"

என்பதைப் படித்தின்புறற் பாலது.

இறைவனை நேரில் அனுபவித்து அவன் குணங்களைச் சொல்லுகிற வேதம் தமிழில்தான் உள்ளது என்று காலஞ்சென்ற பேரறிஞர் கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆழ்வார்கள் நாயன்மார்கள் இவர்கள் பாடல்களில் கருத்தொற்றுமைகள் பலவற்றைக் காணலாம். ஆழ்வார் கண், செவி, வாய், கை, உள்ளம் இவை எம்பெருமானை வணங்குவதற்கே என்று கூறியிருப்பது, அப்பர் "தலையே நீ வணங்காய்"

*என்று தொடங்கும் திருவங்கமாலையை நினை ஆட்டுகின்றது. இன்னும்,*

"புலன்கள் நைய மெய்யில் மூத்துப்
போந்திருந்துள்ள மெள்கி
கலங்க ஐக்கள் போதவுந்திக்
கண்ட பிதற்றுமுன்
அலங்கலாய தண்டுழாய் கொண்டாயிர
நாமஞ் சொல்லி
வலங்கொள் தொண்டர் பாடியாடும்
வதரிவணங்குதுமே"

*என்ற ஆழ்வாருடைய பாசுரத்தையும்,*

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழை யென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே"

*என்ற திருஞான சம்பந்தர் பாடலையும் கூர்ந்து நோக்கி இன்புற வேண்டியவை. மேலும்,*

"ஆசை வழுவாதேத்து மெமக்கிங்
கிழுக்காய்த்து அடியோர்க்குத்
தேசமறிய வுமக்கே யாளாய்த்
திரிகின் றேமுக்கு
காசிநெளியில் திகழும்
வண்ணம்காட்டீர் எம்பெருமான்
வாசிவல்லீர் இந்தளூரீர்
வாழ்ந்தே போம்நீரே"

*என்ற ஆழ்வார் பாசுரத்திலும்,*

"மீளாஅடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத்தீப்போல் உள்ளே கனன்று
முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க
ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே"

*என்ற சுந்தரர் பாடலிலும் உள்ள கருத் தொற்றுமைகளைக் கண்டு மகிழும் பெற்றியது. இன்னும் இவைபோல் பலவுள.*

*திருமங்கையாழ்வாரின் பாசுரங்கள் தேனினும், கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனிப்பவை; மனத்தை உருக்கவல்ல மாண்புடையவை; இறைவன் குணங்களை எழில் பெறப் புகழ்பவை; பக்திப் பெருவெள்ளத்தில் திளைவிக்கச் செய்பவை; பேரானந்தப் பெருங் கடலில் ஆழ்விக்கச் செய்பவை. பிரபந்தம் அமைந்துள்ள முறையில் பெரிய திருமொழி முதல் பெரிய திருமடல் ஈறாக உள்ளவை நாராயணாய என்ற பகுதியின் விரிவென்று ஆன்றோர் கூறுவர். இவ்வாழ்வாருடைய பாசுரங்களை ஓதியுணர்ந்து எமபெருமான் திருவருள் பெற முயற்சிப்பது மக்களின் தலையாய கடமை.*

"கற்றார் பற்று அறுக்கும்
பிறவிப் பெருங்கடலே
பற்று வந்து அடியேன்
பிறந்தேன் பிறந்தபின்னை
வற்றா நீர்வயல்சூழ்
வயலாலி அம்மானைப்
பெற்றேன் பெற்றதும்
பிறவாமை பெற்றேனே"

"பொய்வண்ணம் மனத்துஅகற்றிப்
புலன் ஐந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை
மைவண்ணம் கருமுகில்போல்
திகழ்வண்ணம் மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனையான்
கண்டதுதென் அரங்கத்தே"

*— திருமங்கை ஆழ்வார்*


# திலகவதியார் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம்

7-10-58 காலை 10-30 மணிக்கு தஞ்சை மாவட்டம் நன்னிலம் தாலுக்கா திருப்புகலூர் ஸ்ரீ அக்கினீசுவர சுவாமி ஆலயத்தில் **திலகவதியார் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம்,** சென்னை மாநில உள்விவகார, அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் கனம் M. பக்தவத்சலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சித்த வைத்தியக் கொடியை கடலூர் மாவட்ட மாஜிஸ்டிரேட் திரு. V. பலராமையா அவர்கள் ஏற்றி வைத்தார்கள். அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு. A. உத்தண்டராமன் I.A.S. அவர்கள் தலைமை வகித்துப் பேசியதின் சுருக்கம் :—தமிழ்நாட்டில் பண்டுதொட்டு மக்களுக்குத் துணை புரிந்துவரும் வைத்திய முறைகளுள் சித்தவைத்தியமே சிறந்ததாகும். வைத்திய முறைகளுள் அதிக செலவில்லாமலும், எங்கும் எளிதில் கிடைக்கக்கூடிய மூலிகைகள் ரசம், கந்தகம், உப்பு, சுண்ணும்பு முதலிய பொருள்களையும் பயன்படுத்தி மக்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் மருத்துவம் செய்ய சித்த வைத்திய முறையே கிராமங்களுக்குத் தகுந்தது. சித்தர்களுள் ஒருவரான திருமூலர், உயிர் வளர்ச்சிக்கு உடல் வளர்ச்சி இன்றியமையாதது என்பதை,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே



அறநிலைய அமைச்சர் திலகவதியார் சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையத்தைத் திறந்துவைத்தல்.



அமைச்சர், ஆணையர், தருமகருத்தர் முதலியோர் ஆராய்ச்சி நிலையத்திற்கு முன்பாக

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண் டான்என்**
**றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே**

திருமந்திரப் பாசுரங்களில் விளக்கியுள்ளார். அமைச்சரவர்களால் சென்ற 1-8-58-ல் திருநெல்வேலி மாவட்டம் திருக்குற்றாலத்துக் கருகிலுள்ள பண்பொழி திருமலை முத்துக் குமரசாமி திருக்கோயில் ஆதரவில் ஒரு சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்று திறக்கப் பட்டுள்ளது. அத்துடன் ஒரு வைத்திய சாலையும் இணைக்கப்பெற்று ஆயிரக்கணக் கான மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். கடலூர் மாவட்ட மாஜிஸ்டிரேட் திரு. V. பலராமையா அவர்களின் பெருமுயற்சியால்தான் இந்த இரண்டு சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையங்களும் ஆரம்பிக்கப் பெற்றுள்ளன. சுகாதார இலாகா உதவி டைரக்டர் திரு. W. V. பெருமாள் முதலியார் அவர்களும் இந்த ஆராய்ச்சி நிலையங்களுக்குப் பேருதவி செய்து வருகிறார்கள். இந்த சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்பெறும் மருந்துகள் நோயைத் தடுக்கவும், நோயைப் பரவவிடாமல் ஒடுக்கவும், சொற்பச் செலவிலேயே செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். ஐந்து ரூபாய் செலவில் தயாரித்த மருந்தைக் கொண்டு சுமார் 1000 பேர்களுடைய கிராமத்தில் வைசூரி, வாந்திபேதி முதலிய தொற்று நோய்களைத் தடுக்கலாம் என்று கூறுகிறார்கள். குளிர்சுரம், தலைவலி, புகைச்சல் முதலிய சாதாரண நோய்களுக்கு ஒரு கிராமத்திற்கு ஓர் ஆண்டுக்கு உபயோகப் படக்கூடிய சுமார் 16 மருந்துகளை 16 ரூபாய் செலவில் தயாரித்து ஆலயங்களின் மூலமாகப் பயன்படுத்தலாம் என்கிறார்கள். இந்த ஆராய்ச்சி நிலையங்கள் மூலமாக இத்தகைய மருந்துகளைத் தயாரித்து எல்லா கிராமங்களுக்கும் ஆலயங்கள் மூலமாக வினியோகிக்கலாம். கொரடாச்சேரி சித்தாந்த நிலைய அதிபர் ஸ்ரீவாலையானந்த

சுவாமிகள் என்ற சச்சிதானந்த சுவாமிகள் சைவ சித்தாந்தத்தில் மாத்திரமின்றி சித்த வைத்தியத்திலும் பலகாலம் ஆராய்ச்சி செய்து மூலிகைகள், விஷம், இரணம் என்ற பல பகுதிகளாக நூல்கள் வெளியிடும் வகையில் எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றை இந்த ஆராய்ச்சி நிலையத்தினின்றும் வெளியிட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையத்திற்குப் பெரிதும் பயன்படக் கூடிய நுண்ணிய தராசுகளையும் கொடுத்து உதவியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் சித்த வைத்திய முறையில் தேர்ச்சி பெற்ற வைத்திய பூபதி டாக்டர் கண்ணுச்சாமிப் பிள்ளை அவர்கள் இன்று இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு, கனம் அமைச்சர் அவர்கள், 'சித்த வைத்தியக் கலை வள்ளல்' என்ற பட்டம் வழங்குவார்கள். இந்த வைத்தியசாலையின் ஆராய்ச்சி நிலையமும் **திலகவதியார்** பேரால் அவர் தம்பியான அப்பர்சுவாமிகள் முத்தியடைந்த திருப்புகலூரில் திறக்கப் பெறுவது மிகவும் பொருத்தம். அப்பர் சுவாமிகள் பிறமதம் புகுந்து இறைவன் அருளால் சூலைநோய் வாய்ப்பட்டு ஆற்றொணுத் துன்பம் அடைந்தபோது அவர் தமக்கையாரான திலகவதியார் இறைவனுடைய திருமுன்பு விபூதி கொடுத்து தீராநோய் தீர்த்தருளவல்ல ஆண்டவன் கருணையால் சூலைநோய் தீர்க்கப் பெற்று நமது சமயகுரவருள் ஒருவராகச் சிறந்து விளங்குகிறார். திரு. பலராமையா அவர்கள் ஏற்றி வைத்த வைத்தியக் கொடியில் அ, உ, என்ற இரண்டு எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. அ இறைவனையும், உ சத்தியையும் குறிக்கும் என்பர். ஓம் என்ற பிரணவ மந்திரத்திலும் அ, உ என்றவை அடங்கி யிருக்கின்றன. சித்த வைத்தியத்தின் மூலப் பொருள்களான ரசமும், கந்தகமும் அம்மையப்பரையே குறிக்கும் என்கிறார்கள். உயிர்ப்பிணியைத் தீர்க்க அம்மையப்பர் அருள் இன்றியமையாதது போல உடற்பிணி நீக்க இந்த ரசகந்தகப் பொருள்கள் இன்றியமையாதவை. படமாடுங் கோயில்களாகிய நம்முடைய ஆலயங்களில்



அறநிலைய அமைச்சர், ஆணையர் இருவரும் பள்ளி மாணவர்கட்கு கோயில் பிரசாதத்தை நடுப்பகல் உணவாகப் படைத்து ஆரம்பித்துவைக்கிறார்கள்.

நடமாடுங் கோயில்களாகிய உயிர்களுக்குச் செய்யும் தொண்டுதான் உண்மையான இறைபணியென்று நம்முன்னோர்கள் மக்களுக்கு வேண்டிய நிலையங்களையும் திருக்கோயில்களிலேயே அமைத்து வந்தனர். அமைச்சரவர்கள் வசதியுள்ள திருக்கோயில்கள் பால்பண்ணைகள் வைத்து நடத்த வேண்டும் என்றும், கோயில்களில் பிரசாதமாக உபயோகிக்கப்படும் உணவுப் பொருள்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு உபயோகிக்கப்படலாம் என்றும், அதுபோலவே சித்த வைத்தியசாலைகள் மூலம் படமாடும் கோயில்கள் நடமாடுங் கோயில்களுக்குத் துணை புரியலாம் என்றும் அங்கீகரித்துள்ளார்கள். அவர்களால் இந்த நிலையம் திறக்கப்படுவது மிகவும் பொருத்தமானது. இந்த ஆலய தருமகர்த்தர் குழுவினர் திரு. M. D. தியாகராஜ பிள்ளை M.L.A. அவர்களும், ஏனங்குடி இராதாகிருஷ்ண நாயுடு அவர்களும் இந்த தேவஸ்தான ஆதரவில் பல நல்ல காரியங்கள் செய்து வருகிறார்கள். நாம் இருக்கும் மண்டபம் அப்பர்சுவாமிகள் பெயரை உடையது. இவ்வூரில் அவதரித்த முருகநாயனார் பேரால் பசுமடமும் அமைச்சர் அவர்களால் ஏற்கனவே திறக்கப்பட்டிருக்கின்றன. இன்று **திலகவதியார்** பெயரால் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் அவர்களால் திறக்கப் பெறுகிறது. தருமகர்த்தர் குழுவினருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அமைச்சர் கனம் M. பக்தவத்சலம் அவர்கள் சித்த வைத்திய நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், மேல்நாட்டு வைத்திய முறைகள் நாளுக்கு நாள் ஆராய்ச்சியின் மூலம் அபிவிருத்தியடைவதுபோல் சித்த வைத்திய ஆராய்ச்சியும் அபிவிருத்தியடைய வேண்டிய அவசியத்தைப்பற்றியும், மருந்துகள் நல்ல முறையில் தயாரித்து எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில்வினியோகிக்கப்பட வேண்டிய அவசியத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். திரு. V. பலராமையா அவர்கள், சித்தவைத்தியக் கொடியிலுள்ள எழுத்துக்கள் ஓம் என்ற பிரணவத்தின் உட்பொருளை விளக்குவதாக அமைத்திருப்பதையும், அப்பும், உப்புமே எல்லா மருந்துகளுக்கும் அடிப்படைப் பொருள்கள் என்றும், சாதாரண மூலிகைகளினின்றும், மற்றும் எளிதில் கிடைக்கும் தாதுப் பொருள்களைக் கொண்டும் அரிய மருந்துகளைச் சித்தவைத்திய முறையில் தயாரிக்க முடியும் என்றும் விளக்கினார்கள். தஞ்சை சித்த வைத்திய பூபதி டாக்டர் கண்ணுச்சாமிப் பிள்ளையவர்களுக்கு கனம் அமைச்சரவர்கள் 'சித்த வைத்தியக் கலை வள்ளல்' என்ற பட்டம் வழங்கினார்கள். டாக்டர் கண்ணுச்சாமிப் பிள்ளையவர்கள், வள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் வலியுறுத்திய கருத்துக்களை விளக்கி, சித்த மருத்துவக் கலையை வளர்க்க அரசாங்கம் மாவட்டங்கள் தோறும் சித்த மருத்துவக் கலாசாலைகளும், ஆராய்ச்சி நிலையங்களும் நிறுவி பஞ்சாயத்துக்களெல்லாம் ஒரு சித்த வைத்தியசாலை அமைக்க வேண்டும் என்றும், இந்த சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக சித்த மருந்துகள் தயாரிக்கப்படும் பார்மசியும் நிறுவப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். டாக்டர் W. V. பெருமாள் முதலியார் அவர்கள் பண்பொழி என்ற ஊரில் நடைபெற்றுவரும் சித்த வைத்தியசாலையிலும் ஆராய்ச்சி நிலையத்திலும் செய்யப்படும் வேலைகளைப்பற்றி விளக்கினார்கள். சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்பெறும் மருந்துகளின் குணகுணங்களை ஆராய்வதற்குக் குறைந்தது 50 படுக்கைகளாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். தாம் மேல் நாட்டு முறைகளிலும் சித்த வைத்திய முறையிலும் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் சித்த வைத்திய முறையே தம் அனுபவத்தில் சிறந்ததாகக் கண்டதாகக் கூறினார்கள். தருமகர்த்தக் குழுத்தலைவர் திரு. M. D. தியாகராஜ பிள்ளை அவர்கள் நன்றி கூறினார்கள். வசதியுள்ள கோயில்களின் மூலமாகவோ அறநிலையப் பாதுகாப்புத் துறை மூலமாகவோ பிரசார மோட்டார் வண்டிகள் ஏற்பாடு செய்து பிரசாரகர்கள், சித்த வைத்தியர்கள், சித்த வைத்திய மருந்துகள் எல்லாக் கிராமங்களுக்கும் பயன்படக் கூடியவகையில் உபயோகிக்கலாம் என்ற ஆலோசனையும் கூறினார்கள்.

# நவராத்திரி விழா

'கன்னிமதியின் வரையுயிர்த்த
கன்னிமகிழப் பேரன்பான்
மன்னு நவராத்திரி பூசை
மரபினியற்று முறைமையோர்
நன்னருலகம் பணிகேட்ப
நவைதீர் செல்வத்திடைமூழ்கி
முன்னுங்கதி யினினிதுறீஇ
முடிவிலின்பம் நுகர்வாரால்'

—பேரூர்ப்புராணம்.

'சத்தியாய் விந்துவாய் மனோன்மணியாய்
தயங்கிய மகேசையாய் உமையாய்
நித்திலவடம் தாழ்முகிழ்முலைத் திருவாய்
நெடும்புகழ்வாணியாய் வேருய்
எத்திறம் இறைவன் நின்றனன் அவனுக்கு
இயைதர அத்திறம்நின்று
மெத்திய உயிரின்மல இருள்கெடுத்துவிளங்கு
பூரணியை ஏத்தெடுப்பாம்'

—விநாயகர் புராணம்

சூரியன் கன்னிராசியில் செல்லும்போது கார்காலம் ஆரம்பமாகிறது. இக்காலத்தில் பேதி முதலிய தொற்று நோய்கள் தோன்றும். இதைத் தடுக்க உடலையும் உறைவிடங்களையும் சுத்தமாக வைத்துக்கொண்டு விரதமும் அனுஷ்டித்தால் நோய்களைத் தவிர்ப்பதுடன் உடலும் உள்ளமும் இன்ப நிலையடையும். சத்தி சொரூபமாகிய தேவியை ஒன்பது ராத்திரிகள் ஆசார அநுட்டானத்துடன் பூசிப்பதே நவராத்திரி விழா என வழங்குகிறது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்ற அடிப்படைக் கொள்கையை எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. அப்பரம்பொருள் ஆணுமல்ல பெண்ணுமல்ல. அறிவு ஆற்றல் என்ற இரு தத்துவங்களையும் அப்பனென்றும் அம்மை என்றும் உருவகித்தார்கள். இறைத் தத்துவத்தை அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது, தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்டகோடியெல்லாம் தங்கும்படிக்கிச்சை வைத்து உயிர்க்குயிராய்த் தழைத்தது, சமயகோடிகள் எல்லாம் தம்தெய்வம் எம்தெய்வம் என்று எதிர்வழக்கிட நின்றது, அறிவினுக்கறிவாகி ஆனந்த மயமான ஆதி, நித்தம் நின்மல சகிதம் நிட்பிரபஞ்சப்பொருள், நிர்விடய சுத்தமான நிர்விகாரம், சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்று இலகு திவ்ய தேசோமயானந்தம், சிற்பர வெளிக்குள்வளர் தற்பர மதான பர தேவதை என்று ஆண் பெண் என்ற பேதமின்றி பொருள்படும் வகையில் தாயுமான சுவாமிகள் பாடியிருத்தல் காண்க.

கடவுளைத் தாயாக இரவிலும் தந்தையாகப் பகலிலும் வழிபடுவது மரபு. நம் முன்னோர் இறைவனை அம்மையப்பராக, உமாமகேசுரராக, இலட்சுமிநாராயணனாக, இராதாகிருஷ்ணனாக வழிபட்டார்கள். வீரம் (தியாகம்), செல்வம், கல்வி என வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களுக்கு அதிதேவதைகளாக மலைமகள், அலைமகள், கலைமகள் என உருவகித்து வழிபட்டார்கள். புரட்டாசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் மூன்று இரவுகள் உமாதேவியையும், அடுத்த மூன்று இரவுகள் இலட்சுமிதேவியையும் இறுதி மூன்று இரவுகள் சரஸ்வதி தேவியையும் வழிபட்டுத் திருவிழாக் கொண்டாடினார்கள். மகிஷாசுரனை சம்மாரஞ் செய்து தேவி 10-ஆம் நாளில் வெற்றித் திருவிழா கொண்டாடியதாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. இத்துடன் சேர்த்து தசராத்திரிகள் அல்லது தசரா என்றும் இவ்விழாவுக்குப் பெயருண்டு.

'அறிவினுலாகுவதுண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்ருக்கடை'

என்ற வள்ளுவர் வாக்கின்படி அறிவுபடைத்த மக்கள் எல்லா ஜீவராசிகளுடனும் அன்பொடும் அருளொடும் வாழவேண்டும். இதற்குத் தியாகமும் வீரமும் அவசியம். அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல் போன்ற அசுரத்தன்மைகளை அழித்து அன்பு நாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மை ஈகை முதலிய நற்பண்புகளை வளர்க்கவேண்டும். அசுர குணங்களின்வடிவமே மகிஷமாகவும், வீரமும் அருளுமேதேவியாகவும் உருவகிக்கப்பட்டன.

இவ்வுலகில் நல்ல வண்ணம் வாழப் பொருள் இன்றியமையாதது. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை என்றார் வள்ளுவர். அம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய அருளைப்பெறுவதற்கும் பொருள் அவசியம். இறைவனையே 'திருவே என் செல்வமே' 'ஒண்பொருளுநீ' 'இப்பொன்நீ' 'இம்மணிநீ' 'ஏரி நிறைந்தன்ன செல்வன்' என்றார் அப்பர்சுவாமிகள். செல்வத்துக்கதிபதியாக நம் முன்னோர் திருமகளைக் கொண்டார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக கல்வி அறிவு ஒழுக்கமே மக்களுக்கு மிக அவசியம். நன்னெறியில் பொருளீட்டவும், ஈட்டிய பொருளை நன்கு பயன்படுத்தவும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அன்பொடும் அருளொடும் எல்லா உயிர்களிடமும் கருணைகாட்டி உயிருக்கு உறுதி தேடிக்கொள்ளவும் அறிவு வேண்டும். 'இன்மையுள் இன்மை அறிவின்மை'யாகையால் அறியாமையைப் போக்க கல்வி அவசியம். ஆதலாலன்றோ கலைமகளே கண்கண்ட தெய்வமென்றார் குமரகுருபரர்.

பச்சையல்லது நீலநிறம் உடையவள் நீலாயதாக்ஷி என்ற உமாதேவியார். இது வளமையையும் செழிப்பையும் குறிக்கும். அருளும் அநுக்கிரகமும் கொடுக்கும் தேவி. சிவப்பு அல்லது பொன்நிறம் கொண்டவள் இலட்சுமி. 'திருக்கண்டேன். பொன்மேனி கண்டேன்' என்றார் பேயாழ்வார். சிவப்பு நிறம் செம்மை, தியாகம் அழகு முதலிய குணங்களைக் குறிக்கும். வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளின் வெண்மை நிறம் தூய்மை, வாய்மை, மனத்துக் கண்மாசின்மை, சென்றவிடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்க்கும் அறிவு முதலியவற்றைக் குறிக்கும்.

இல்லங்கள் தோறும் பொம்மைகள் கொலுவைப்பது கடவுளின் விசுவரூபத்தைக் குறிக்கும். இயற்கையே ஆதிசக்தியாகிய பரதேவதையின் தோற்றம். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்த சொரூபமே தேவியின் வடிவமென்பதைக் காட்டுகிறது.

'அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவர் எனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே'

(நம்மாழ்வார்)

சிவபெருமான், மகாவிஷ்ணு, கணபதி, குமாரக்கடவுள், பராசக்தி, என பலவகை உருவங்களில் இறைவனை வழிபட்டாலும் எல்லாம் அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் விளங்கும் பரம்பொருளாகிய ஒரே கடவுளையே சேரும் என்பது நமது சமயக் கோட்பாடு. ஒவ்வொரு உருவமும் இறைத் தத்துவங்களை உணர்த்தும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து நவராத்திரியில் நடக்கும் விழா சமயாதீதப் பழம்பொருளாக விளங்கும் கடவுளுக்கு நடக்கும் விழா எனத் தேர்தல் வேண்டும்.

'வேதமுதலாய் விரிந்தபன்னூல்களு
மோதியோதியு முரையாப் பொருடற்
போத மிறந்தோர் பொருந்துந் தேவதை
சீதை மலரடி சிந்தையில் வைப்பாம்'

கலைமகள் சீர்கேளாத செவி என்ன செவியே!
திருமகள் திருவுருவம் காணுதகண் ணென்ன
கண்ணே!
மலைமகள் மாண்பினை ஏத்தாத நாவென்ன நாவே!

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்.
—திருமூலர்.

# கோயில் திருப்பணிகள்

## 1956—57

| | | ரூ. |
|---|---|---|
| | **செங்கற்பட்டு ஜில்லா** | |
| 1. | மாசிலாமணீஸ்வரர், திருமுல்லைவாயில் | 5000 |
| 2. | தியாகராஜ சுவாமி, திருக்கச்சூர் | 4000 |
| 3. | யதோத்காரி, காஞ்சிபுரம் | 5000 |
| 4. | வேதபுரீஸ்வரர், திருவேற்காடு | 250 |
| | **தென்ஆற்காடு ஜில்லா** | |
| 5. | விருத்தகிரீஸ்வரர், விருத்தாசலம் | 15000 |
| 6. | அபிராமேஸ்வரர், திருவாமாத்தூர் | 8000 |
| 7. | மருதீஸ்வரர், திருயிடையார் | 5000 |
| 8. | கிருபாபுரீஸ்வரர், திருவெண்ணெய் நல்லூர் | 5000 |
| 9. | நேத்ரோத்தாரகேஸ்வரர், பனையபுரம் | 5000 |
| | **திருச்சிராப்பள்ளி ஜில்லா** | |
| 10. | கழுமலைநாத சுவாமி ஜயங்கொண்டான் | 6000 |
| 11. | நெடுங்குளநாதசுவாமி திருநெடுங்குளம் | 6000 |
| | **தஞ்சாவூர் ஜில்லா** | |
| 12. | மதுவனேஸ்வரர், நன்னிலம் | 6000 |
| 13. | புண்ணியநாதசுவாமி திருவிடைவாசல் | 15000 |
| 14. | கோதவல்லி ராமசுவாமி திருவள்ளியங்குடி | 6000 |
| 15. | பாலைவனநாதசுவாமி திருப்பாலைத்துறை | 6000 |
| 16. | சக்ரவாகேஸ்வரர், சக்ராபள்ளி | 6000 |
| 17. | பிலசவனேஸ்வரர், நல்லூர் | 2000 |
| 18. | வடமூலேஸ்வரர், திருவாலம்பொழில் | 3000 |
| 19. | சோமநாதசுவாமி, பழையாறை | 15000 |
| 20. | அக்னீஸ்வரர், திருக்காட்டுப்பள்ளி | 7000 |
| | **மதுரை ஜில்லா** | |
| 21. | பாலசுப்ரமண்யசுவாமி, பெரியகுளம் | 6000 |
| 22. | காளஹஸ்தீஸ்வரர், உத்தமபாளையம் | 6000 |
| | **இராமநாதபுரம் ஜில்லா** | |
| 23. | சிதம்பரேஸ்வரர், சாத்தூர் | 4500 |
| 24. | சௌமிய நாராயணபெருமாள் திருக்கோஷ்டியூர் | 7500 |
| | **திருநெல்வேலி ஜில்லா** | |
| 25. | கைலாசநாதசுவாமி, தென்திருப்பேறை | 6000 |
| 26. | மகரநெடுங் குழைகாதர் தென்திருப்பேறை | 6000 |
| 27. | கனகசபாபதி, கரிசூழ்ந்த மங்கலம் | 3750 |
| | **கோயம்பத்தூர் ஜில்லா** | |
| 28. | சங்கமேஸ்வரர் கோயில், பவானி | 15000 |
| 29. | கேரளம் | 6000 |
| 30. | கர்நாடகம் | 9000 |
| | மொத்தம் ரூ. | 2,00,000 |

## திருக்கண்ணபுரத்தில் நூல் நிலையத் திறப்பு விழா

7—10—58 அன்று பல ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஷ ஆலயத்தின் ஆதரவில் ஒரு நூல் நிலையத்தை கனம் மந்திரி எம். பக்தவத்ஸலம் அவர்கள் திறந்துவைத்து ஷ கட்டிடத்திற்கான அஸ்திவாரக்கல்லையும் நாட்டி, ஒவ்வொரு ஆலயமும் இதனை பின்பற்ற வேண்டுமென்றார்கள். கமிஷனர், உதவி கமிஷனர் முதலிய அதிகாரிகளும் உடன் விஜயம் செய்திருந்தனர்.

13 MAR 1959




காஞ்சி காமாட்சி அம்மை